ஆதி கிறிஸ்தவமும் சைவமும் கூறும்

ஒருவரே கடவுள்

(அவர் மனிதரை மீட்க வரலாற்றில் மனிதனாக வந்தார்)

M. கிறிஸ்டோபர்

ஆதி கிறிஸ்தவமும் சைவமும் கூறும்

ஒருவரே கடவுள்

(அவர் மனிதரை மீட்க வரலாற்றில் மனிதனாக வந்தார்)

M. கிறிஸ்டோபர்

பதிப்பாசிரியர்

Dr. ஜாஸ்மின் ஆசீர், M.A., Ph.D.

ஆதி கிறிஸ்தவமும் சைவமும் கூறும்

ஒருவரே கடவுள் (Tamil)

(அவர் மனிதரை மீட்க வரலாற்றில் மனிதனாக வந்தார்)

M. CHRISTOPHER, M.A. LL.B.
Benaiah, Kalluketty, Kuzhithurai - 629 163,
K.K.Dist., Tamil Nadu, India.
Ph.: 04651 - 260 404

First Edition - 2013

Copy Right	:	Gems, Kuzhithurai.
Typesetting & Design	:	Miss. D.A. Kanakalin Suji
Printing	:	South India Press, Marthandam.
No. of Pages	:	141

முகவுரை

அண்டசராசரங்களையும் படைத்தவர், மெய்ப்பொருளாம் இறைவன் ஒருவரே. சத்துருவாகிய சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட மனுக்குலம் தேவ மகிமையை இழந்துவிட்டது. மட்டுமல்லாமல், ஜனங்கள் சிருஷ்டிகராகிய கடவுளை மறந்து, சிருஷ்டிகள் அனைத்தையும் முப்பத்துமுக்கோடி தேவர்களாகத் தொழுகை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

காணக்கூடாத தேவன், தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டும், தாசர்களைக் கொண்டும் ஜனங்களுக்குப் போதித்து, தேவனைத் தொழுதுகொள்ள வேண்டிய முறைமைகளைக் குறித்தும், அவர்கள் நடக்க வேண்டிய வழிகளைக் குறித்தும் போதித்து, கட்டளைகள் கொடுத்தபோதிலும், ஜனங்கள் கீழ்ப்படியவில்லை. இவ்விதமாய்க் கெட்டுப்போன மனுமக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி, அவர்களைப் பாவக்கேட்டிலிருந்து மீட்டு, சரியான பாதையைக் காட்டி தம்மிடம் சேர்க்க இறைவனே சித்தம் கொண்டார்.

அதற்காகக் காணக்கூடாத கடவுள், முதலாம் நூற்றாண்டில், மேற்காசியாவிலுள்ள பாலஸ்தீனா தேசத்தில், எல்லா ஜனங்களாலும் காணக்கூடியவராய், மனுக்குலத்தின் இரட்சகராகவும், பாவக்கயத்தின் ஆழத்திலிருந்து அவர்களை உய்விப்பவராகவும் வெளிப்பட்டார். அவன் உய்வு ஆகிய இரட்சிப்பை நிறைவேற்றி, பரலோகம் செல்லும் பாதையைக் காட்டி, பாவநிவாரண பலியாகச் சிலுவையில் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, ஜனங்கள் சூழ்ந்து நிற்கையில் பரலோகம் சென்றார். இவ்வாறு, மெய்ப்பொருளாகிய ஒரே கடவுள் முதலாம் நூற்றாண்டில், தம்மை மனுக்குலத்துக்கு வெளிப்படுத்தினார்.

அதற்குப் பின்னும் சாத்தான் தன் பொய்யினால், அந்த ஒரே கடவுளை மறைப்பதற்கும், பல்வேறு போலிக் கடவுள்களை உருவாக்குவதற்கும், அவனால் வஞ்சிக்கப்பட்ட மக்களைக் கொண்டு, எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவர்களால் உண்டான சீர்கேடுகளையும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலை யாக்கும் என்பது இறைவார்த்தை. நம் தேச மக்கள் சரியான சத்தியத்தை அறியவும், அந்தச் சத்தியம் அவர்களை விடுதலையாக்கவும் வேண்டுமென்று எல்லாம் வல்ல தேவனை நோக்கி ஜெபிப்போம்.

இந்நூலில் கூறப்படும் சத்தியங்களைக் குறித்த ஆராய்ச்சிகள் பல தேவபிள்ளைகள் செய்திருப்பினும், முதலாம் நூற்றாண்டில் வெளிப்பட்ட திருமறைச் சத்தியங்கள், தோமா அப்போஸ்தலரால் நம் தேசத்துக்குக் கொண்டுவரப்பட்டு அது திருக்குறளிலும், அதைத் தொடர்ந்து சைவசித்தாந்த நூல்களிலும், சத்தியத்தின் தாக்கம் அந்நாட்களில் எழுந்த பல நூல்களிலும் இலக்கியங்களிலும் பரவியிருப்பதை, அறிஞர் பெருமக்களிடத்தும், கல்லூரிப் பேராசிரியர்கள் மத்தியிலும் நிரூபித்துக் காட்டிய பெருமை டாக்டர் M. தெய்வநாயகம் M.A., Ph.D. அவர்களையே சார்ந்ததாகும். Dr. தெய்வநாயகம், அவருடைய மகள், காலம் சென்ற Dr. D. தேவகலா ஆகியோருடைய ஆராய்ச்சிகளுக்காகவும், அவர்களுடைய ஆராய்ச்சி நூல்களுக்காகவும், அவர்கள் அளித்துள்ள ஆலோசனைகளுக்காகவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நன்றி கூறுகிறேன்.

மேலும் இப்பணிக்கு அவசியமான அரிய நூல்களைத் தேடிச் சேகரித்துத் தந்தும், ஜெபித்தும் உதவிய Pr. தேவசகாயம், Pr. ஷாஜி, மரு.வி.க. புஷ்பராசு, சகோ. சுஜின், எனது மகன் Adv. ஜெம் லிப்னி கிறிஸ்டோபர் மற்றும் சகோதரி ஜாயிஸ் ஆகியோருக்கும்; பொறுமையாய் ஜெபத்துடன், இந்நூலை வாசித்து விவாதித்து, ஆலோசனை வழங்கிய கனத்திற்குரிய போதகர்கள், மற்றும் Dr. ஏனோஸ் M.A., Ph.D., சகோதரர். டேவிட் M.A., M.Phil., M.Th., Dr. ஜாஸ்மின் ஆசீர் M.A., Ph.D. எனது சகோதரர் Dr. M. சுந்தர் இயேசுவடியான் ஆகியோருக்கும், இந்நூலை கருத்தாய் வாசித்து வாழ்த்துரையும் எழுதி சிறப்பித்த எனது சகோதரர் Dr. M. ஆர்தர் ஜாண் அவர்களுக்கும்; இந்நூலில் பிழை திருத்தி சிறப்பித்த திருமதி ராஜ புஷ்பம் M.A., M.Ed., சகோதரி பில்காள் ராபின்சன் M.A., M.Phil., B.Ed. ஆகியோருக்கும்; தகுந்த நேத்தில் type setting & design செய்து உதவிய Miss. D.A. கனகலின் சுஜி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்.

வாழ்த்துரை

நூலாசிரியர் திரு. M. கிறிஸ்டோபர் அவர்கள் எழுதியுள்ள சுமார் 19 நூல்களையும் படித்திருக்கிறேன். அவர்களது படைப்பான "ஒருவரே கடவுள்" என்ற இந்த நூல், இதற்கு முன் வெளிவந்துள்ள இதர நூல்களின் சாரராம்சமாக அமைந்துள்ளது என எண்ணுகிறேன். சுதந்தர இந்தியாவின் அரசியல் சட்டத்தின் சிற்பியான Dr. அம்பேத்கார் கூறியபடி, ஒரு காலத்தில் நமது இந்திய தேசமெங்கும் வாழ்ந்திருந்த மக்கள் பேசிவந்த மொழி தமிழ் மொழி என்பது, தமிழின் சிறப்பைக் காட்டுகிறது. ஆனால் தமிழனாகப் பிறந்த எனக்குத் தமிழ்மொழி கற்றுக்கொள்ளும் சூழல் ஏற்படாத காரணத்தால், செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பும், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் ஞானப் புதையல்களைக் குறித்த அறிவும் மறைந்திருந்து விட்டனவே என்ற வருத்தம், இந்நூல்களைப் படித்தபின் உண்டாயிற்று.

ஆனால், எனது மூத்த சகோதரராகிய நூலாசிரியரும் என்னைப் போன்ற சூழ்நிலையில் வளர்ந்திருந்தபோதிலும் கூட, அவரது கடுமையான முயற்சியாலும் கடவுளின் அருளாலும், தடங்கல்களை மேற்கொண்டு, தமிழ்மொழி கற்று, தமிழ் இலக்கியங்களுக்கு விளக்க உரை வழங்கக்கூடிய அளவுக்குத் தமிழ்அறிவு பெற்றுக்கொண்டுள்ளாரே என்ற மகிழ்ச்சியையும், மன நிறைவையும் நான் அடைகிறேன்.

இந்தியத் திருச்சபை சிந்திக்க வேண்டிய பல உண்மைகளை இந்நூல் விளக்கிச் செல்கின்றது. இயேசுநாதரின் பன்னிரு சீடர்களில் ஒருவரான அப்போஸ்தலர் தோமா, கி.பி. முதல் நூற்றாண்டிலேயே சுமந்துவந்த இயேசுவின் நற்செய்தியை அன்றைய இந்திய மக்களுக்குப் பகிர்ந்தளித்ததின் விளைவாக அனேக விசுவாசிகள் உருவானார்கள் என்பதும், அன்றைய சுவிசேஷ விரோதிகள் அவரைக் கொலைசெய்து தமிழகத்தின் தலைநகரான சென்னையில் அவர் அடக்கம் செய்யப் பட்டார் என்பதும் இந்தியத் திருச்சபை அறிந்த வரலாற்று உண்மைகள் ஆகும்.

ஆனால் அன்று உருவான திருச்சபை என்னவாயிற்று? தோமா அப்போஸ்தலரின் சுவிசேஷம், அன்றைய இந்திய மக்களின் கடவுள் வழிபாட்டை எவ்வாறு பாதித்தது? அவைகள் அன்றையத் தமிழ் மற்றும், சமஸ்கிருத இலக்கியங்களில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? இதுபோன்ற கேள்விகளுக்கான பதில்கள், இந்தியத் திருச்சபை சரியாகக் கண்டுகொள்ளவில்லை என்ற உண்மைகளை இந்நூல் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வுண்மைகளைத் தோண்டியெடுக்க முனைவர் திரு. தெய்வநாயகம் போன்ற தமிழ் அறிஞர்கள் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சித் தொண்டுகள் போற்றத்தக்கவையாகும்.

முதல் நூற்றாண்டில் இந்திய மண்ணில் உருவான ஆதி இந்தியக் கிறிஸ்தவம் பல நூற்றாண்டு காலமாகக் கடந்துவந்த பாதைகள் என்னென்ன? ஆதி இந்தியத் திருச்சபைக்கு, வரலாற்றில் இருண்ட காலம் ஒன்று ஏற்பட்டுள்ளதா? ஏற்பட்டதானால், அதற்குக் காரணங்கள் என்ன? அவ்விருள் அகற்றப்பட என்னென்ன செய்ய வேண்டும்? இக்கேள்விகளுக்கு இன்றைய இந்திய திருச்சபை விடை காண்பது அவசியம். திருக்குறள் உள்ளிட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்களில் புதைந்துகிடக்கின்ற ஆன்மீகக் கருத்துக்கள் விவிலிய உண்மைகளோடு எவ்வாறு ஒத்துப்போகின்றன? தோமா வழங்கிய நற்செய்தி, தமிழ் இலக்கியங்களில் புதைந்துகிடக்கின்றனவா? சைவ சித்தர்கள் ஆதி இந்திய கிறிஸ்தவ நெறிமுறைகளை எவ்வாறு கடைப்பிடித்திருந்தனர்? இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் காணும் வகையில், அனேகக் கருத்துகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

கிறிஸ்தவத் தமிழ் அறிஞர்கள் தீவிரமாய் இத்தகைய ஆராய்ச்சிகளில் ஈடுபடவும், ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களாக கருதப்படும் சைவர்கள் மறைக்கப்பட்ட சத்தியங்களை அறிந்து, விடுதலை பெறவும் எல்லாம் வல்ல தேவனை வேண்டிக்கொள்கிறேன். அதோடு இந்நூல் அனேகம்பேரை ஆராய்ச்சியிலும், இறைப்பணியிலும் உந்தித்தள்ளும் ஒரு கருவியாய் அமையட்டும் எனவும் நான் வாழ்த்துகிறேன்.

Dr. M. Arthur John,
Ex. Chairman.
Blessing Youth Mission.

12-06-2013.
Varanasi.

பொருளடக்கம்

1. கடவுளும் மனுக்குலமும் 1
(கிழக்கே இந்து தேசத்தில்)

2. மனுக்குலம் கிழக்கிலிருந்து மேற்கே 6

3. கடவுள் உலக வரலாற்றில் மனிதனானார் 9
(மேற்கே பாலஸ்தீனாவில்)

4. வரலாற்றில் வெளிப்பட்ட மீட்பின் சத்தியங்கள் 12

5. கடவுள் ஒருவரே அவர் மூவொரு கடவுள் 15
(திருமறை, திருக்குறள் சைவசித்தாந்தங்களில்)

6. மனுக்குலம் பாவத்தில் விழுந்துவிட்டது 17
(திருமறை, திருக்குறள், சைவசித்தாந்தங்களில்)

7. கெட்டுப்போன மனிதனை மீட்க கடவுள் மனிதரானார் 21
(திருமறை, திருக்குறள், சைவசித்தாந்தங்களில்)

8. மீட்கப்பட்டோர் இறைவனோடு இணைதல் 32
(திருமறை, திருக்குறள், சைவசித்தாந்தங்களில்)

9. மனிதரை மீட்க உலகில் மனிதனாக வந்த கடவுள் யார்...? 42

10. மனிதனாக உலகில் வந்த கடவுளின் சாட்சிகள் 47
(மேற்கில் கிறிஸ்தவம், கிழக்கில் சைவம்)

11. மனுக்குலத்தை மீட்க (உய்விக்க) வந்த கடவுள் 52
(இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்)

12. பரத்திலிருந்து உலகுக்கு வந்த சற்குரு 59
(இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்)

13. சாவை வென்று உயிர்த்தெழுந்தவர் கூடலில் சேர்ப்பவர் 62
(இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்)

14. இந்து தேசத்தில் சைவம் கடந்துவந்த பாதைகள் 70

15. சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் I & II 76
(பல தெய்வக்கொள்கை, விக்கிரக ஆராதனை)

16. சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் III 82
(வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள்)

17. சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் IV 86
(வீண் பூசைகள், சடங்காச்சாரங்கள்)

18. சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் V 91
(சாதி ஏற்றத்தாழ்வு, மூட நம்பிக்கை)

19. உண்மையான சைவர்கள் யார் 95

20. புராணக் கதைகளுக்குச் சித்தர்களின் எதிர்ப்பு ஏன்? 102

21. யாரை வணங்க வேண்டும்? 105
(சைவ சித்தரின் ஆய்வு)

22. சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகளை நீக்கிவிட்டால்? 116

23. இந்துக்களாகிய நாம் செய்ய வேண்டியவை 121

24. உய்ய (மீட்க) வந்த இறைவனின் இரண்டாம் வருகை 126

அதி : 1

கடவுளும், மனுக்குலமும்

(கிழக்கே இந்து தேசத்தில்)

கடவுள்

கடவுள் என்பதற்கு, கடந்து நிற்பவர் என்று பொருள் கூறுவர். மனிதனின் புத்திக்கும், சக்திக்கும், அறிவிற்கும் அப்பால் கடந்து நிற்பவர் ஒருவர் உண்டு என்றும், அவரே படைப்புக்குக் காரணர் என்றும் ஆத்திகர் கூறுவர். அப்படி ஒருவர் இல்லை என்றும், உலகம் தானாகவே தோன்றிற்றென்றும் நாத்திகர் கூறுகிறார்கள். கடவுள் உண்டு என்பவர்களுக்குள்ளும் பற்பல கேள்விகள் எழுகின்றன. கடவுள் எப்பேர்ப்பட்டவர்? அவருடைய குணாதிசயங்கள் என்ன? அவர் ஒருவரா அல்லது பலரா? மனிதன் கடவுளை ஏன் தேட வேண்டும்? இது போன்ற பல கேள்விகளுக்கு மாறுபட்டக் கருத்துகளும் கூறப்படுகின்றன. உலக வரலாற்றில் கடவுள் தம்மை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது சிந்திக்கத்தகுந்ததாகும்.

கடவுள் உலக வரலாற்றில்

உலகில் உள்ள வரலாற்று நூல்களில் விவிலியம் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது என்ற உண்மை எவரும் அறிந்ததே. விவிலியத்தில் ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (*ஆதி.1:1*) என்று கூறப்படுகிறது. இந்த வேதப்பகுதி (பஞ்சாகமங்கள்) கி.மு.1,423 ஆண்டுக்கு முன் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (The Rees Chronological Bible). படைப்புகள் அனைத்தும் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டதாக நாம் பார்க்கிறோம். விவிலியச் செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்ட திருக்குறளிலும் இதே கருத்தை "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று முதல் குறட்பாவில் பார்க்கிறோம். கடவுளே உலக வரலாற்றின் ஆரம்பமாகவும் காணப்படுகிறார்.

கடவுள் இந்த உலக வரலாற்றில் ஒரு மனிதனாகப் பிறந்த காரணத்தை, சைவ சித்தாந்தம் "இறவா இன்பத்தில் எமை இருத்த வேண்டி, பிறவா முதல்வன் பிறந்தார்" என்று கூறுகிறது. அதாவது நித்திய பேரின்ப வீட்டில் எமைக் கொண்டு சேர்க்க இறைவன் உலகத்தில் பிறந்தார், என்பதே கருத்து.

ஆசியா கண்டம் - கிழக்கும், மேற்கும்

உலக தேசங்களில் ஆசியா கண்டம் வரலாற்றுச் சிறப்புடையதாய் விளங்குகிறது. தென் ஆசியாவின் கிழக்குப் பகுதியாக இந்து தேசமும், மேற்குப் பகுதியாகக் (பாலஸ்தீனா) கானான் தேசமும் இறைவனையும், மனுக்குலத்தையும் தொடர்புப்படுத்தும் வரலாறு உடையவைகளாய்ச் சிறந்து விளங்குகின்றன.

உலகின் ஆதி பெற்றோர் கிழக்கே

மனுக்குலத்தின் ஆதி பெற்றோர் கிழக்கே ஏதேனில் வைக்கப் பட்டார்களென்றும், அவர்கள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுப் பாவத்தில் விழுந்துவிட்டார்கள் என்றும் (*ஆதி.2,3 அதி.*) விவிலியத்தில் வாசிக்கிறோம். இது இந்து தேசத்திலும், இந்து தேசத்தை ஒட்டியப் பகுதிகளிலும் நடந்ததாகப் பற்பல சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களில்

டாக்டர் தெ. தேவகலா M.A., M.Phil., Ph.D அவர்கள், தம் "இந்தியா ஒரு தோமா வழி திராவிட கிறிஸ்தவ நாடே" என்ற நூலில் "பழந்தமிழ் இலக்கியங்களில் ஆதன்" என்ற பெயர் பல இடங்களில் காணப் படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் (தொல்காப்பியம் 1.349; ஐங்குறுநூறு 1a.10.1; பதிற்றுப்பத்து 4.1, 63-21; புறநானூறு 29-2, 154-4, 389-13) காணப்படும் அவ்வை என்ற சொல், மூத்த தாயைக் குறிக்கும் "... கடவுளால் படைக்கப்பட்ட முதல் ஆணையும், பெண்ணையும் தமிழ் மொழியில் ஆதன், அவ்வை என்று குறிப்பிடுகின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது. மட்டுமல்ல, கடவுளுக்கு 'ஆதன் தந்தை' என்னும் பொருள் தரும் 'ஆந்தையார்' என்னும் பெயரைத் தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது."

பிறவா யாக்கைப் பெரியோன் கோவில்

ஆதனுக்கும், அவ்வைக்கும் தனி கோவில்கள் இருந்ததாகக் காணப்படுகிறது. சிலப்பதிகாரம் பிறவா யாக்கைப் பெரியோன் கோவில் குறித்துக் கூறுகிறது. யாக்கை என்றால் சரீரம்; பிறவா யாக்கை என்றால், தாயின் கர்ப்பத்தில் பிறக்காத சரீரத்தை உடையவன் என்பது பொருள். தாயின் கர்ப்பத்தில் பிறக்காத சரீரத்தோடு பிறந்த பெரியவர் ஆதி மனிதனாகிய ஆதாம் மட்டுமே.

காயீன், ஆபேல் கல்லறைகள் இராமேஸ்வரத்தில்

இராமேஸ்வரம் இரயில் நிலையம் அருகில், நம் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் குடும்பப் பராமரிப்பின் கீழ் ஆதி பெற்றோரின் பிள்ளைகளான காயீன், ஆபேல் ஆகியோரின் கல்லறைகள் இருந்துவருவதை 21-11-2009 அன்று நக்கீரன் வார இதழில் அதன் புகைப்படங்களோடு வெளியிடப்பட்டிருந்தது. சுற்றுலா செல்வோர் சென்று பார்த்து வருகிறார்கள்.

ஆதம் பாலம், சேது சமுத்திரம்

மேலும் ஆதாமின் பெயரால் காலாகாலங்களாய் அறியப்பட்டு வரும் ஆதம் பாலம், இலங்கையில் பாதுகாக்கப்படும் ஆதம் பாதம் (காலடிச்சுவடுகள்) ஆகியவையும் குறிப்பிடத்தக்கவைகளே. பண்டைக் காலத்திலே வரலாற்று அடிப்படையில் கூறப்படும் ஆதம் பாலத்துக்குப் பதிலாக இராமாயணம் என்ற இதிகாசத்தின் அடிப்படையில், கதாபாத்திரமான இராமனின் பெயரில் 'ராமர் பாலம்' என்று பெயர் மாற்றத்திற்கான முயற்சிகளும் நம் தேசத்தில் நடக்கிறது. ஆதாமின் ஒரு மகனான சேத்தின் பெயரால் அழைக்கப்படுவதே 'சேது சமுத்திரம்' இவை ஒவ்வொன்றும் நம் தேசத்தின் பழைமையையும், விவிலியத்தின் உண்மையையும் விளக்கிக் காட்டுவனவாய் உள்ளன.

உலகின் முதல் மொழி தமிழா?

பூமியெங்கும் ஒரே பாஷையாயிருந்தது. ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம் பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு அங்கே குடியிருந்தார்கள் (*ஆதி.11:1,2*) என்று விவிலியத்தில் காணப்படுகிறது. ஆதி பெற்றோர் கிழக்கே வைக்கப் பட்டார்கள். அவர்கள் பேசின ஆதி பாஷையும் தமிழாயிருக்க

வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் பலமுறைகளில் ஆணித்தர மாய் நிரூபிக்கிறார்கள்.

"இன்றுள்ள மொழிகளில் மாந்தன் தொன்மொழிக்கு மிக நெருங்கியது தமிழ் மட்டுமே. முதல் தாய்மொழி ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கு ஒளிதர வல்லது தமிழே" என்று தமிழக வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றான 'சிந்துவெளி' தொல் தமிழ் நாகரீகம் என்ற நூலில் அறிஞர் P. ராமநாதன் என்பவர் கூறியிருக்கிறார்.

எபிரேயத்தின் தாய்மொழி தமிழே - திரு. மா.சோ. விக்டர்

'எபிரேயத்தின் தாய்மொழி தமிழே' என்ற நூலின் ஆசிரியர் திரு. மா.சோ. விக்டர் அவர்கள், தமிழ்மொழி, பண்பாடு, சமயம் போன்றவற்றை ஆய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார். அவர் ஆய்வு ஆய்வாளர்களின் சிந்தனைக்கும், ஆய்வுக்கும் மேலும் வழி வகுப்பதால் அக்கட்டுரை தமிழர் சமயம் செப்டம்பர் 2010 மாத இதழில் வெளியிடப்பட்டு, ஆராய்ச்சி அடிப்படையிலான மாற்றுக்கருத்துக்களை வரவேற்றுப் பிரசுரம் செய்யப்பட்டது.

இந்து தேசம் முழுவதும் பேசப்பட்ட மொழி தமிழே

இந்து தேசம் முழுவதிலும் முற்காலங்களில் பேசப்பட்ட ஒரே மொழி தமிழ் ஆகும். A.D. முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர் தோமாவால் கொண்டுவரப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தியை தேசமெங்கும் பரப்புவதற்கான இந்துக்களின் முயற்சியில் அன்று வட இந்தியாவில் நாடோடிகளாய்த் திரிந்த அன்னிய கூட்டத்தாருக்காக அவர்களுடைய பாஷைகளையும் தமிழோடு இணைத்து, இரண்டாம் நூற்றாண்டில் உண்டாக்கிய புது மொழியே சமஸ்கிருதம் ஆகும். அதன்பின் இந்து தேசத்தில் பல மொழிகள் தோன்றின. சமஸ்கிருத மொழிக்குப் பின் தமிழர் என்ற சொல்லில் ஏற்பட்ட கொச்சைத் திரிபு வடிவமே திராவிடர் என்பதாகும் (தமிழர், த்ரமிடர், திராவிடர்).

Dr. அம்பேத்காரின் விளக்கம்

Dr. அம்பேத்கார் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்: "The original 'Tamil' when imported into sanskrit become ' Damila' and later on 'Dramila' became 'Dravida'. The word 'Dravida' is the name of the language of the people and does not denote the race of the people. The third thing to remember is that

tamil or dravida was not merely the language of South India; but before the Areans came it was the language of the whole of India and was spoken from Kashmir to Cape Comorin; it was the language of the Nagas through out India".

Dr. Baba Sahib Ambedkar writings and speeches vol. VII

Dr. அம்பேத்கார் கூறியிருப்பதாவது:

"சமஸ்கிருத மொழிக்குப் பின், ஆதித் தமிழ், 'தமிலர்', 'திரமிளா', 'திராவிடர்' என்று மொழி சிதைவுற்றது. திராவிடர் என்ற சொல் தமிழ்மொழியைக் குறிக்குமே தவிர, மக்களில் ஒரு தனி இனத்தைக் குறிப்பதல்ல. நமது நினைவில் இருக்க வேண்டிய மூன்றாவது காரியம் என்னவென்றால், தமிழ் அல்லது திராவிடா என்ற மொழியானது தென் இந்திய மக்களின் மொழி மட்டுமல்லாது, அது ஆரியரின் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் பேசப்பட்டு வந்த மொழியாகும். அது காஷ்மீர் தொடங்கி, கன்னியாகுமரி மட்டும் பேசப்பட்டு, இந்தியா முழுவதிலும் வசிக்கும் நாகருடைய மொழியாகவும் இருந்தது".

இந்த உண்மைகள் இந்நாட்களில் மறந்ததும், மறைக்கப் படுவதுமாகக் காணப்படுகிறது.

இந்து, இந்துதேசம் - பெயர்களின் வரலாறு

பண்டைய உலக வல்லரசுகளில் வலிமைபெற்ற அரசுகளில் ஒன்றான பெர்சியப் பேரரசின் மன்னனான கோரேஸ் என்பவன் கி.மு. 530-ல் நம் தேசத்தோடு போருக்கு வந்து தோல்வியடைந்தான். ஆனால் அவனுக்குப் பின் தரியூ மன்னன் கி.மு. 518-ல் நம் தேசத்தில் சில பகுதிகளைப் பிடித்துக்கொண்டான். பெர்சியர்கள் நம் தமிழ் தேசத்தின் வடமேற்கு எல்லைகளைக் கடந்து உள்ளே வந்தபோது, நம் சிந்து நதியால் மிகவும் கவர்ச்சி அடைந்தார்கள். அவர்களும் அவர்களுக்குப் பின் வந்தேறியவர்களும் நம் தேசத்தையும், தேசத்து மக்களையும் **சிந்து நதியின் பெயரால்** சிந்து நதி, சிந்து தேசம், சிந்துக்கள் என்று அழைத்தார்கள். அவர்களது தவறான உச்சரிப்பினால் இந்து நதி, இந்து தேசம், இந்துக்கள் என்று மாறி அதுவே நிரந்தரப் பெயர்களாய் மாறிவிட்டன.

பண்டிட் நேருவின் கூற்று

நம் தேசத்தின் முதல் பிரதமரான பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் 'Discovery of India' என்ற நூலில் இதைக் குறித்து கூறுகையில், "... The word (Hindu) is clearly derived from Sindhu, the old, as well as the present Indian name for the Indus. From this Sindu came the word Hindu and Hindustan, as well as Indus and India" என்கிறார்.

நம் நாட்டில் குடியேறிய அன்னிய தேசத்தார்

கி.மு. 6-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 4-ம் நூற்றாண்டு வரையிலான காலங்களில், அன்னிய தேசத்தாரான (1) பாரசீகர்கள் (2) கிரேக்கர்கள் (3) சகர்கள் (4) குஷாணர்கள் (5) ரோமர்கள் (6) ஹுணர்கள் ஆகியோர் இந்தியாவில் குடியேறினர். இவர்கள் பல கூட்டங்களாக வடமேற்குப் பகுதிகளில் நாடோடிகளாகச் சுற்றித்திரிந்து ஆடு மாடு ஆகியவற்றைச் சுட்டுத் தின்று, சோமபானம் சுராபானம் ஆகிய மது வகைகளை அருந்து, தங்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டும் தங்கள் தங்கள் மொழிகளைப் பேசிக்கொண்டும் இருந்தனர்.

அதி : 2

மனுக்குலம் கிழக்கிலிருந்து மேற்கே

கிழக்கில் கடவுளைப் பிரிந்த மனுக்குலம்

தேவ மகிமையோடு படைக்கப்பட்டு, கிழக்கே ஏதேன் தோட்டத்தில் அமர்த்தப்பட்ட ஆதி பெற்றோர் தீயவனால் வஞ்சிக்கப் பட்டு, பாவத்தில் சிக்கிக்கொண்டதால் அவர்களிலிருந்து உண்டான சந்ததியார் அனைவருமே தேவ மகிமையை இழந்து அலையும் சூழல் ஏற்பட்டது. இந்நிலையில் உலகின் முதல் மனித சமுதாயம் சிந்து சமவெளியில் வசித்து சிந்து சமவெளி நாகரிகம் உலகின் முதல்

நாகரிகமாக வளர்ச்சி அடைந்தது என்று சமீபகால ஆராய்ச்சிகள் கூறுகின்றன (ஒரு புதையுண்ட வரலாறு Pg. 12, 13).

மேற்கு பார்த்துப் பயணம்

காலப்போக்கில் ஜனங்கள் கிழக்கிலிருந்து மேற்குப் பார்த்துப் பிரயாணம் செய்து சுமேரியா சமவெளியில் தங்கி, உலகின் இரண்டாம் நாகரிகமான சுமேரியன் நாகரிகத்தை ஸ்தாபித்தார்களென்றும், பின்பு தென் திசையில் சென்று, மூன்றாம் நாகரிகமான நைல் நாகரிகம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் காணப்படுகிறது. இக்கூற்றை விவிலியமும் மெய்ப்பிக்கிறதாய்ப் பார்க்க முடிகிறது. ஆதியாகமம் 11:1,2 ஆகிய வசனங்களில் பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது. ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம் பண்ணுகையில், சிநேயார் (சுமேரியா) தேசத்தில் சமபூமியைக் கண்டு, அங்கே குடியிருந்தார்கள் என வாசிக்கிறோம்.

அங்கேயும் சாத்தானின் வஞ்சனை

சுமேரியாவிலும் (பாபிலோனியா) சாத்தான் ஜனங்களைக் கடவுளை விட்டுத் தூரம் போக்கினான். ஜனங்கள் ஆணவத்தால் வானளாவிய ஒரு கோபுரம் கட்டத் தொடங்கினார்கள். கடவுள் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, ஜனங்களை நாலாதேசங்களுக்கும் சிதறிப்போகப் பண்ணினார். மட்டுமல்ல ஜனங்கள் கடவுளை ஆராதிப்பதற்குப் பதிலாய் சிருஷ்டிகளை ஆராதிக்கத் தொடங்கி விட்டார்கள். விக்கிரக வணக்கம் உலகெங்கும் பரவிற்று.

கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்பதற்கான தேவதிட்டம்

கடவுள் தம்மை விட்டுவிலகி, கெட்டுப்போன மனுக்குலத்துக்கு தம்மை ஆராதிக்கவும், தமக்கு உகந்த வழிகளில் நடக்கவும் கற்றுக் கொடுக்கச் சித்தம் கொண்டார். அதற்காக மனுக்குலத்தில் ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனிலிருந்து ஒரு ஜனத்தை உருவாக்கி, அந்த ஜனத்திற்குத் தகுந்த பயிற்சிகள் அளித்து அவர்கள் மூலம் மனுமக்கள் எல்லோருக்கும் மீட்புண்டாக்கும் திட்டம் வகுத்து, அதைச் செயல் படுத்துவதைப் பார்க்க முடிகிறது. அதற்காக ஆபிராம் என்ற ஒருவனைத் தெரிந்தெடுத்தார். அவனை பாபிலோனை விட்டு, பாலஸ்தீனாவுக்குக் கொண்டு சென்றார். அழைக்கும்போதே தமது திட்டத்தை வெளிப் படுத்துகிறார்.

திட்டத்தைக் குறித்த வசனம்

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன். நீ ஆசீர்வாதமாயிருப்பாய்... **பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்** (*ஆதி.12:1-3*).

பாலஸ்தீனாவில் தேவதிட்டங்கள் நிறைவேறுதல்

ஆபிரகாம் பாலஸ்தீனா சென்றார். அவர் பேரனான (யாக்கோபு) இஸ்ரவேலிலிருந்து உருவான ஜாதி இஸ்ரவேலர் என்று அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் 430 வருடம் இருந்து பெருகினார்கள். கர்த்தர் மோசேயைக் கொண்டு அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். கானானுக்குத் திரும்பக் கொண்டு சென்றார். வழியில் சீனாய் பகுதியில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவ திட்டங்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன, சட்டதிட்டங்கள் கொடுக்கப்பட்டன. கடவுளைத் தொழுதுகொள்ள ஆசரிப்புக்கூடாரம், பலிமுறைகள், தொழுகை ஆகிய அனைத்தும் கற்பிக்கப்பட்டன.

இஸ்ரவேல் ஜனங்களின் கீழ்ப்படியாமை

நாளடைவில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயாதிபதிகள், இராஜாக்கள் ஆகியோர் இருந்தும், ஜனங்கள் தேவ கட்டளைகளுக்குத் கீழ்ப்படியாதபடியால், அனேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு கடவுள் அவர்களோடு பேசினார். பல தண்டனைகளும் கொடுத்தார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது தேவ நீதி. கடைசியாக, சாபத்துக்குள்ளான மனுக்குலத்தை மீட்டெடுக்க கடவுளே ஒரு மனிதனாக உலகத்தில் பிறந்து, மனுக்குலத்தின் பாவம் அனைத்தையும் தாமே சுமந்து, பாவ நிவாரண பலியாகத் தம்மையே ஒப்புக்கொடுக்கச் சித்தமானார்.

அதி : 3

கடவுள் உலக வரலாற்றில் மனிதனானார்

(மேற்கே பாலஸ்தீனாவில்)

இடமும், காலமும்

நிகழ்வுகளின் உண்மையை அவைகள் நடைபெற்ற இடமும், காலமும் விளக்குவதாய் உள்ளன. காணப்படாத கடவுள் உலக வரலாற்றில் ஒரு மனிதனாகப் பிறந்த நிகழ்வு, உலக வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் மட்டுமல்ல, மனுக்குலத்தை இறைவனோடு இணைப்பதற்கு உகந்த வழியாகவும் காணப்படுகிறது. அந்நிகழ்ச்சி உலக வரலாற்றையே கி.மு. என்றும், கி.பி. என்றும் இரு காலங்களாகப் பிரித்துக் காட்டுகிறது. இந்த மாபெரும் நிகழ்ச்சி, கி.மு.-வின் முடிவில், மேற்காசியாவிலுள்ள பாலஸ்தீனா நாட்டில், பெரிய ஏரோது என்பவன் ராஜா என்ற ஸ்தானத்திலும், உரோம சக்கரவர்த்தியான அகஸ்து என்பவனின் கீழ், பிலாத்து என்பவன் பாலஸ்தீனாவுக்கு தேசாதிபதியாகவும் பணிபுரிந்த காலத்தில் நடைபெற்றதாய்க் காணப் படுகிறது.

மேற்கில் பிறப்பு, கிழக்கில் செய்தி

தீர்க்கத்தரிசிகள் முன்னுரைத்தபடி, பரலோக தேவன் பாலஸ்தீனா தேசத்தில் ஒரு கன்னியின் வயிற்றில் பாலனாகப் பிறந்தார். அற்புதமான அந்தப் பிறப்பின் செய்தி, அந்நேரத்தில் தானே கிழக்கே ஒரு விசேஷித்த நட்சத்திரத்தின் மூலம் நம் இந்து தேசத்திற்கு அறிவிக்கப்பட்டது. கிழக்கிலிருந்து சாஸ்திரிமார் நட்சத்திரத்தால் வழி நடத்தப்பட்டு, உலக மீட்பராய்ப் பிறந்த குமாரக்கடவுளைப் பார்த்து வணங்கினார்கள்.

யெஷுவா என்ற உலக இரட்சகர் இயேசு

உலக இரட்சகர் என்ற பொருளில் பாலஸ்தீனா தேசத்து எபிரெய மொழியில் இறைமகனுக்கு தேவதூதனால் அறிவிக்கப்பட்ட பெயர் யெஷீவா என்பதாகும். யெஷீவா என்ற எபிரெயச் சொல், சுமார் 1,600 ஆண்டுகளுக்குப் பின் கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகள் வழியாய் வந்த தமிழ் ஆக்கம் இயேசு என்பதாகும். இயேசு வளர்ந்து தமது முப்பதாம் வயதில், பாலஸ்தீனாவில் உள்ள யோர்தான் ஆற்றில் யோவான் ஸ்நானன் என்பவரால் திருமுழுக்குப் பெற்றார். அப்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய கடவுளின் மூவொருமை (திருத்துவம்) உலகில் பகிரங்கமாய் வெளிப்படுத்தப்பட்டது.

காணக்கூடாத கடவுள் வெளிப்பட்டார்

ஒருவராலும் காணக்கூடாத கடவுள், ஓர் மனிதகுமாரனாக உலகத்தார் எல்லாராலும் காணக்கூடியவராக உலகத்தில் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த நாட்களில் செய்த ஊழியங்கள், அவர் செய்த அற்புதங்கள், அவர் நிகழ்த்திய இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்கள், அவர் போதித்த அருமையான போதனைகள் யாவும் வரலாற்று நிகழ்ச்சிகளாகத் திருமறையில் எழுதப்பட்டுள்ளன. அவருடன் வாழ்ந்த சீஷர்களும், அவருடைய அப்போஸ்தலர்களும் எல்லாவற்றையும் எழுதினார்கள்.

மனிதரை மீட்க அவர் பலியாக்கப்பட்டார்

குமாரனாகிய கடவுள், எந்தப் பாவமும் இல்லாதவராய் வாழ்ந்த போதும் இறைத் திட்டப்படி அவர் மனுக்குலத்தின் பாவத்தைச் சுமந்து மனிதருக்காகவே சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். அடக்கம் பண்ணப்பட்ட அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த் தெழுந்த பின் அவர் நாற்பது நாட்கள் மட்டும் உலகத்தில் இருந்து பல அற்புதங்கள் செய்து தம் சீஷர்களைப் பெலப்படுத்தினார்.

பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்

மீட்பின் செயலை முடித்த தேவ குமாரன், தமது சீஷர்களும் அடியவர்களும் கூடி நிற்கையில் அவர்களைப் போதித்து ஆசீர்வதித்தார். அப்போது அவர் வானத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார். கூடி நின்றவர்கள் அவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில்

இரண்டு தூதர்கள் காணப்பட்டு, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார்

தேவகுமாரன் தங்களுக்குக் கூறியிருந்தபடி, சீஷர்களெல்லாரும் எருசலேமில் கூடியிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடே அனுப்பப்பட்டார். அப்போது சீஷர்களும் அடியவர்கள் எல்லாரும் புது பெலன் அடைந்து உலக தேசங்களில் எல்லாம் மனுக்குலத்தை மீட்க வந்த கடவுளுக்கு சாட்சி பகிர்ந்தார்கள். அப்போஸ்தலர் தோமா நம் தேசத்தில் அனுப்பப்பட்டார்.

அப்போஸ்தலர் தோமா இந்து தேசத்தில்

கி.பி. 52-ல் தானே அப்போஸ்தலர் தோமா மீட்பின் செய்தியை நம் இந்து தேசத்துக்குக் கொண்டுவந்தார். கூட்டம் கூட்டமாய் மக்கள், பாவிகளுக்காக உலகில் வெளிப்பட்ட கடவுளின் மீட்பின் செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். தேசமெங்கும் இரட்சிப்பின் செய்தி வேகமாய்ப் பரவிற்று. பெருவாரியான மக்கள் மீட்பின் ருசியைச் சுவைத்தார்கள். திருவள்ளுவர் என்ற பக்தன் இரட்சிப்பின் நற்செய்திகளைத் தமிழ் இலக்கிய நடையில் திருக்குறளாக இயற்றினார். மீட்பின் சத்தியங்கள் அந்நாட்களிலேயே நம் இந்து தேசத்தில் பெருமளவில் அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தோமா வருமுன் இந்து தேசத்தின் தொழுகை

தொழுகை வேறு, மதம் வேறு. தொழுகைக்குக் கொள்கைகள் எதுவும் வேண்டியதில்லை. முன் நாட்களிலிருந்து நம் இந்து தேசத்தில் பழம் திராவிட (தமிழ்) வழிபாடு இருந்துவந்தது. அதாவது எதையும் தெய்வமாக எண்ணி, பலிசெலுத்தித் தொழுகை செய்வது. இதுவே, முப்பத்திமுக்கோடி தேவர்களின் வழிபாடு. நம் தேசத்தில் குடியேறின அன்னியர்கள் தீயை வழிபாடு செய்தனர். இந்த வழிபாடுகள் எல்லாம் சாத்தானின் வஞ்சனையால் ஏற்படுவதாகும்.

வழிபாடு விரும்பும் சாத்தான்

ஒரு ஸ்தானத்தில் ஒரு விசேஷ சக்தி இருப்பதாகச் சாத்தானால் ஏவப்பட்டு, செய்யப்படும் வழிபாடுகளில் சாத்தான் அற்புதங்கள் நடக்கச் செய்கிறான். அங்கு தொழுகை ஆரம்பிக்கப்பட்டு விமர்சையாய் நடைபெறும். இவ்விதம் மனிதர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். நாளடைவில் அவர்கள் சாத்தானின் வலையில் விழுந்து, மறுமையில் நித்திய ஜீவனை இழந்து, சாத்தானோடு நரகத்தில் சேர்ந்து விடுகிறார்கள்.

இந்து தேசத்தின் அன்றைய மதங்கள்

பழந்திராவிட வழிபாட்டு மக்கள் செலுத்திவந்த உயிர்ப் பலிகளை விரும்பாத இந்து தேச மக்கள் சமண பௌத்த மதங்களை ஏற்றுக்கொண்டார்கள். அவ்விரு மதங்களும் அன்று கடவுள் கொள்கை யற்ற நாத்திக மதங்களாகக் காணப்பட்டன. முதன்முதலாக நம் தேசத்தில் இறைக்கொள்கையைக் கொண்டுவந்தவர் அப்போஸ்தலர் தோமாவாகும்.

அதி : 4

வரலாற்றில் வெளிப்பட்ட மீட்பின் சத்தியங்கள்

உலகில் வெளிப்பட்ட கடவுளை ஏற்றுக்கொண்டவர்கள்

கடவுள் முதலாம் நூற்றாண்டில் மேற்கே பாலஸ்தீனா தேசத்தில் மனிதனாகப் பிறந்தபோதிலும், அவரை எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தபோதிலும் அன்றைய மதகுருக்களும், தலைவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இறைமகனை தேவகுமாரனென்று விசுவாசிக்கவில்லை. எனவே அவரைச்

சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் அடக்கம் பண்ணப்பட்ட இயேசு அவர் சொல்லியிருந்தபடி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபோது, சத்தியங்களை ஏராளமானோர் ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள்.

மீட்பின் செய்தி

இறைமகன் இயேசு உயிர்த்தெழுந்து பரத்துக்கு ஏறிச் சென்றதைக் கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்து விழித்துக் கொண்டார்கள். அவர் உலகில் செய்த அற்புதங்களையும், உபதேசங் களையும், அவர் தம்மைக் குறித்து முன்னுரைத்த எல்லாமே அப்படியே நிறைவேறியதையும் கண்டு ஆச்சரியப்பட்டு, அவரை முழு மனதோடு தங்கள் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டார்கள்.

தேற்றரவாளனில் பெலன்

உலக இரட்சகர் கூறிச் சென்றதுபோல, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டபோது, ஜனங்கள் உண்மையான பெலன் பெற்றுக்கொண்டு முழு வல்லமையோடு எல்லாத் தேசங் களிலும் பாய்ந்து சென்று சாட்சி பகர்ந்து, அவரே தேவனென்ற உண்மையைப் பறைசாற்றினார்கள். ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் இறைவனின் மீட்பைப் பெற்றுக்கொண்டார்கள்.

மீட்பின் சத்தியங்களைக் கொண்ட நூல்கள்

மீட்பின் சத்தியங்களை, மீட்க வந்த இறைவனிடத்திலிருந்து நேரடியாகக் கற்றுக்கொண்ட அவருடைய அடியவர்கள் தெளிவாக எழுதினார்கள். அவை திருமறையோடு சேர்க்கப்பட்டன. இறைவனின் ஒரு அப்போஸ்தலனாகிய தோமா இந்து தேசத்தில் அதே சத்தியங்களைக் கூறினார். அந்தச் சத்தியங்களின் அடிப்படையில் திருக்குறள் எழுதப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்தச் சத்தியங்கள் சைவ சித்தாந்தமாக இந்து தேசத்தில் எழுதப்பட்டன. எனவே திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்த நூல்கள் வழியாகச் சத்தியங்களை அறிகிறோம்.

அறிவிக்கப்பட்ட மீட்பின் சத்தியங்கள்

மீட்பின் சத்தியங்கள் முதலாம் நூற்றாண்டிலேயே, முன்னால் கூறியபடி மேற்கிலும், இந்து தேசத்திலும் அறிவிக்கப்பட்டன.

அவையாவன:-

1. கடவுள் ஒருவரே. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவக் கடவுள். அவரே படைப்புக்கும் காரணர்.
2. கடவுளால் தூயநிலையில் படைக்கப்பட்ட ஆதி பெற்றோர், தீயவனான சாத்தானின் வஞ்சனையால் பாவத்தில் விழுந்து விட்டார்கள். எனவே, அவர்களுடைய சந்ததியரான மனுமக்கள் அனைவரும் பாவிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவர்கள் தேவ மகிமையையும், நித்திய ஜீவனையும் இழந்துவிட்டார்கள்.
3. கெட்டுப்போன மனுக்குலத்தை இரட்சிக்க தேவன் சித்தம் கொண்டார். அதற்காகக் கடவுளே உலகத்தில் ஒரு மனிதனாக ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்தார்.
4. மனிதனாய்ப் பிறந்த கடவுள், பரலோகம் செல்லும் பாதையாகத் தம்மை மனிதருக்குக் காட்டினார். மட்டுமல்ல, மனுக்குலத்தின் பாவத்தை எல்லாம் அவரே சுமந்து, பாவ நிவாரண பலியாகச் சிலுவையில் பலியாகி மனிதருக்கு மீட்பை (இரட்சிப்பு) உண்டாக்கினார்.
5. இறைவனை ஏற்றுக்கொண்டு, இந்த மீட்பைப் பெற்றுக்கொள்கிறவன் எப்பேர்ப்பட்ட பாவியானாலும் பாவமன்னிப்பைப் பெற்று, புது சிருஷ்டியாகி, பரலோக வாழ்வுக்குத் தகுதி பெற்றுக்கொள்கிறான்.
6. மீட்கப்பட்டவர்கள் மறுமையில் நித்திய பேரின்ப வீட்டில் இறைவனோடு ஒன்றித்து இன்புற்றிருப்பார்கள்.

சத்தியங்களை இந்துக்கள் ஏற்றுக்கொண்டார்கள்

மேற்கூறிய சத்தியங்கள் அனைத்தையும் நம் இந்து தேச மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதைகளை மாற்றி அமைத்துக்கொண்டார்கள். பலர் துறவிகளும், முனிகளும், ரிஷிகளுமாகி அனேக நூல்களையும் பக்திப் பாடல்களையும் இயற்றினார்கள். பின்வரும் அதிகாரங்களில் இவைகள் விளக்கப்படுகின்றன.

அதி : 5

கடவுள் ஒருவரே அவர் மூவொரு கடவுள்

(திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்)

மூவொரு கடவுள்

கடவுள் ஒருவரே. அவர் படைப்புக்குக் காரணரான திரியேக தேவன். அதாவது மூவொரு கடவுள் என்பது உலகுக்குப் பகிரங்கமாய் வெளிப்படுத்தப்பட்டது முதலாம் நூற்றாண்டில் ஆகும். அந்தச் சத்தியத்தைத் திருமறையிலும், திருக்குறளிலும் சைவசித்தாந்த நூல்களிலும் தெளிவாய்ப் பார்க்கிறோம்.

I. திருமறையில்

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்ற படைப்பின் சத்தியத்தோடு திருமறை ஆரம்பமாகிறது (*ஆதி.1:1*).

கடவுள் மனிதனாய் இந்த உலகத்தில் அவதரித்தபோது, அவருடைய திரித்துவம் இந்த உலகத்தில் பகிரங்கமாக வெளிப் படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். இறைமகன் இயேசு யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் பெற்று கரையேறி நிற்கையில், இது தெளிவாய் வெளிப்பட்டது. பிதா பரத்திலிருந்து பேசுகிறார், குமாரன் கரையில் நிற்கிறார், பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல வந்தமர்கிறார் (*மத்.3:16,17*) திருமறை முழுவதிலும், அதிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டிலும் இந்த சத்தியம் விளக்கப்படுகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்கிறது திருமறை, அவர் அன்பின் மிகுதியால் உலகத்தையும், மனுக்குலத்தையும் தூய்மையாய்ப்

படைத்தார். மனிதன் பாவத்தில் விழுந்து நித்திய ஜீவனை இழந்தபோதும், தேவன் தமது அன்பின் மிகுதியால் உலகில் ஒரு மனிதனாகப் பிறந்து மனுமக்களை மீட்கச் சித்தம் கொண்டார். எனவே கடவுள், பிதாவாகவும் உலகத்தில் மனிதனாகப் பிறந்தவர் குமாரனாகவும் குமாரனின் பிறப்புக்குக் காரணமானவர் பரிசுத்த ஆவியாகவும் பார்க்கிறோம்.

II. திருக்குறளில்

திருக்குறள் ஆரம்பிப்பதும் திருமறையைப் போலவே, ஆதியிலே தேவன் உலகைப் படைத்தார் என்றும், கடவுள் மூவொருவராய்த் தம்மைப் பகுத்து நிற்பவர் என்றும் முதலாம் குறட்பாவிலேயே கூறப்பட்டுள்ளது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" *(கு-1)*

என்று இதை விளக்கிக் கூறுகிறது குறள்-1. 'அ' என்பது எழுத்துக் கெல்லாம் ஆதியாயிருப்பது போல, பகவன் (பகுத்துநிற்கும் இறைவன்) ஆதியிலே உலகைப் படைத்தார். பகவன் என்பதில் இறைவன் தம்மைத் தாமே கடவுள், வான், நீத்தார் என்று பகுத்து நிற்கிறவர் என்றும் விளக்கப்படுகிறது. அது பாயிரத்தில் மிகத் தெளிவாக விளக்கிய பின் ஐந்தாம் அதிகாரத்தில் 'இயல்புடைய மூவர்' என்று அழுத்தமாய் மறுபடியும் எடுத்துக் கூறப்படுகிறது.

திருக்குறள் முழுவதிலும் கடவுளின் மூவொருமைக் கொள்கை சிறப்பாய் விளக்கப்படுவதைப் பார்க்கிறோம். திருக்குறளில் பிதா கடவுள் ஆகவும், பரிசுத்த ஆவி வான் (மழை) ஆகவும், குமாரன் நீத்தார் (பரலோக மேன்மைகளை நீத்தவர் அல்லது துறந்தவர்) ஆகவும், முதல் மூன்று அதிகாரங்களில் அழகாய் விளக்கப்படுகிறது.

இவ்விதமாய், இறைவனைக் குறித்து திருமறையில் கூறியிருப் பவையெல்லாம் திருக்குறளிலும் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம் ("திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே" பார்க்க).

III. சைவ சித்தாந்த நூல்களில்

சைவத்தில் பிதாவை அப்பன் என்றும், குமாரனைக் குமரன் என்றும், பரிசுத்த ஆவியை (ஆற்றல்) சக்தி அல்லது அம்மை என்றும்

அழைத்தார்கள். (காலம் செல்லச்செல்ல இந்து தேசத்தில் மூவொருமைக்கொள்கை மேலும் வலுவடைந்து சைவம், வைணவம் என்று இரு மதங்களாகப் பிரிய நேர்ந்தது). ("இந்துத்துவாவிலிருந்து விடுதலை" பார்க்க). வைணவத்தைப் பற்றி இந்நூலில் விவரிக்கப்படவில்லை.

அதி : 6

மனுக்குலம் பாவத்தில் விழுந்துவிட்டது

(திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்)

I. திருமறையில்

தூய்மையாய்ப் படைக்கப்பட்ட மனிதன் சாத்தானின் வஞ்சனையால் பாவத்தில் விழுந்ததைக் குறித்து விரிவாய் ஆதி.1,2,3 அதிகாரங்களில் வாசிக்கிறோம். அங்கே ஆதி மனிதனாகிய ஆதாம் மண்ணினால் உண்டாக்கப்பட்டான் என்றும், ஏவாள் ஆதாமின் எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டாள் என்றும் கூறப்படுகிறது. உலகமோ தேவனுடைய வார்த்தையால் உண்டாயிற்று என்று பார்க்கிறோம்.

சாத்தானின் பொய்யினால் வீழ்ச்சி

தீயவனான சாத்தான், பொய்யினால் ஆதி பெற்றோரை வஞ்சித்து, தேவனால் விலக்கப்பட்ட பழத்தைப் புசிக்க வைத்து, தேவ கட்டளையை மீறச் செய்தான். இவ்விதமாய் ஆதி பெற்றோர் பாவத்தில் வீழ்ச்சியடைந்தார்கள். அவர்களிலிருந்து உண்டான சந்ததியார் அனைவருமே பாவிகளானார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது தேவநீதி. பாவத்துக்குள்ளான மனிதர்கள் தேவ மகிமையை இழந்துவிட்டார்கள். அவர்கள் நித்திய மரணத்துக்கு, அதாவது நரகத்துக்குப் பாத்திரவான்களானார்கள். நித்திய மரணம் என்பது இரண்டாம் மரணம் என்றும் கூறப்படுகிறது. அப்படியே மனிதர்கள் எல்லாருமே பாவிகள் ஆகிவிட்டோம் என்பது தான் சத்தியம்.

II. திருக்குறளில்

1. சாத்தானின் பொய்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்." *(கு. 6)*

திருக்குறளின் 6-வது குறட்பாவில் இறைவனே சம்பாதித்துத் தந்த இரட்சிப்பின் பாதை பொய்தீர் ஒழுக்க நெறி என்று கூறப்படுகிறது.

இங்கு ஏதேன் தோட்டத்தில் ஆதி பெற்றோரை, பொய்யினால் வஞ்சித்த சாத்தானின் பொய்யை இறைவன் சிலுவையில் தீர்த்துப் (ஒழித்து) பெற்றுத் தந்ததே அந்த இரட்சிப்பு (ஒழுக்கம்) என்று அப்பாடல் அழகாய் இலக்கிய நடையில் விளக்குகிறது. *("திருக்குறள் அடிப்படைக் கிறிஸ்தவமே" காண்க)*

2. ஜென்ம பாவம் என்ற பிறவிப் பெரும் கடல்

ஆதி பெற்றோரின் மீறுதலால், அவர்கள் சந்ததியாருக்கு பிறப்பிலேயே பாவம் தொடர்ந்து வருவதைத் திருக்குறள் பிறவிப் பெரும் கடலாகக் காட்டுகிறது. அதுவே ஜென்ம பாவம். அந்த ஜென்ம பாவத்தைத் தீர்க்க வேண்டுமானால், அவர்கள் இறைவன் பாதத்தில் சேர வேண்டும் என்று 10-வது குறட்பாவில் கூறப்படுகிறது. பிறவிப் பெரும் கடலை எல்லாரும் நீந்தியே ஆக வேண்டும். ஆனால், இறைவன் பாதத்தை வந்தடையாதோர் ஜென்ம பாவம் என்ற பாவக்கடலை நீந்திக் கடக்க முடியாமல் அமிழ்ந்து விடுவார்கள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்" *(கு.10)*

3. கர்ம பாவம் என்ற மற்றும் ஓர் கடல்

பிறப்பிலேயே வரும் ஜென்மபாவத்தைப்போல் மனிதரில் காணும் கர்ம பாவம் 8-வது குறளில் காட்டப்படுகிறது.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது" *(கு.8)*

அதாவது அறமாகிய இரட்சிப்பைக் கடலாகக் கொண்ட இறைவனின் காலடிகளில் சேர்ந்தவர்க்கல்லாமல் பிறவாழியான

மறவாழி அதாவது பாவக்கடல் நீந்திக் கடக்க முடியாது (திருக்குறள் முழுவதிலும் மனுக்குலம் பாவத்தில் விழுந்த செய்தியும் அதன் பரிகாரமும் எடுத்துக்காட்டப்படுகிறது).

III. சைவ சித்தாந்த நூல்களில்

சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் மனிதன் தூய்மையாய் சிருஷ்டிக்கப்பட்டதையும், அவன் பாவத்தில் விழுந்துவிட்டதையும் விளக்கிக் கூறுவதைப் பார்க்கிறோம்.

1. சிவஞானபோதம் - சூத்திரம் 1

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துள தாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

அதாவது

அவன் ஆகிய ஆதி மனிதன் (ஆதாம்) அவள் ஆகிய ஏவாள், அதுவாகிய உலகம் ஆகிய இவை மூன்றையும் இறைவன் **மூவினைகளில்** அதாவது மூன்று வெவ்வேறு செயல்களால் தோற்றுவித்தார் (ஆதாம் மண்ணினால், ஏவாள் எலும்பிலிருந்து, உலகம் வார்த்தையால்). அவை தூய நிலையிலிருந்து ஒடுங்கி, **மலத்துளதாம்** அதாவது பாவத்தில் விழுந்தன. அவ்விதமாய் இந்த வீழ்ச்சி மனிதரின் தூய நிலைக்கு முடிவும், பாவ நிலைக்கு ஆரம்பமும் ஆயிற்று. இவற்றை அறிஞர்கள் கூறுகிறார்கள் என்கிறது இப்பாடல்.

இப்பாடல் வழி சைவ சித்தாந்தம் படைப்புகளை இறைவன் தோற்றுவித்தார் என்றும், அவைகள் பரிசுத்தமாய்ப் படைக்கப்பட்டன என்றும், ஆனால் அவை பாவத்தில் விழுந்துவிட்டன என்றும் தெளிவாகத் திருமறைக் கூற்றினை எடுத்துக் கூறுவதைப் பார்க்கிறோம்.

2. உண்ணாதே என்ற பழத்தை உண்டதால்

மேலே கூறப்பட்ட சைவப் பாடலில் பழத்தின் காரியம் (அதாவது திருமறையில் கூறப்பட்ட விலக்கப்பட்ட கனியைப் புசித்த காரியம்) சொல்லப்படவில்லை. ஆனால் அதையும் கூட திருவுந்தியார் என்ற சைவ சித்தாந்தப் பாடலில் எடுத்துக் கூறப்படுகிறது.

திருவுந்தியார் - 4

முக்தி முதற்கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீ பற
அப்பழம் உண்ணாதே உந்தீ பற.

அதாவது

முக்தி நிலையான பரிசுத்தமும் இன்பமுமான நிலையில் படைக்கப்பட்ட முதற்கொடியில் (ஆதாம்) மோகமாகிய பாவக்கொடி படர்ந்துவிட்டது. அது எப்போதென்றால், **உண்ணாதே** என்று கூறப்பட்ட அந்தப்பழத்தை அவன் உண்டபோதாகும்.

மனிதன் எப்போது பாவத்தில் விழுந்தான் என்பது திருமறையில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி இங்கும் சுட்டிக்காட்டப்படுகிறது. *(மேலும் விவரங்களுக்கு இந்துத்துவாவிலிருந்து விடுதலை பக்கம் 43 பார்க்க)*

ஓரே மனிதனாலே பாவம், ஓரே மனிதராலே மீட்பு

மேலே காட்டப்பட்டவைகளிலிருந்து ஆதி மனிதனாகிய ஆதாமிலிருந்து மனுக்குலம் எல்லாமே பாவத்துக்குள்ளாக்கப் பட்டதென்று காண்கிறோம், அது போல ஒரே மனிதராலே (அதாவது பாவமில்லாதவராய் உலகத்தில் அவதரித்த கடவுளால்) எல்லாருக்கும் மீட்பும் உண்டாயிற்று.

இந்தச் சிறந்த சத்தியம் உலகத்தின் எல்லா மனுமக்களுக்கும் ஒரு பெரிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அளிக்கிறது. திருமறையில், ரோமர் 5:18,19 வசனங்களிலும் இதைக் குறித்து வாசிக்கிறோம். சைவ சித்தாந்தப் பாடல்கள், இந்த அடிப்படைச் சத்தியத்தை எடுத்துக் கூறி, கெட்டுப்போன மனிதனை மீட்பதற்காய் இறைவனே உலகத்தில் மனிதனாய் வந்தார் என்று விளக்கிக் கூறுகிறது.

அதி : 7

கெட்டுப்போன மனிதரை மீட்க கடவுள் மனிதரானார்

(திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்)

பாவத்தால் கெட்டுப்போன மனிதனுக்கு விடுதலை உண்டு

பாவத்தில் விழுந்து கெட்டுப்போய், பரலோக மேன்மைகளை இழந்துபோன மனுக்குலத்தை இரட்சிக்கத் தம் அன்பின் நிமித்தம் தேவனே சித்தம் கொண்டார். ஏனென்றால் பாவச் சகதியில் சிக்கிக்கொண்ட ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தூக்கிவிட முடியாது. பாவத்தின் சம்பளம் மரணம் என்பது தேவநீதி. எனவே, தேவனே பாவமில்லாத ஒரு மனிதனாக, இந்த உலகத்தில் பிறந்து மனுக்குலத்தின் பாவத்தைத் தாமே சுமந்து, தண்டனையாகிய மரணத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு, மனுமக்களைப் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இம்மையில் சமாதானத்தையும் மறுமையில் நித்திய ஜீவனை (மோட்சம்)-யும் பெற்றுத் தரச் சித்தமானார். இந்த மாபெரும் சத்தியத்தைப் பரிசுத்த வேதாகமம் வரலாறாகவும், திருக்குறள் நற்செய்தியாகவும், சைவ சித்தாந்தம் பக்திப் பாடலாகவும் தெளிவாய்க் கூறியிருப்பதைப் பார்க்கிறோம்.

I. திருமறையில்

கடவுளே மனிதனாகப் பிறந்தார்

பரிசுத்த வேதாகமத்தில், கெட்டுப்போன மனுமக்களை இரட்சிப்பதற்கு இறைவன் மனுவுருவெடுத்து உலகுக்கு வந்த வரலாறு மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தேவகுமாரன் பாலஸ்தீனா விலுள்ள பெத்லகேம் என்ற ஊரில் பிறந்தபோது, ஒரு தேவதூதன் மேய்ப்பர்களிடம் மகிமையோடு தோன்றி, எல்லா ஜனத்திற்கும்

மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று அறிவித்தான். உடன்தானே பரம சேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி பாடல் பாடி தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (*லூக்.2:10,11,14*).

செய்தி கிழக்கே

பரலோக தேவனின் பிறப்பு கிழக்கிலும் அறிவிக்கப்பட்டதைப் பார்க்கிறோம். கிழக்கே ஒரு விசேஷித்த நட்சத்திரத்தின் மூலம் ஞானிகளுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டு, மூன்று சாஸ்திரிகள் நீண்ட தூரம் நீண்ட நாட்களில் நடந்து சென்று பாலகனைப் பார்த்துப் பணிந்து கொண்டதையும் திருமறையில் வாசிக்கிறோம் (*மத் 2 அதி*).

செய்தி வரலாற்றில்

மனிதனாய் பிறந்த தேவ குமாரனின் பிறப்பு, ஊழியங்கள், அவரது உபதேசங்கள், அவர் நிகழ்த்திய அதிசயங்கள் அவர் பட்ட பாடுகள், அவர் மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்குச் செல்லுதல் ஆகிய அனைத்தும் அவரோடு கூட இருந்தவர்களால் எழுதப்பட்டன. அதைப் பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நற்செய்தி நூல்களாக வாசிக்கிறோம்.

உலகத்தில் வந்த தேவ குமாரனாகிய இயேசு தமது சீஷர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் தம்மைப் பற்றி தெளிவாகப் பேசினார். அவர் சிலுவையில் அறையப்படும் நாளுக்கு முன் தம்முடைய சீஷர்களிடம் சொன்னதாவது: நீங்கள் என்னைச் சினேகித்து நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிற படியினால், பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். (*யோவா.16:27,28*).

II. திருக்குறளில்

முதலாம் நூற்றாண்டில் ஒரு விசேஷித்த நட்சத்திரம் மூலம் மேற்கில் இறைவன் மனிதனாய்ப் பிறந்த செய்தி இந்து தேசத்துக்கு

அறிவிக்கப்பட்டதைப் பார்த்தோம். அதுபோல மறுபடியும் இறைவன் இரட்சிப்பை நிறைவேற்றி முடித்தபோதும், நம் தேசத்திற்கு அப்போஸ்தலர் தோமாவால் செய்திகள் அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்டதே திருக்குறள். அந்த ஒப்பற்ற நூலிலும் மனிதனாகப் பிறந்த இறைவனின் செய்திகளை வாசிக்கிறோம்.

1. ஒழுக்கத்து நீத்தார் கு.21

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

இங்கு இறைவன் ஒழுக்கத்து நீத்தார் என்று குறிப்பிடப்படுகிறார். அதாவது, ஒழுக்கம் கெட்டுப்போன உலக மக்களை மீட்டு, ஒழுக்க நெறியை நிலைநாட்டுவதற்காக, கடவுள் என்ற தமது மகிமையை நீத்து, உலகுக்கு வந்த பெருமை நூல்களுக்கெல்லாம் தலையாகிய பனுவல் அதாவது திருமறை துணிவாய்க் கூறுகிறது என்று கூறப்படுகிறது. இறைவனின் பெருமை குறித்தே திருக்குறளும் கூறுவதால் திருக்குறளும் தலையாய நூலாக விளங்குகிறது.

கெட்டுப்போன மனிதரை ஒழுக்கத்தில் (இரட்சிப்பில்) கொண்டு வருவதற்காகத் தமது பரலோக மேன்மைகளை நீத்து அல்லது துறந்து (தியாகம் பண்ணி) உலகுக்கு வந்த இறைவன் ஒழுக்கத்து நீத்தாராக எடுத்துக் காட்டப்படுகிறார்.

2. பொறிவாயில் ஐந்தவித்தான். கு.6

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்"

இறைவன், பொறியாகிய கொலைக்கருவியில் (சிலுவையில்) தம் ஐம்புலன்களையும் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்ற காரணத்தால் அவருக்குப் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற பெயர் வழங்கப் படுகிறது. அவர் எதற்காகத் தம்மைப் பலியாக்கினார் என்றால், மனிதரை பாவத்துக்குள்ளாக்கிய சாத்தானின் ஆதி பொய்யைத் தீர்த்து (ஒழித்து) மனிதனுக்கு ஒழுக்க நெறி. 'பொய் தீர் ஒழுக்க நெறி' உண்டாக்கு வதற்காக என்று காணப்படுகிறது. இங்கும் திருமறைச் சத்தியங்கள்

அதாவது மனிதனைத் தூண்டிய சாத்தானின் ஆதி பொய் சுட்டப் படுவதைப் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல, அந்தப் பொய் தீர் ஒழுக்க நெறியில் நடப்பவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது. சத்தியங்கள் ஒவ்வொன்றும் தெளிவாய் விளக்கப் படுகின்றன. நாம் செய்ய வேண்டியதென்ன...? நமக்காக இந்த உலகத்தில் தம்மையே ஐந்தவித்தானாகப் பலியாக்கிய கடவுளை பற்றிக்கொள்வதே ஆகும்....!

3. அறவாழி அந்தணன் கு.8

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

உலகத்தில் மனிதனாக வந்த இறைவன் அறவாழி அந்தணன் அதாவது அறத்தைக் (மீட்பு) கடலாகக் கொண்ட இறைவன் என்று 8-வது குறட்பாவில் கூறப்படுகிறது. அவர்பாதம் சேர்ந்தவர்க்கல்லாமல் பிறஆழி (மறஆழி) அதாவது பாவக்கடலை நீந்திக்கடக்க முடியாது. ஏனென்றால் இவரே மனிதரின் பாவத்தைத் தீர்க்க உலகில் வந்த இறைவன்.

4. இருள்சேர் இருவினை சேராதவர் கு.5

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

அவர் இருள் சேர் இருவினையும் சேரா, அதாவது நரகத்தில் சேர்க்கும் இருவினைகளாகிய ஜென்மபாவமும், கருமபாவமும் சேராதவராக உலகுக்கு வந்தாரென்று இக்குறட்பா கூறுகிறது. மட்டுமல்ல, அவர் மனிதருக்கு ஒரு விசேஷித்த பொருளாகிய மீட்பை உலகுக்குக் கொண்டுவந்தவர் ஆவர்.

5. இருமை வகை தெரிந்தவர் கு.23

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

அவர் இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டவர். அதாவது இம்மை, மறுமை ஆகிய இருமையும் வகை தெரிந்தவராய் ஈண்டு

அறம்பூண்டார். அதாவது தம்மையே பலியாகக் கொடுத்து அறமாகிய மீட்பைச் சம்பாதித்தவர்.

6. வார்த்தை மாம்சமானவர் கு.28

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

அவர் நிறைமொழி மாந்தர். அதாவது மொழி அல்லது வார்த்தை மாம்சமானவர் (திருமறையில் கூறப்பட்டபடி) அவர் பெருமை உலகத்தில் அவரால் கூறப்பட்ட வார்த்தைகள் அடங்கிய மறைமொழி அதாவது திருமறை அழகாய்க் காட்டுகிறது. இறைவனே உலகில் வந்தார் என்றும் அவர் வாழவேண்டிய அறநெறியை, அதாவது மீட்பின் பாதையை மக்களுக்குப் போதித்தார் என்றும் தெளிவாய்க் கூறப் படுகிறது.

7. அவர் உயிர்த்தெழுந்தவர் கு.25

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

உலகில் தம் ஐம்புலன்களையும் சிலுவையில் பலியாக்கிய கடவுளின் (ஐந்தவித்தான்) உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு தேவதூதனே சாட்சியளித்து, அங்கு சென்ற ஸ்திரீகளிடம் அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார். அவரை வைத்திருந்த இடத்தை வந்து பாருங்கள் (*மத்.28:5,6*) என்று கூறிய கூற்றும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

8. துறந்தாரின் உயிர்த்தெழுந்த பெருமை கு.22

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

அதாவது, உலகத்தில் இதுமட்டும் இறந்தவர்களை எண்ணிப்பார்த்தால், உலகில் மனிதனாக வந்த நீத்தாராகிய இறைவனின் (துறந்தாரின்) பெருமை வெளிப்பட்டுவிடும். ஏனென்றால் இறந்தவர்களில் அவர் மட்டும் காணப்படமாட்டார். காரணம் அவர் உயிர்த்தெழுந்துவிட்டார். அது அவர் பெருமைக்கு அடையாளம் என்று இலக்கியச் சுவையோடு இயேசுவின் உயிர்த்தெழுதல் விளக்கப் படுகிறது.

9. நியாயாதிபதியாக வருபவரும் அவரே கு.29

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

இங்கேயும் இலக்கியச் சுவையோடு, உலகுக்கு வந்த நீத்தார் (இறைவன்) உலகத்தாரை நியாயம் தீர்க்க வருவது விளக்கப்படுகிறது. அதாவது எண்ணற்ற தெய்வீக குணங்களைக் குன்றாகக் கொண்டு அதன் சிகரத்தில் ஏறிநிற்கும் இறைவனுக்கு ஒரு நாள் வெகுளி (கோபம்) ஏற்படப்போகிறது. அப்போது அக்கோபத்துக்கு முன், ஒரு நொடி கூட எவரும் நிற்கமுடியாது. அதுதான் திருமறையில் விவரிக்கும் நியாயத்தீர்ப்பின் நாள். அவர் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் நீதியுள்ள நியாயாதிபதியாகவும் வரப்போகிறார்.

இதுபோல, மனிதரை மீட்க உலகத்தில் வந்த இறைமகன் செய்த, சொன்ன அனேகக் காரியங்களைத் திருக்குறள் முழுவதிலும் பார்க்கலாம் *(திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே பார்க்க)*.

III. சைவ சித்தாந்தங்களில்

கிழக்கே இந்து தேசத்தில் முதலாம் நூற்றாண்டில் தோமாவால் கொண்டுவரப்பட்ட சத்தியம் சான்றோர் சபையாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு மனிதரின் பாவத்தைப் பரிகரித்து அவர்களைப் பரலோகத்தில் கொண்டு சேர்க்கக் கடவுள் மனிதனாகப் பிறந்தார் என்ற சத்தியம் சைவ சித்தாந்த நூல்களில் விளக்கப்படுவதைத் தெளிவாகப் பார்க்கிறோம்.

1. இறவா இன்பத்தில் சேர்க்க இறைவன் பிறந்தார்

போற்றிப்ப∴றொடை-69

"இறவா இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்தான்"

அதாவது,

நம்மைப் பாவத்திலிருந்து மீட்டு, இறவா இன்பத்தில் அதாவது நித்திய பேரின்பத்தில் கொண்டு சேர்ப்பதற்காகப் பிறவாமுதல்வனாகிய இறைவன் மனிதனாகப் பிறந்தார் என்பதை இந்தச் சைவ சித்தாந்தப் பாடல் தெளிவாகக் கூறுகிறது.

ஆனந்த பாக்கியம்

நம்மை நித்தியப் பேரின்ப வீட்டில் சேர்ப்பதற்கு இந்த உலகத்தில் மனிதனாக வந்ததாக சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படும் கடவுள் யார்......? அவர் தான் அந்த ஒரே கடவுள். உலகில் வந்த அவர் யார் என்ற சத்தியத்தை அறிந்து அவரைப் பற்றிக் கொள்வதே பெரும் ஆனந்த பாக்கியம்!!

2. கடவுள் தம்மைத் தாமாகவே தந்தார்

திருவுந்தியார் - 1

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்த தென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற

அதாவது,

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கில் முதல் சாஸ்திரமான திருவுந்தியாரில் கூறுவதாவது: உருவமே இல்லாத மெய்ப்பொருளாம் இறைவன், மனித உருவம் எடுத்தாரென்றும் , அவர் தாமாகவே தம்மைத் தந்தார் என்றும், உந்தீ பற அல்லது ஊக்கமாய் எடுத்துக் கூறு. இந்த சத்தியத்தைத் தயங்காமல் அடித்துப்பேசு என்று ஊக்குவிப்பது கவனிக்கத்தக்கதே.

நாம் செய்ய வேண்டியதென்ன?

கடவுள் தம்மையே நமக்காகத் தந்துவிட்டார். நாம் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டோமா...? என்பது தான் கேள்வி! அவரைத் தப்பாமல் தேடிக் கண்டுபிடித்து அவரிடம் சேர்ந்துகொள்வோம்! நிச்சயம் நமக்கும் மீட்பு உண்டு. எந்தப் பாவமென்றாலும் மன்னித்து மீட்டுக்கொள்ளவே, அவர் மனிதனாக வந்தார். தயங்காமல் அவரைப் பற்றிக்கொள்வோம்!

3. மனிதனை முக்தி சேர்க்க இறைவன் வந்தார்

திருக்களிற்றுப்படியார் - 93

முக்தி முதற்கொடிக்கே மோகக்கொடி படர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங்கத்தியினால்
மோகக் கொடியறுக்க முக்திப்பழம் பழுக்கும்
ஏகக் கொடியயெழுங்காண் இன்று

அதாவது

தூய்மையாய் (முக்தி) பரலோக வாழ்வுக்காகப் படைக்கப்பட்ட ஆதி மனிதனில், மோகமாகிய பாவம் படர்ந்துவிட்டது. அத்தீமையை அகற்றி, மனிதனை மறுபடியும் முக்தி (மோட்சம்) சேர்க்க இறைவனே உலகத்தில் அவதரித்தார். *(மேலும் விளக்கத்துக்கு குமாரனாகிய இயேசு, விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்தம் பக்கம் 101 முதல் பார்க்க)*

இறைவன் முக்தி தருவார்

இங்கேயும் ஆதி மனிதன் பாவத்தால் கெட்டுப்போனதையும், மனுக்குலம் அனைத்திற்கும் பாவம் படர்ந்துவிட்டதையும், மனிதனை மீட்டெடுத்து அவனுக்குப் பரலோக பாக்கியத்தை அளிப்பதற்காக இறைவன் உலகத்தில் மனிதனாக வந்ததையும் குறித்துத் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளதே...! இந்த விலையேறப்பெற்ற மீட்பை நாம் பெற்றுக்கொண்டோமா...? பரலோக மோட்சம் சென்றடைவோமா..? சிந்திப்போம்! இதுவரை அந்தத் தெளிவு (நிச்சயம்) நமக்குக் கிடைக்கவில்லையென்றால்..., தம்மையே நமக்காகத் தந்த கடவுளிடம், அமைதியாய் அமர்ந்து மன்றாடுவோம். அவர் இம்மையில் அமைதி வாழ்க்கையையும், மறுமையில் முக்தியையும் நிச்சயம் தருவார்.

4. கடவுள் குருவாக உலகத்தில் அவதரித்தார்

சிவஞானபோதம் - சூத்திரம் 8

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

அதாவது

ஆன்மாவானது (மனிதன்) உலகத்தில் ஐம்புலன்களாகிய வேடர்களின் மத்தியில் (பாவ இச்சைகளில்) சிற்றின்பங்களில் சிக்கி மதிமயங்கி நின்றது. இந்தப் பரிதாப நிலையைக் கண்ட இறைவன் ஆன்மாவைத் தேடி உலகில் ஒரு குருவாய் வந்து, தவத்தால் (சிலுவைப் பலியால்) உணர்த்தும்போது, கறைப்பட்ட ஆன்மா உணர்வடைந்து, ஒரு புது சிருஷ்டியாய் மாறுகிறது (மனந்திரும்புகிறது அல்லது மறுபிறப்படைகிறது). அந்நிலையில் இறைவன் பாதம் சென்றடைந்துவிடுகிறது.

கொடுக்கப்படும் ஓர் உதாரணம்

இதன் சாரத்தை சிவஞானபோதம் சில உதாரணங்களால் அழகாய் விளக்குவதைப் பார்க்கிறோம். அதில் ஒன்று சுருக்கத்தில்:- காணாமற்போன ஓர் அரசனின் மகன் வேடர்களிடம் சிக்கி, அவர்களோடு ஒரு வேடனாகக் காட்டில் வாழ்கிறான். அதை அறிந்த அரசன் மகனை மீட்கத் துடிக்கிறான். அதற்காகத் தானும் ஒரு வேடனாக மாறி, காட்டில் சென்று, மகனோடு வாழ்ந்து, அவன் யார் என்பதை உணர்த்தி, அவனை மீட்டுக்கொள்கிறான்.

இது திருமறை கருத்தின் விளக்கமே

கெட்டுப்போன மனிதரை மீட்க இறைவனும் இதையே செய்திருக்கிறார். கெட்டுப்போன நம்மை மீட்டு, பரிசுத்தப்படுத்தி, அவரோடு சேர்க்க முதலாம் நூற்றாண்டில் உலகில் மனிதனாக வந்தார். நம்மைத் தூய்மைப்படுத்துவதற்காக, தவமாகிய சிலுவைப் பலியைத் தாமே செலுத்தினார். நம்மை அவரோடு சேர்த்துக்கொள்வதற்காக மீண்டும் வருவேன் என்று சொல்லி, பரத்துக்குச் சென்றிருக்கிறார். அவர் மீண்டும் வருவார். நாம் அவரைப் பற்றிக்கொள்வோமா....?

பூமிக்கு வந்த இறைவன் சொன்ன வார்த்தை

ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் *(யோ 14:2,3)*

அவர் சொல்லிச் சென்றபடி அதிசீக்கிரம் வருவார். ஆனால் நாம் அவரோடு செல்ல பரிசுத்தமடைந்து, ஆயத்தமாயிருக்கிறோமா...? என்பது தான் முக்கியம்! ஆயத்தமாயிருப்பது எப்படி? உலகில் வந்து பலித்தவம் செய்து, இரட்சிப்பை ஏற்படுத்திய கடவுளிடம் அந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டால் போதும். இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது எப்படி...? அதற்கு அவரிடம் திறந்த மனதோடு வருந்தி வேண்டிக்கொண்டால் போதும். உடன்தானே நம் உள்ளத்தில் அந்த மீட்பின் சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். தயங்காமல் பெற்றுக் கொண்டு அமைதியடைவோம்!

5. அவர் வந்த பெருமையை இகழ்ந்து விடாதே

போற்றித்திரு அகவல் 75-77

அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்றிக ழாதே

அதாவது,

இந்தச் சைவ சித்தாந்தப் பாடல், இந்துக்கள் (இந்து தேச மக்கள்) அனைவரையும் இரங்கிக் கேட்டுக்கொள்வதாய் உள்ளது. என்ன வென்றால், பரலோகத்துக்குரியவரான கடவுள் ரூபமில்லாதவர் தான். ஆனாலும் அவர் கெட்டுப்போன மனிதருக்கு நித்தியஜீவனைக் கொடுத்து முக்திசேர்க்க, குருவாக, **இவ்வுலகத்தில் வந்த** பெருமையை அற்பமானதாய் எண்ணி, சிறுமையாய் இகழ்ந்து பேசிவிடாதே என்று வேண்டிக்கொள்கிறது.

உருவமில்லாத, அதாவது ஒருவராலும் காணக்கூடாத இறைவன் உலகில் வந்து பிறப்பாரோ என்ற சந்தேகத்தோடு அதைச் சிறுமைப்படுத்தி இகழ்ந்துவிட வேண்டாம் என்று கூறப்படுவதைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் அவர் அளிக்கும் மீட்பின் பெருமையை அறிந்துகொண்டு, அதை வாஞ்சையோடு பெற்றுக்கொள்வது எத்தனை பாக்கியம்!!

6. கன்னியில் பிறந்தார் இறைவன்

நம்மாழ்வார் திருவிருத்தம் 1

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா

அதாவது,

பொய்யான ஞானம், கெட்டுப்போன ஒழுக்கம், பாவம் நிறைந்த உடம்பு ஆகியவற்றால் கெட்டுப்போன நாங்கள், மேலும் இந்நிலையில் தொடராதபடிக்கு, எங்களை மீட்டு, நித்திய ஜீவன் அளிப்பதற்காக, ஒரு

கன்னியின் வயிற்றில் என்னைப் போன்ற மனிதனாய்ப் பிறந்தீரே எல்லாம் வல்ல இறைவா...! என்று ஆனந்தத்தையும், வியப்பையும் காண்பிக்கிறது இந்த வைணவப் பாடல்.

ஒரு சான்றோரின் துதியே

இறைவன் செய்த எல்லாவற்றையும் அறிந்துகொண்ட ஒரு பக்தனான மனிதன் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவதைத் தான் நாம் இந்தப் பாடலில் பார்0க்கிறோம். கெட்டுப்போன என்னை மீட்டெடுத்து, உம்மைப்போல் தூய்மைப்படுத்தி, உம்மோடு மோட்சத்தில் சேர்த்துக்கொள்ள, பரலோக சிலாக்கியங்கள் அனைத்தையும் தியாகம்பண்ணி, ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்தீரே... இறைவா உமக்கு நான் கைமாறு என்ன செய்வேன்...? முடியாது... நன்றி மட்டும் சொல்லுவேன்! என்று ஏங்குகிறார்.

நாம் செய்வதென்ன?

அந்த ஏக்கம் நம் உள்ளத்திலும் எழும்புகிறதா...? அதுதான் தேவை. அனேகம் இந்து தேசபக்தர்கள் கூறி பாடியிருப்பதைப் பார்த்தோம். அவர்கள் எல்லாரும் அன்று தங்களுக்குக் கிடைத்திருந்த அனுபவத்திலிருந்து நம் வாழ்விலும் பிரயோஜனப்படுவதற்காகக் கூறிச் சென்றார்கள். பின்பு பல்வேறு தடைகளும் மறைகளும் எழுந்தன. சத்தியங்கள் மறைக்கப்பட்டன. ஆனால் இப்போது சத்தியத்தை அறியும் வாய்ப்புகளை நாம் பெற்றிருக்கிறோம். மண்ணில் வந்த இறைவனையே பற்றிக்கொள்வோம், விண்ணில் சென்று இறைவனோடு இன்பமாய் மகிழ்வோம்!

அதி : 8

மீட்கப்பட்டோர் இறைவனோடு இணைதல்

(திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்)

மறுமையில் பேரின்ப வீடு

மனிதரை மீட்க உலகத்தில் வந்த இறைவன் தம்மையே பலியாக்கி, மனுக்குலத்துக்குப் பெற்றுத் தந்ததே இரட்சிப்பு என்னும் மீட்பு. அவர் காட்டிச்சென்ற இரட்சிப்பின் பாதையில் அல்லது அறவழியில் செல்லும் மீட்கப்பட்ட சான்றோர் சென்றடைவது பேரின்ப வீட்டில் இறைவனிடம் ஆகும். இந்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதோர் சென்றடையும் இடம் நரகாக்கினியாகும்.

மறுமையின் வாழ்வுக்காக வைக்கப்பட்டிருக்கும் இரு இடங்களைக் குறித்தும், அங்கு கொண்டுசெல்லும் இரு பாதைகளைக் குறித்தும், அங்கு செல்லும் இரு கூட்டத்தாரைக் குறித்தும், திருமறையும் திருக்குறளும் சைவ சித்தாந்தமும் விளக்கிக் கூறுகின்றன.

I. திருமறைக் கூற்று

இரு வழிகளைக் குறித்துத் திருமறை, கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் *(மத்.7:13,14)* என்று கூறுகிறது.

சிற்றின்பம், பேரின்பம்

மகிமையான பேரின்ப வாழ்வைப் பரலோக வாழ்வு, மோட்ச வாழ்வு, பேரின்ப வாழ்வு, மேலோக வாழ்வு என்றெல்லாம் அழைக்கிறோம். சந்தோஷம் நிறைந்த இந்த மேலோக இன்பத்தை அடைய விரும்புவோர்,

இவ்வுலகத்திலேயே அதற்கு ஆயத்தப்பட்டு, இறைவனோடு நெருங்கி அவ்வின்பத்தை அடைய ஆசைப்படுவார்கள். இவ்வுலக இல் வாழ்க்கையில் கிடைப்பது சிற்றின்பம். மேலோக இல்வாழ்க்கையில் கிடைப்பது பேரின்பம். இவ்வுலக இல்வாழ்க்கையில் ஆண் பெண் இருபாலரை இன்பத்தில் இணைப்பது காதல் எனலாம். மேலோக வாழ்க்கையில், அதாவது பேரின்ப வாழ்வில் மணவாட்டி சபையை அல்லது மீட்கப்பட்டவர்களைக் கடவுளோடு இணைப்பது பேரின்பக் காதல் எனக் குறிப்பிடப்படுகிறது.

பேரின்பக் காதல்

இறைவனின் அருள் பெற்றவர்கள் அவர் அன்பைச் சுவைக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட மனிதருக்கும் (ஆன்மா) இறைவனுக்கும் இடையில் ஓர் நெருக்கம் ஏற்படுகிறது. அந்த உறவினால் ஏற்படும் இன்பமும் பெருகிக்கொண்டே வருகிறது. ஆனால் அந்த இன்பம் இவ்வுலக வாழ்க்கையில் நிறைவுபெறுவதில்லை. மாறாக, இவ்வுலக வாழ்க்கைக்குப் பின் மறுமையில் மட்டுமே நிறைவுபெறுகிறது. இவ்வாறு ஒரு ஆன்மா தேவ அன்பை ருசிக்க ஆரம்பித்தபின், மறுமையில் இறைவனோடு இணைந்து பேரின்பம் அனுபவிக்கும் மட்டும், அந்த ஆன்மா இறைவனோடு அனுபவிக்கும் இன்பத்தை வெளிப்படுத்துவதே பேரின்பக் காதல் என்பது.

பேரின்பக் காதலனும் காதலியும்

இறைவன் மக்களின் அகக்கண்களைத் திறந்து, அவர் அன்பைச் சுவைக்கச் செய்கிறார். இவ்வாறு ஆன்மாவுக்கும் அல்லது மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையே ஏற்படும் இத்தகைய உறவு, ஒரு நீண்டகால உறவாகி விடும். ஏனென்றால் இவ்வுறவினால் கிடைக்கும் பேரின்பம் முழுமையாக இவ்வுலக வாழ்வுக்குப் பின்னால் மட்டுமே ஏற்படுகிறது. எனவே, இவ்வுலகத்தில் ஆன்மா (மனிதன்) பேரின்பக் காதலியாகவும், இறைவன் பேரின்பக் காதலராகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

சிற்றின்பக் காதலால் விளக்கப்படுகிறது

விவிலியத்திலும் சிற்றின்பக் காதல் நிகழ்வுகளைக் கொண்டு, பேரின்பக் காதல் விளக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது. பழைய ஏற்பாட்டில் சாலொமோன் ஞானியால் எழுதப்பட்ட உன்னதப்பாட்டு

இதைக் காட்டுகிறது. அங்கு பேரின்பக் காதலராக இறைவனும், பேரின்பக் காதலியாக ஆன்மா (மனிதன்) -வும் கூறப்படுகின்றனர். இது திருக்குறளில் மூன்றாவது பகுதியான இன்பத்துப் பாலோடு மிகவும் இசைந்ததாகக் காணப்படுகிறது.

திருமறை புதிய ஏற்பாட்டில்

புதிய ஏற்பாட்டில், இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மணவாள னாகவும், அவருடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட சபை மணவாட்டி யாகவும் விவரிக்கப்படுகிறது. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் (*எபே.5:23*). மேலும் எபேசியர் 5:31-ல், இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன் என்று கூறப்பட்டிருக்கிறது.

அதாவது மணவாளனாகிய தேவ குமாரனோடு மணவாட்டி யாகிய சபை சேர்ந்து எப்பொழுதும் ஒன்றாய் இருப்பதே இங்கு காட்டப்படுகிறது.

பேரின்ப வீட்டைக் குறித்து இயேசு

இரட்சகராகிய இயேசு தம் சீஷரோடு கூறியதாவது: ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் (*யோவா.14:2,3*) என்பதே. இது நித்திய வீடு, புதிய எருசலேம், பரம எருசலேம் தேவனுடைய நகரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

இறைவனோடு இணைதல் குறித்து பரிசுத்த பவுல்

இறைவனோடு இணைதல் குறித்து பரிசுத்த பவுல்:- கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்... அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும்... அவரோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்

கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் *(1தெச.4:16,17)* என்று கூறுகிறார்.

II. இறைவனோடு இணைதல் குறித்து திருக்குறள்

திருக்குறளில் மூன்றாம் பகுதியான இன்பத்துப்பால், பேரின்பக் காதலராகிய இறைவனிடம் பேரின்பக் காதலியாகிய ஆன்மா பெற்று அனுபவிக்கும் பேரின்பத்தைக் குறித்து விளக்குவதாய் உள்ளது. இப்பகுதி இறைவன்பால் இழுக்கப்படும் ஆன்மா பற்பல இன்னல்களைத் தாண்டி, இறையின்பத்தைச் சுவைத்து இறுதியில் இவ்வுலக வாழ்க்கைக்குப் பின் இறைவனோடு இணைந்து பேரின்பத்தில் நீடுவாழ்வு பெற்றுக்கொள்வதை இறைவனோடு 'கூடிமுயங்கப்பெறும்' சிறந்த அனுபவமாகக் கூறி முடிக்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு அறமாகிய இரட்சிப்பைக் குறித்து அறத்துப்பாலும், பொருளாகிய மனிதன் அதை பயன்படுத்தவேண்டிய நல்முறைகளைக் குறித்துப் பொருட்பாலும், அதைப் பயன்படுத்துபவர்கள் அடையும் பேரின்பத்தைக் குறித்து இன்பத்துப்பாலும் விளக்கிக் கூறுகின்றன.

திருக்குறளில் களவியல், கற்பியல்

திருக்குறளின் இன்பத்துப்பால் ஆரம்பிப்பதே, 'களவியலில்' ஆகும். கடவுளைப் பற்றிய சிந்தனையோ, அறிவோ இல்லாத - அதாவது கிறிஸ்தவத்துக்கு முற்றிலும் எதிரான ஒரு சமூகத்திலுள்ள ஒரு குடும்பத்தில் உள்ள, ஒரு ஆன்மா (ஒருவன்) சற்றேனும் எதிர்பாராத நிலையில், ஓர் ஊழியரின் (சான்றோரின்) வாய்மையைக் (நற்செய்தியை) கேள்விப்படுகிறான். இறைவன் அற்புதமாய் அவன் ஆன்மாவில் கிரியை செய்கிறார். ஒரு பெரும் ஈர்ப்பு சக்தி அவன் உள்ளத்தின் ஆழத்தில் நிறைந்துவிடுகிறது. அந்த இறை அன்பு சொல்லொண்ணா ஏக்கத்தை ஏற்படுத்துகிறது. இறைவனுக்கும், அந்த ஆன்மாவுக்கும் பேரின்பக் காதல் ஆரம்பித்துவிட்டது.

களவியல்

இந்நிலையில் ஆரம்பிக்கிறது களவியல். இறைச்செய்தி (தேவ அன்பு) அவனை அமைதியாயிருக்கவிடவில்லை. இழுத்துச் செல்லும் அந்த அன்பின் பின்னால் விரைந்து செல்கிறான். இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று இறை இன்பம் சுவைக்கத்

தொடங்கிவிட்டான். மூளிப்பாட்டு, முணுமுணுஜெபம், சந்தோஷம், மனக்களிப்பு, உற்சாகம் கூடிக்கொண்டே செல்கிறது.

ஒருவருக்கும் சொல்லாமல், ஒரு ஊழியரிடம் வேதப்புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்கிறான். களவாய் (யாரும் காணாமல்) வேத வாசிப்பு, ஜெபம் வளர்ந்து அவனில் ஒரு பெரும் மாற்றம்!! எல்லாரும் பார்க்க, கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். சினிமா இல்லை, குடி இல்லை, தள்ளுமுள்ளு இல்லை, பழைய அட்டகாசங்கள் ஒன்றுமில்லை. அமைதி, புன்சிரிப்பு, மகிழ்ச்சி!!

ஊரார் கவனிக்கின்றனர்

இவைகளைக் கவனித்த ஊர் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மாற்றத்தின் காரணம் அறியத் தொடங்கினார்கள். பிசுபிசுப்பும், குசு குசுப்பும் முற்றிவிட்டது. ஊரார் பேசத் தொடங்கினார்கள். 'தூரமான சபைக்குப் போகிறான்! நற்செய்திக் கூட்டங்களுக்குப் போகிறான்! ஜெபிக்கிறான். நமக்கல்லவோ அவமானம்!' குடும்பத்தில் பெற்றோரிடம் அறிவித்தார்கள்! ஒரே புரளியும், குழப்பங்களும், அடிதடிகளும்!! ஆனால் அந்த ஆன்மா இப்போது தீர்மானித்துவிட்டது: என்னதான் நேர்ந்தாலும், என்னை இரட்சித்த இறைவனை (இயேசுவை) விடவே மாட்டேன்!!... முயற்சித்த ஊரார் இப்போது அடங்கிவிட்டார்கள். எங்காவது போய்த் தொலையட்டும்! ஆன்மா நிம்மதிப் பெருமூச்சோடு இறைமக்கள் அதிகமாய் வாழும் பகுதியில் ஒரு சபையில் சேர்ந்து வாழ்க்கையைத் தொடங்குகிறார். இதுதான் களவியலின் சாரம்.

கற்பியல்

திருச்சபையில் இணைந்து இறையின்ப வாழ்க்கை நடத்தும் (ஆன்மாவின்) மனிதனின் தூய்மையான இறைவாழ்க்கையைச் சித்தரிப்பது தான் கற்பியல். இம்மை வாழ்வில் ஒரு கிறிஸ்தவன் அல்லது இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளை இறைவனோடு வாழும்போது ஏற்படும் நிகழ்வுகள் இங்கு காட்டப்படுகிறது. மகிழ்ச்சி, உற்சாகம்! சரிதான்,ஆனால் திடீரென்று சோகம்! இறைவன் கைவிட்டுவிட்டாரே...? திடீர் கலக்கம்! சில வினாடிகளில் பதிலும் வந்துவிடுகிறது. இல்லை, இல்லை இறைவன் என்னைக் கைவிடவேமாட்டார். மறுமையின் வாழ்வுக்காகப் பேரின்பக் காதலர் பேரின்பக் காதலியை ஆயத்தப்படுத்துகிறார். எந்நிலையிலும் கற்பைக் காத்துக்கொள்ள

வேண்டும். முடிவில், மறுமையின் பேரின்பக் காதல் நிறைவடைகிறதை யும் பார்க்கமுடிகிறது!

பேரின்பம் அடையும் நிலைகள்

திருக்குறளில் 109 முதல் 133 வரையிலான அதிகாரங்களில் திருவள்ளுவர் பேரின்பக் காதலன் பேரின்பக் காதலி ஆகியோர் தங்கள் காதலை வளர்த்து, பேரின்பம் அடையும் நிலைகளைப் படிப்படியாக விளக்குவதைப் பார்க்க முடிகிறது.

ஊடலுக்குப்பின் உவகை

இறைவனோடுள்ள பேரின்பக் காதலானது, ஊடல் நேரங்களில் அதாவது சில பிரிவு நேரங்களில் (இறைப்பிரசன்னம் அனுபவிக்க முடியாத நேரங்களில்) தோல்விபோலத் தென்பட்டாலும் இறுதியில் வெற்றியே ஆகும். ஏனென்றால், கூடலினால் (இறைவனோடு ஒன்று சேர்வது) அனுபவிக்கும் இன்பம் சொல்லிமுடியாததாகும்.

இறைவனோடு இணையும் பேரின்பம் - கு.1133

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

இங்கு காமம் என்ற சொல் ஆசை அல்லது ஆர்வம் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது. இது பேரின்பக் காதலின் பேரார்வ நிலையைக் குறிக்கிறது. ஊடுதல் என்ற சிறு பிணக்கம் (சோர்பு) உலக வாழ்வில் பேரின்பக் காதலரோடு ஏற்படுவது ஆகும். அது காதல் வளர்ச்சிக்குத் தடையாயிராமல், பேரின்பக் காதல் பொங்கி வளர்வதற்கு ஊக்கம் அளிப்பதாய் விளங்குகிறது.

'அதற்கின்பம்'

இம்மை வாழ்வில் இறைவனோடுள்ள பேரின்பக் காதல் வாழ்க்கையில் ஊடலும், கூடலும் உண்டு. அதாவது சிறு பிரிவு அல்லது சிறுபிணக்க நேரங்கள் உண்டு. அந்நேரங்களில் கலக்கம், சந்தேகம், இறைவன் கைவிட்டாரோ என்ற ஏக்கம்!! எல்லாமே ஒரு நொடியில் அதாவது கூடல் நேரங்களில் பறந்து போய்விடுகிறது. ஊடல் காதலுக்கு ஒரு மேலான இன்பம் தான்! ஆனால் 'அதற்கின்பம்' அதை விட மேலான இன்பம் ஒன்றுண்டு. அதுதான் மறுமையில் கிடைக்கும் நித்திய

பேரின்பம்! அது தகுதியுடையவர்க்கு மட்டும் கிடைக்கும் இன்பமாகும். அதுவே இறைவனோடு 'கூடி முயங்கப் பெறுபவர்'களுக்கு, அதாவது இறைவனோடு ஒன்றித்து வாழத் தகுதி பெற்றவர்களுக்குக் கிடைக்கும் மேலான இன்பமாகும்.

இதை வேண்டுவோர் அறனல்லாதவற்றைச் செய்யார்

"சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்" (கு 173)

அதாவது,

சிற்றின்பத்தை விரும்பி அதில் மூழ்கி இருந்து, அறன் அல்லாதவற்றை அதாவது இரட்சிப்பின் பாதையை விட்டு விலகி தங்கள் விருப்பப்படி உலக உல்லாசத்தில் ஜீவிப்பவர்களுக்கு, மற்றின்பம், அதாவது மேலான பேரின்பம் (இறைவனோடு கூட முயங்கப்பெறும் இன்பம்) கிடைக்காது என்கிறது இக்குறள். அதாவது 'மற்றின்பம்', மேலான பேரின்பம். விரும்புவோர் அறவழிக்கு மாறான சிற்றின்பச் செயல்களைச் செய்யமாட்டார்கள் என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

இது, இறைவனோடு இணைதல் எத்தகைய இன்பமான தென்பதை நமக்கு உணர்த்துகிறது.

III. இறைவனோடு இணைதல் குறித்து சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் தலையாய் விளங்கும் சிவஞானபோதத்திலேயே இறைவனால் மீட்கப்பட்டவர்கள் இறைவ னோடு இணைவதைக் குறித்து அழகாய் விளக்கப்பட்டிருக்கிறது.

முதல் மனிதன், முதல் ஸ்திரீ, உலகம் ஆகியவற்றை, கடவுள் தூய நிலையில் படைத்தாரென்றும், ஆனால் படைப்புகள் தூய நிலை யிலிருந்து மலமாகிய பாவத்தில் விழுந்துவிட்டது என்றும் மெய் கண்டார் சிவஞானபோதம் முதல் சூத்திரத்தில் விளக்குகிறார். அதோடு மனிதனுக்குள் ஆன்மா உண்டு என்றும், ஆதி பெற்றோரின் வீழ்ச்சியின் காரணத்தால், அவர்கள் வழி வந்த மனுக்குலம் முழுவதும் ஜென்ம பாவத்தில் அதாவது சகச மலத்தில் சிக்கிக்கொண்டதென்றும், எனவே ஆன்மா இருள் அடைந்து, உணர்வற்ற நிலையில் ஆகிவிட்ட தென்றும் சூத்திரங்களில் பார்க்கிறோம்.

வீழ்ச்சியடைந்த மனிதனை மீட்டெடுத்தல்

வீழ்ச்சியடைந்த மனிதனைத் தேடி வந்து, மீட்டெடுக்க இறைவனே குருவாக இந்த உலகத்தில் வந்து மீட்பை உண்டுபண்ணி ஆன்மாவை உணர்த்தினார் என்று 8-ஆவது சூத்திரத்தில் பார்க்கிறோம்.

மீட்கப்பட்டவர்கள் இறைவனிடம்

மீட்கப்பட்ட ஆன்மா (மனிதன்) எவ்வாறு இறைவனைப் பின் தொடர்ந்து பற்றிக்கொண்டு, பேரின்பத்தில் இறைவனோடு இணைகிறது என்பதை 9 முதல் 12 சூத்திரங்கள் விளக்குகின்றன. இங்கே, தேவ குமாரனின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஆன்மா (மனிதன்) இறை இன்பத்தை ருசிக்கத் தொடங்கிவிடுகிறதையும், கடவுள் தன்னை ஆட்கொள்வதையும், அவர் பாதத்தில் தன்னை முழுமையாய் ஒப்படைக்கும்போது, ஏற்படும் நிகழ்வுகளையும் படிப்படியாய் விளக்கிச் செல்வதைக் காண்கிறோம்.

1. பாவம் கானல் நீரைப்போல் ஓடிமறைதல்

சிவஞான போதம் - சூத்திரம் 9

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்ந்து எனப்பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே

அதாவது

இரட்சிக்கப்பட்ட ஆன்மா (மனிதன்) இறைவனின் பாதத்தில் வந்து, அருள் ஆகிய ஞானக்கண்ணினால் ஆராய்ந்து அறிந்து, உணர்ந்துகொண்டது. அந்நிலையில் அவனுடைய (ஆன்மாவின்) பாவமெல்லாம் பேய்த்தேராகிய கானல் நீர் அதிவேகமாய் நீங்கிப் போவதுபோல் விரைந்து நீங்கிப் போயிற்று. அப்பொழுது அந்த ஆன்மாக்களின் வெப்பம் தணியத்தக்க, குளிர்ந்த நிழலாகக் கடவுள் விளங்குகிறார். ஆன்மாவோ, இந்த இளைப்பாறுதல் விடுபடாமல் நீடித்திருக்க இடைவிடாமல் அவரை ஐந்தெழுத்தின் உட்பொருள் வழி தியானித்துக்கொண்டே இருக்கும்.

2. இறைப்பணியால் தூய்மை அடைதல்

சிவஞான போதம் - சூத்திரம் 10

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

அதாவது,

ஆன்மா கடவுளை இடைவிடாமல் தியானிக்கும் நிலையில் கடவுளே தன்னை ஆட்கொள்கிறார். ஆன்மா கடவுள் காட்டும் வழியில் அவரோடு ஒன்றித்து நிற்கிறது. மட்டுமல்ல, கடவுள் ஏவும் பணிகளை மட்டுமே செய்கிறது. அப்படிச் செய்யும்பொழுது, ஜென்ம பாவமாகிய சகசமலம் விடுபட்டுப்போகிறது. மட்டுமல்ல இறைப்பணி செய்வதால் மாயை ஆகிய உடலில் ஏற்படும் போராட்டங்கள் நீங்குகின்றன. போராட்டங்களால் செயல்படக்கூடிய பாவக் கிரியைகளும் இல்லாமல் ஆகி விடுகின்றன. எனவே ஆன்மா முற்றிலும் விடுதலை பெற்று, பரிசுத்த நிலையை அடைகிறது.

3. இறைவன் பாதத்தையே பற்றிக்கொள்ளுதல்

சிவஞான போதம் - சூத்திரம் 11

காணும் கண்ணுக்கு காட்டும் உளம்போல்
காண உள்ளத்தை கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

அதாவது

மாயையான உலகப் பொருளைக் காணும் கண்ணுக்கு உண்மையைக் காண ஆன்மாவானது உள்ளிருந்து காட்டுகிறது போல, இறைவனே ஆன்மாவைத் தேடிவந்து, பாச மலத்தால் (பாவத்தால்) மறைக்கப்பட்ட ஆன்மாவின் மறைப்பை நீக்கி, அது நடக்க வேண்டிய வழியைக் காட்டவே, அது மயக்கம் சிறிதும் இல்லாதவனும், மாறா அன்புடையவனும், பாவத்தை அறுப்பவனுமாகிய இறைவனின் திருவடியைத் திடமாய்ப் பற்றிக்கொள்ளும்

4. புதிய சாயல் பெற்று இறைவனோடு இணைதல்

மீட்கப்பட்டு, பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் இறுதியாக மறுரூபமாக்கப்பட்டு, இறைவனோடு இணைந்து, நித்திய இன்பம்

அடையும் நிலை குறித்து கடைசி சூத்திரம் 12-ல் விளக்கப்படுகிறது. இது மீட்கப்பட்டவர்கள் அடையவிருக்கும் கடைசி நிலையாகும். இந்த நிலை இவ்வுலக வாழ்க்கைக்குப் பின் நடைபெறுவதாகும்.

சிவஞான போதம் சூத்திரம் - 12

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே

அதாவது,

இறைவனின் பாதங்கள் 'செம்மலர் நோன் தாள்' என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால், அவைகள் சிவந்த மலரைப் போல காட்சியளிக்கின்றன. அப்படி சிவந்துவிடக் காரணம் என்னவென்றால், அவை 'நோன் தாள்' ஆனதால் ஆகும். அதாவது, அவைகள் நோன்பு நின்று சிவந்த தாள் ஆகும். அது ஐந்தவித்தானாகிய இறைவன் தன் ஜீவனைக் கொடுக்கும் தவமாகிய நோன்பு ஆகும். அந்தச் சிலுவைத் தவமாகிய நோன்பின்போது சிந்தப்பட்ட இரத்தத்தால் தோய்க்கப்பட்ட பாதங்கள் செம்மலர் போல் காட்சியளிக்கின்றன. அந்தப் பரிசுத்த பாதங்களைச் சேரவிடாமல், ஆன்மாவைத் தடுத்து நிறுத்துவது கொடிய பாவமாகிய மலமாகும்.

ஆனால் அந்தப் பாதங்களிலிருந்து பீறிட்டுப் பாய்ந்தொழுகும் இரத்தம், மலமாகிய எந்தக் கொடிய பாவங்களையும் கழுவிச் சுத்திகரிக்க வல்லமையுள்ளதாகும். அவ்வாறு இரத்தத்தால் பாவங்கள் கழுவி அகற்றப்படும்போது, ஆன்மா அன்பராகிய இறைவனின் திருவடிகளில் இணைக்கப்படுகின்றது.

பாவம் நீக்கப்படுவதை சைவசித்தாந்தத்தில், அம்மலம் கழீஇ என்று இறைவனின் பாதத்திலிருந்து ஒழுகும் இரத்தம், பாவத்தைக் கழுவி நீக்குவதைக் காண்பிக்கிறது. திருமறையில், இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் *(1யோ.1:7)* என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் ஆன்மாவில் பற்றி நின்ற மயக்கம் முற்றிலும் நீங்கிப்போகிறது. ஆன்மீக நேயம் நிரம்புகிறது. ஆன்மா பூரண

நிலையை எட்டுகிறது. அப்போது ஆன்மாவின் பழைய சாயல் நீங்கி இறைவனுடைய புதிய சாயலைப் பெற்றுக்கொள்கிறது. இவ்விதமாய் மறுரூபமடைந்தவர்கள் இறைவனோடு இணைந்து ஆலயமாக அமைந்து இறைவனைத் தொழுது, நித்திய நித்தியமாய் நிலைத்திருப்பார்கள். திருக்குறளில் இக்கருத்து பேரின்பக் காதலின் கடைநிலையாகக் காட்டப்பட்டுள்ளது.

அதி : 9

மனிதரை மீட்க உலகில் மனிதனாக வந்த கடவுள் யார்...?

காணக்கூடாத கடவுள்

கடவுளை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அந்தக் காணக்கூடாத கடவுள் தம்மை மூவொரு கடவுளாக உலகுக்கு முதலாம் நூற்றாண்டில் வெளிப்படுத்தினார். அவரே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன். உலகத்தில் அவதரித்த குமாரன் தம்மை எல்லாருக்கும் காணக்கூடியவராக வெளிப்படுத்தினார். அவரைக் குறித்த வரலாறு திருமறையிலும், அவரைக் குறித்த செய்திகள் திருக்குறளிலும், அனுபவங்களை சைவ சித்தாந்த நூல்களிலும் எழுதப்பட்டது என்பதைப் பார்த்தோம்.

உலகில் வந்த குமாரக் கடவுளின் பெயர்...?

பெயர் இருவகைப்படும். ஒன்று இடுகுறிப்பெயர். இது பெரியவர்கள் தமக்குக் கீழானவர்களுக்குப் போடும் பெயர். கடவுளுக்கு இடுகுறிப் பெயர் போட எவருமே இல்லை. மற்றொன்று காரணப்பெயர். அதாவது, எதாவது காரணத்துக்காக மற்றவர்களால் கொடுக்கப்படும் பெயர், காரணப் பெயர் ஆகும். கடவுளைக் குறிப்பிடும் பெயர்கள் அனைத்துமே காரணப்

பெயராய்த் தான் காணப்படுகின்றன. கடவுள் என்பதும் அவர் எல்லா வற்றையும் கடந்து நிற்பவர் என்ற காரணத்தால் வழங்கப்பட்ட பெயராகும்.

குமாரனாகிய கடவுளுக்குப் பல காரணப் பெயர்கள்

குமாரனாகிய கடவுளுக்குப் பற்பல காரணங்களையிட்டு பல காரணப் பெயர்கள் இருப்பதைப் பார்க்க முடிகிறது. அவைகளில் சில பெயர்களைக் கவனிப்போம்.

1. யெஷுவா

குமாரனாகிய கடவுள் பாலஸ்தீன நாட்டில் பிறந்தாரென்று பார்த்தோம். அங்கு பேசப்பட்ட மொழி எபிரேயம். குமாரனாகிய கடவுள் மனிதரைப் பாவத்திலிருந்து மீட்க, வந்த **உலக இரட்சகர்** என்ற காரணத்துக்காக அந்த மொழியில் தூதனால் அறிவிக்கப்பட்ட காரணப்பெயரே யெஷுவா என்பது.

2. சிவா

யெஷுவா என்றப் பெயர் நம் தேசத்தில், அப்போஸ்தலர் தோமாவால் அறிவிக்கப்பட்டபோது, ஏற்பட்ட மொழிச்சிதைவால் (யெஷுவா..., ஷுவா..., சுவா..., சிவா), அப்பெயரை நம் மக்கள் அன்று சிவா என்று கூறினார்கள்.

3. இயேசு

யெஷுவா என்ற எபிரேயச் சொல் அதே பொருளில் சுமார் 1600 வருடங்களுக்குப் பின் கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கடந்து, தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து கிடைக்கப்பெற்ற பெயரே இயேசு என்ற தமிழ்ப் பெயர். உலக இரட்சகர் என்ற காரணத்திற்காகக் கிடைக்கப்பெற்றதால், இது எல்லா நாமங்களிலும் மேலானதாய்ப் போற்றப்படுகிறது.

4. குமரக்கடவுள்

இவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய திரித்துவத்தில் பிதாவின் குமாரனாகப் பிறந்த காரணத்தால் கிழக்கே இந்து தேசத்தில் ஆதி நாட்களிலிருந்தே குமரக்கடவுள் எனப்படுகிறார். இதே காரணத் துக்காக மேற்கே குமாரனாகிய கடவுள் எனப்படுகிறது.

5. சாரோனின் ரோஜா

இது குமாரனாகிய இயேசு அழகு நிறைந்த வாலிபராகக் காணப்பட்ட காரணத்துக்காக மேற்கே கூறப்பட்ட பெயராகும்.

6. அழகர்

அவர் மேலே கூறப்பட்டபடி, அழகு நிறைந்தவரான காரணத்தால் கிழக்கே இந்து தேசத்தில் கூறப்பட்ட பெயராகும்.

7. முருகன்

முருகு என்றால் அழகு என்பது பொருள். மேலே கூறப்பட்டபடி அவர் அழகு நிறைந்தவர். ஆகையால், இந்து தேசத்தில் கூறப்பட்ட மற்றொரு காரணப் பெயராகும்.

8. பரிசுத்த பிள்ளை

பரிசுத்தரான கடவுளின் பிள்ளையாகப் பிறந்த குமாரனாகிய இயேசுவுக்கு மேற்கே கூறப்பட்ட பெயராகும்.

9. பிள்ளையார்

மேற்சொன்னபடி கடவுளின் பிள்ளையாகப் பிறந்த காரணத்தால், மாபெரும் மதிப்புடன் இந்து தேசத்தில் கூறப்பட்ட பெயராகும்.

10. பாவ பரிகாரி

குமாரன் பாவங்களை மன்னிப்பவராக வந்த காரணத்தால் இப்பெயரால் மேற்கே அழைக்கப்படுகிறார்.

11. வினைதீர்க்கும் வினாயகர்

குமாரன் பாவ வினைகளைத் தீர்ப்பவர் என்ற காரணத்தால், இந்து தேசத்தில் இப்பெயர் கூறப்பட்டது.

12. சிலுவை நாதர்

குமாரனாகிய கடவுள் மனிதருடைய பாவத்தைச் சுமந்து, சிலுவையில் பாடுபட்டுப் பலியான காரணத்தால் இப்பெயர் வழங்கப் பட்டது.

13. தியாக ராசர்

குமாரன் பரலோக மேன்மைகளைத் தியாகம் செய்து, சிலுவையில் தம்மையே தியாகம் செய்த காரணத்தால், இப்பெயர் கிழக்கில் கூறப்படுகிறது.

14. பொறிவாயில் ஐந்தவித்தான்

அவர் பொறியாகிய சிலுவையில் தம் ஐம்புலன்களையும் பலியாக்கிய காரணத்தால், இந்து தேசத்தில் இப்பெயர் திருக்குறளில் வழங்கப்பட்டது.

15. நீத்தார்

குமாரனாகிய கடவுள் தமது பரலோக சிலாக்கியங்கள் அனைத்தையும் துறந்து உலகுக்கு வந்ததால், திருக்குறளில் இந்தக் காரணப்பெயர் கூறப்பட்டது.

16. அறவாழி அந்தணன்

அவர் அறமாகிய இரட்சிப்பை எப்பேர்ப்பட்ட பாவிக்கும் அளிப்பவர் என்ற காரணத்தால், இப்பெயர் திருக்குறளில் கூறப்பட்டது.

17. வார்த்தை மாம்சமானவர்

வார்த்தையான தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு உலகுக்கு வந்த காரணத்தால் மேற்கில் கூறப்பட்டது.

18. நிறைமொழி மாந்தர்

மேற்கூறிய அதே காரணத்துக்காகக் கிழக்கே திருக்குறளில் கூறப்பட்டது.

19. உயிர்த்தெழுந்த கர்த்தர்

அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த காரணத்தால் மேற்கில் வழங்கப்பட்டது.

20. உய்யவந்தான்

மேற்கில், பாவத்திலிருந்து மீட்கவந்தவர் என்று கூறுவதைக் கிழக்கில் மலக்கயத்திலிருந்து அல்லது பாவக்கடலிலிருந்து தூக்கியெடுத்து விடுவிக்க வந்தவர் என்று கூறினார்கள்.

காரணப்பெயர்களால் சுட்டப்படுகிறவர்

இந்த எல்லாப் பெயர்களாலும் குறிப்பாய்ச் சுட்டிக்காட்டப் படுகிறவர், பரலோகத்தை விட்டு, உலகத்தில் ஒரு கன்னிகையின் வயிற்றில் மனிதனாகப் பிறந்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காகத் தம்மையே பலியாக்கி, மரித்து உயிர்த்தெழுந்து பரத்துக்குச் சென்ற இறைமகன் ஒருவராகத் தான் இருக்க வேண்டும.

இருதயக் கண் முன் நிற்பவர்

எனவே நாம் வணங்கி ஆராதனை செய்வதற்காக ஆயத்தப் பட்டு, இறைவனைப் பணிவோடு அழைக்கும்போது நம் இருதயக் கண்முன் வருபவர்... யார்? மேலே கூறப்பட்டவற்றில் எந்தப் பெயரில் அழைத்தாலும், நம் கண் முன் காணப்பட வேண்டியவர், உலகத்தில் வந்து நம்மை இரட்சித்த கடவுளாயிருக்க வேண்டும். அதற்கு மாறாக வேறு ஏதாகிலும் வந்துவிட்டால்....? எடுத்துக்காட்டாக, மேலே கூறப்பட்ட பிள்ளையாரை நாம் தியானிக்கும்போது, நம் உள்ளத்தின் கண்களுக்கு முன், நாம் புராணக்கதைகளில் படிக்கும் கணபதி, யானையின் தலையோடு வந்து நிற்பதானால்...? நமது இலட்சியமே மாறி விடுகிறதல்லவோ...? நம்மை மீட்க வந்த கடவுள் மனிதனாய் வந்தவர். அவர் நமக்காகச் சிலுவையில் மரித்தவர்; இதை மறத்தல் கூடாதே! எனவே, எந்தக் காரணப்பெயர் சொல்லி அழைத்தாலும், உண்மையாகவே சிலுவையில் மரித்து உயிர்த்த கடவுள் தான் இருதயக் கண் முன் வர வேண்டும் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாததாகும்.

சத்தியம் நம்மை விடுவிக்கும்

இங்கு தான் சத்தியம் நம்மை விடுவிக்க வேண்டும். மேற்கில் ஆதி கிறிஸ்தவமும், கிழக்கில் அதே ஆதி இந்தியக் கிறிஸ்தவமான சைவமும் ஒரே அஸ்திபாரத்தில் கடவுளின் சாட்சிகள் அதாவது சான்றோர் திருச்சபையாக வளர்ந்தது என்ற சத்தியம் பல காலங்களாக மறைக்கப்பட்டுவிட்டது. எனவே, இந்து தேச மக்களாகிய நமக்குள் பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. சத்தியங்களை நாம் அறிந்துகொள்ளும் போது, சத்தியம் நம்மை விடுதலையாக்கும். மறுபடியும் நாம் விடுதலையோடு ஒன்றுபடுவோம் (நம் இந்து தேச மக்களைப் பிளவுபடுத்த ஐந்து ஆறு நூற்றாண்டுகளுக்குப்பின் ஏற்பட்ட சாத்தானின் சூழ்ச்சிகள் பின்னால் தரப்பட்டுள்ளன).

அதி : 10

மனிதனாக உலகில் வந்த கடவுளின் சாட்சிகள்

(மேற்கில் கிறிஸ்தவம், கிழக்கில் சைவம்)

உலக இரட்சகருக்குச் சாட்சிகள் அல்லது சான்றோர்

உலகில் மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்க ஒரு மனிதனாக வந்த கடவுளாகிய இயேசு, தமது அடியவர்களைச் சாட்சிகள் அல்லது சான்றோர் என்று அழைத்தார். அவர் தம் அடியவர்களுக்குக் கூறியதாவது: நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் *(யோவா.15:27)*. மீட்பின் சாட்சியை உலகமெங்கும் உள்ள மக்களுக்கு அறிவிக்க அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகையில் கூறியதாவது: பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சியாயிருப்பீர்கள் *(அப்.1:8)* என்பதாகும். அப்படியே பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். ஜனங்கள் ஆவியில் பெலனடைந்தார்கள், இயேசுவின் சாட்சிகளின் கூட்டம் திரளாய்ப் பெருகிக்கொண்டே சென்றது.

மேற்கில் கிறிஸ்தவம்

மேற்கில் மீட்பின் செய்தியை ஏற்றுக்கொண்டு, இறைவனால் மீட்கப்பட்டவர்கள் சாட்சிகள் என்றும், சீஷர்கள் என்றும் அழைக்கப் பட்டார்கள். பின்னாட்களில், அந்தியோகியா பட்டணத்தில், இயேசுவின் மற்றுமொரு காரணப்பெயரான கிறிஸ்து (மேசியா)-வின் சாட்சிகள் என்ற பொருளில், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கத் தொடங்கினார்கள். இதுவே கிறிஸ்தவத்தின் ஆரம்பம்.

கிழக்கில் சைவம்

மேற்கில் இயேசுவின் அடியவர்கள் சாட்சிகள் என்று அழைக்கப்பட்ட ஆதி நாட்களிலேயே அப்போஸ்தலர் தோமா கிழக்கே இந்து தேசத்துக்கு வந்துவிட்டார். இந்து தேசத்திலும் கடவுளின் இரட்சிப்பை (மீட்பை) ஏற்றுக்கொண்ட மக்கள் கூட்டத்தார் சான்றோர் (சாட்சிகள்) என்றே அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தோமாவால் கூறப்பட்ட உலக இரட்சகரான யெஷுவாவை அப்படியே (யெஷுவா என்றே) அழைத்தார்கள். ஆனால் யெஷுவா என்ற பெயர் ஷுவா, சிவா என்று மருவியதாகக் காணப்படுகிறது. உலக இரட்சகரான சிவாவின் சாட்சிகளாக மாறிய சான்றோர், சைவர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். இதுவே இந்து தேசத்தில் சைவத்தின் ஆரம்பம்.

சாட்சிகளின் அல்லது சான்றோரின் பண்புகள்

சாட்சிகளின் (சான்றோரின்) பண்புகள் கிறிஸ்தவத்திலும் சைவத்திலும் ஒரேவிதமாய்க் காணப்படுவதைத் திருமறையிலிருந்தும் திருக்குறளிலுமிருந்தும் கண்டுகொள்ளலாம்.

சான்றோருக்குத் திருக்குறளில் கூறப்படும் பண்புகளில் சில:-

1. அவர்கள் மறுபிறப்படைந்தவர்கள். அதாவது உள்ளம் மாறிப் பிறந்தவர்கள் அல்லது மீட்கப்பட்டவர்களாயிருப்பார்கள்.
2. அவர்கள், மனிதனாக வந்த கடவுளுக்குச் சான்று பகர்கிறவர் களாயிருப்பார்கள்.
3. உலகுக்கு உப்பாய் விளங்குவார்கள்.
4. உலகத்தாருக்கு ஒளி கொடுக்கக்கூடியவர்களாய் விளங்குவார்கள்.
5. இறைப்பண்பால், தம்மையே மற்றவர்களுக்குக் கொடுக்கும் பண்புடையவர்களாயிருப்பார்கள்.
6. தம் பழிக்காகவும், பிறர் பழிக்காகவும் நாணும் பண்புடையவர்களா யிருப்பார்கள்.
7. தம்மைப்போல மற்றவர்களையும் இறைவனிடம் ஒப்புரவு செய்பவர் களாயிருப்பார்கள்.

8. எதையும் மன்னிக்கும் மனப்பண்புடையவர்களாயிருப்பார்கள்.
9. இன்னா செய்வார்க்கும் இனியவை செய்யும் பண்புடையவர்களாயிருப்பார்கள்.
10. தோல்விகளை வெற்றியாய்க் கருதும் பண்புடையவர்களாயிருப்பார்கள்.
11. மற்றவர்களையும் தாங்கள் நடக்கும் இரட்சிப்பின் பாதையில் நடத்தும் பண்புடையவர்களாயிருப்பார்கள்.

சாட்சிகளின் சால்பூன்றிய தூண்கள்

உலகில் கடவுளுக்குச் சான்று பகரும் சான்றோர் பரிசுத்த ஆவியாகிய சால்பு பெற்றுக்கொண்டவர்கள் ஆவர். அவர்களில் காணப்படும் சால்பூன்றிய தூண்களைக் குறித்து 983-ம் குறள் கூறுகிறது

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்" *(கு. 983)*

அதாவது,

முதலாவது தெய்வீக அன்பு, அது திருமறையில் கூறப்பட்டிருக்கும் தன்னலமற்ற **அன்பு**. இரண்டாவது **நாணம்**, அது குற்றங்களுக்கு நாணி, மனம் திரும்பி, தன்னைப் புது சிருஷ்டியாக்கிக் கொள்வது. மூன்றாவது **ஒப்புரவு**. அது தேவன் பாவிகளாகிய நம்மை, சிலுவை மரணத்தின் மூலம் அவரோடு ஒப்புரவாக்கியதைப் போல நாமும் மற்றவர்களை ஒப்புரவாக்குவது. நான்காவது **கண்ணோட்டம்**. அது சிலுவையிலும் கூட இறைமகன் இயேசு தம்மை வெறுத்துத் தாக்கியவர்களை மன்னித்ததுபோல நாமும் மற்றவர்களை மன்னிப்பது. ஐந்தாவது **வாய்மெய்**. அது மெய்ப்பொருளாம் இறைவனுக்கு நம் வாயால் உண்மையான சான்று பகர்ந்து நற்செய்தி அறிவிப்பது. இப்பண்புகள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் செயல்படும்போது, இறைவனின் மீட்பின் கிரியைப் படர்ந்து பெருகும்.

ஐந்து தனி அதிகாரங்களில்

இந்த ஐந்து பண்புகளுக்கும் ஐந்து அதிகாரங்களும், 50 குறட்பாக்களும் திருக்குறளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அனைத்திலும் திருமறைச் சத்தியங்கள் ஆணித்தரமாய் விளக்கப்படுவதைப் பார்க்கிறோம் (திருக்குறள் அடிப்படைக் கிறிஸ்தவமே காண்க).

முதல் நான்கு நூற்றாண்டுகளில் சாட்சிகளின் வளர்ச்சி

மேலே கூறப்பட்டவை யாவும் முதல் நான்கு நூற்றாண்டுகளில் இறைமகனின் சாட்சிகளான அடியவர்களில் காணப்பட்ட பண்புகளாகும். மேற்கிலும் கிழக்கிலும் காணப்பட்ட இப்பெரும் வளர்ச்சிகளைக் கண்டு சாத்தான் திடுக்கிட்டான். எனவே ஆதிகாலக் கிறிஸ்தவ, சைவ முன்னேற்றங்களைச் சீர்குலைக்கச் சாத்தான் திட்டங்கள் வகுத்துவிட்டான்.

மேற்கில் கிறிஸ்தவம் சென்ற பாதை

மேற்காசியாவில் கிறிஸ்தவம் பெரும் வளர்ச்சியடைந்தது. அப்போஸ்தலர் பவுல், பேதுரு ஆகியோர் ஐரோப்பிய நாடுகளுக்கும் இரட்சிப்பின் சத்தியங்களைக் கொண்டு சென்றார்கள். ரோம சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளர்களின் எதிர்ப்பினால், ஆதி நூற்றாண்டுகளில் மேற்கில் கிறிஸ்தவம் இரத்தசாட்சிகளின் மத்தியிலும் வலுவாய் ஓங்கி வளர்ந்தது. நாலாம் நூற்றாண்டில், காண்ஸ்டன்டைன் சக்கரவர்த்தியைக் கொண்டு கிறிஸ்தவத்தைப் பாதுகாப்பது போன்ற நடிப்பில் சாத்தான் தந்திரமாக பாபிலோனிய இரகசியம் என்ற விக்கிரக வணக்கத்தில் அமிழ்த்தி கிறிஸ்தவத்தைச் சீரழித்துவிட்டான். அது 15-ஆம் நூற்றாண்டுக்குப் பின் மார்ட்டின் லூத்தர் போன்ற தேவ பிள்ளைகளில் தேவஆவியானவர் கிரியை செய்து மீண்டும் புத்துயிர் பெற்றது.

இந்துதேசத்தில் சான்றோர் சபையின் வளர்ச்சி

கிழக்கில் சான்றோர் சபை உலகில் மனிதனாக வந்த இறைவனுக்குச் சாட்சியாக வல்லமையோடு விளங்கியதைச் சான்றுகளோடு காணமுடிகிறது. இன்று சென்னை மாநகரில் கெம்பீரத்துடன் காணப்படும் சாந்தோம் தேவாலயம் ஒரு பெரும் வரலாற்றினை உள்ளடக்கி நிற்பதாய் காணப்படுகிறது. அப்போஸ்தலர் தோமா

சின்னமலையில் கொல்லப்பட்டு, அவர் உடல் அடக்கம் பண்ணப் பட்டிருந்த சான்றோர் ஆலயம் இன்று சாந்தோம் ஆலயமாக அழைக்கப்படுகிறது.

தோமாவின் நினைவுக்காக

அன்று சைவர்கள், வெளித்தேசமான பாலஸ்தீனாவிலிருந்து இறைவனின் இரட்சிப்பின் செய்தியை நம் தேசத்துக்குக் கொண்டு வந்து இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்ட அப்போஸ்தலர் தோமாவின் நினைவுக்காக, பாலஸ்தீனாவிலுள்ள கபாலஸ்தலத்தில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்த தேவன் பெயரில் 'கபாலீஸ்வரர் கோவில்' என்ற நினைவு ஆலயத்தைக் கட்டினார்கள். கபாலஸ்தலத்தில் அடக்கம் பண்ணப்பட்ட ஈஸ்வரன் உயிர்த்தெழுந்த இயேசுவே அல்லாமல் ஒருவரும் இல்லை. அவரே மரணத்தை ஜெயித்தவர்.

காலங்களுக்குப் பின் சாந்தோம், கபாலீஸ்வரர் கோயில்

அதோடு நின்றுவிடவில்லை. காலங்களுக்குப் பின் சான்றோர் சபையில் ஏற்பட்ட மாறுபட்ட நிலைகளை இங்கேயும் பார்க்க முடிகிறது. ஆரியர்களின் போராட்டங்களால் பல மாறுதல்கள் ஏற்பட்டபின், இந்த இடங்களைப் போர்ச்சுக்கீசியர்கள் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் ஆட்சியில் கபாலீஸ்வரர் கோவில் சைவர்களிடமே இருந்தது. ஆனால் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் 16-ம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய வழி கிறிஸ்தவர்கள் அதிகாரத்தில் வந்தார்கள். அவர்கள் கபாலீஸ்வரர் கோவிலைக் கிறிஸ்தவத்துக்கு மாறுபட்டதாய்க் கண்டு அதை இடித்துவிட்டு, புதிதாக ஒரு ஆலயத்தைத் தோமாவின் கல்லறையை உள்ளடக்கிக் கட்டினார்கள். அது சாந்தோம் ஆலயம் என்று அழைக்கப் படுகிறது. சைவர்கள், கபாலீஸ்வரர் கோவிலை அது இப்போது அமைக்கப்பட்டிருக்கும் செயின்ட் தாமஸ் மவுண்டில் கட்டினார்கள். அது இந்துக் கோவிலாக இப்போது அழைக்கப்படுகிறது (மேலும் விவரங்களுக்கு திராவிடசமயம் மாத இதழில் பார்க்க).

இந்து தேசத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சி

ஆதி நூற்றாண்டுகளில் தோமாவின் செய்திகள், திருக்குறள் ஆகியவற்றைத் தொடர்ந்து எழும்பிய சான்றோராகிய பக்திமான்கள்,

துறவிகள், முனிகள், ரிஷிகள் ஆகியோர் மறுமைக்கேற்ற வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொண்டார்கள். நான்கு நூற்றாண்டுகளில் சான்றோர் கூட்டம் வளர்ந்து, சைவ சமயமாகச் சிறந்து வளரவே, ஐந்து ஆறு நூற்றாண்டுகளில் பக்தி இயக்கம் தோன்றி, கடவுளின் மூவொருமைக் கொள்கையின் அடிப்படையில், சைவ வைணவ மதங்களாகப் பிரிந்து வளர ஆரம்பித்தது. தனிப்பட்டமுறையில், ஆயிரக்கணக்கான பாடல்கள் எழுதப்பட்டன. தொடர்ந்து அன்னியக் கூட்டத்தாரின் போராட்டங்கள் தொடங்கிற்று. குழப்பமான சூழலில், சாத்தானின் போராட்டங்கள் மத்தியில் சைவ சமயம் முன்செல்ல வேண்டியதாயிற்று.

அதி : 11

மனுக்குலத்தை மீட்க (உய்விக்க) வந்த கடவுள்

(இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்)

உயிர்நாடி

கிறிஸ்தவத்துக்கும், சைவத்துக்கும் உயிர்நாடியாயிருப்பது மீட்பு அல்லது இரட்சிப்பு ஆகும் என்பதைத் தெளிவாய்ப் பார்க்க முடிகிறது. ஆனால் **மீட்படைதல்** என்பதற்கு சைவத்தில் கொடுக்கப் படும் வார்த்தை **உய்வடைதல்** என்பதை பல முயற்சிகளுக்குப் பின்னால் மட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது. சைவசித்தாந்தம் இதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது. அது, **மலக்கயத்தில்,** அதாவது பாவக்கடலின் கயத்தில் அல்லது அகோர ஆழத்தில், சிக்கித் தவிப்போரைத் தூக்கி எடுத்து விடுவிப்பதாக, அழகாய்ச் சித்தரித்துக் காட்டுகிறது. இதைத்தான் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து செய்திருக் கிறார். பாவக்கடலில் மூழ்கிக் கிடந்த பாவிகளைத் தூக்கியெடுத்து விடுவிக்கிறார்.

'மீட்பு' என்பது சைவத்தில்

சைவ சித்தாந்தக் கருத்துகள் படிக்கப்படிக்க உற்சாகம் ஊட்டுவதாய்க் காணப்பட்டன. கெட்டுப்போன மனிதரை மீட்க (இரட்சிக்க) குருவாய் உலகில் வந்த மெய்ப்பொருளாம் இறைவனை மேற்கிலும், கிழக்கிலும் ஒரேவிதமாய்க் கூறியிருப்பது மேலும் வியப்படையச் செய்தது. ஆனால் சைவத்தில், கடவுள் இரட்சிக்கிறவர் என்று காண்பிக்கும் ஒரு வார்த்தைக்காகப் பலரை அணுகியும் கிடைக்க வில்லை. அதற்காகப் பிரயாசப்பட்டேன். பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடைசியாக வேறு வழியின்றி நாளிதழ் ஒன்றில், 'சைவசமயத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் இருந்தால் என்னைத் தொடர்புகொள்ளும்' படியாக விளம்பரத்தில் பிரசுரம்பண்ணிக் கேட்டுக்கொண்டேன். அனேகர் தொடர்புகொண்டார்கள்.

இரட்சிப்பு என்றால் என்ன?

தொடர்பு கொண்டவர்கள் இரட்சிப்பு என்றால் என்ன? என்று மிகுந்த ஆசையோடு என்னைக் கேட்டார்களே தவிர அவர்களில் எவருக்குமே தெரியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் எனது சைவ நண்பர்களில் ஒருவரான திரு சிவ. சந்திரசேகரன் அவர்களின் ஓர் தொடர் கட்டுரை திருமறை விளக்கத்தோடு 2012 ஆகஸ்ட் முதல் சில மாதங்களில் திராவிட சமயம் மாத இதழில் வாசிக்க நேர்ந்தது. மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆன்மாக்களை உய்விப்பது

சைவ சமயத்தில், இறைவன் ஆன்மாக்களைப் பாவத்திலிருந்து இரட்சிக்க அல்லது மீட்க வந்தார் என்ற வார்த்தைக்குப் பதிலாக பயன்படுத்தும் வார்த்தை உய்ய வந்தார் என்பதாகும் என்பதை அறிந்து கொண்டேன்.

உய்விப்பது குறித்து கட்டுரையில் கொடுக்கப்படும் விளக்கமாவது:- "சைவம் இறைவனை, மலத்தினால் (பாவத்தால்) கட்டப்பட்டுள்ள, ஆன்மாக்களின் கட்டுகளை அகற்றி, அவற்றைத் தடுத்தாட்கொள்ளும் **உய்ய வந்தானாகக்** கண்டு சிறப்பிக்கிறது. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கில் முதல் சாத்திரநூலான திரு உந்தியாரின் இறுதிப்பாடல் "வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும் உய்ய வந்தான்" என்று சகளமாய் வந்து தன்னையே தந்த இறைவனைக் குறிக்கிறது".

"உலகமக்கள் அனைவரும் மல(பாவ)த்தினால் விளையும் பெரும் கடலில் அமிழாது, அவர்களைக் கரையேறச்செய்து, **உய்விக்க** (காப்பாற்ற இரட்சிக்க) வந்தவர் என்பது இதன் பொருளாகும். ஆன்மாக்களை **உய்விக்க** வந்த இறைவன் குருவாகிய மனிதனாக இம்மண்ணுலகில் வந்தார் என்றும், அவர் ஆன்மாக்களைத் தானே தேடி வந்தாரென்றும், ஆன்மாக்களுக்காக தன்னையே தந்தார் என்றும் சைவ சித்தாந்தம் கூறுகிறது."

உய்ய வந்தானைக் கூறும் பாடல்

திருவுந்தியார் - 45

வைய முழுவதும் மலக்கயம் கண்டிடும்
உய்யவந்தா னுரை உந்தீபற
உண்மை யுணர்ந்தாரென்றுந்தீபற

அதாவது

உலகெங்கிலும் உள்ள மக்கள் மலக்கயத்தில் அதாவது, பாவக்கடலின் ஆழத்தில் அமிழ்ந்துபோவதைக் கண்டு, மனம் உருகி அவர்களை உய்யவந்தவரின் (மீட்கவந்தவரின்) உரைகளை ஊக்கமாய் சொல்லு. அந்த உண்மைகளை உணர்ந்து ஏற்றுக்கொள்கிறவர்களே விடுதலை அடைவார்கள் (உய்வடைவார்கள்) என்று தைரியமாய் சொல் என்கிறது இப்பாடல்.

திருமந்திரப் பாடல்களில்

1. எல்லா மனிதர்களையும் உய்விக்க குருவாக வந்தவர்

திருமந்திரம் - 1576

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண்டு இங்கே அளித்தலால்
சொல்லார்ந்த சற்குரு சுத்தசிவமே.

அதாவது

இப்பாடல் நான்காவது வரியில், சுத்தசிவமே சொல்லர்ந்த சற்குரு என்று மூன்று காரணங்களைக் காட்டி விளக்குகிறது. முதலாம் காரணம், எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலானது. அதாவது இப்பேரண்டத்தைக் கடந்து நிற்பவராகிய இறைவனே இவ்வுலகத்தில்

மனிதனாக வந்து பிறந்துவிட்டது. இரண்டாவது எல்லாரும் உய்யக் கொண்டு இங்கே அளித்தலால் அதாவது இவ்வுலகில் எல்லா மனிதரும் தங்கள் பாவவினைகளுக்கான தண்டனையிலிருந்து (நித்திய ஆக்கினை) உய்வடையும்படியாக (மீட்படையும்படி) இந்த உலகத்தில், தம்மையே ஈடாக அளித்துவிட்டது. மூன்றாவது, நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால் அதாவது இறைவனால் உய்விக்கப்பட்ட (இரட்சிக்கப்பட்ட) நல்ல ஆத்துமாக்களின் உள்ளங்களில் எல்லையற்ற ஆவியின் அருளை அளிப்பது. இவையாவும் இறைவனின் அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறது. இக்காரணங்களால் அந்த சுத்த சிவமே சொல்லார்ந்த சற்குரு என்கிறது இப்பாடல். இங்கு கூறப்படுவன யாவும் இறைமகன் இயேசுவையே காட்டுகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவரை அன்று இந்து தேச மக்கள் அழைத்த பெயர் தான் சிவம் என்பது, ('யெஷுவா' விலிருந்து கிடைக்கப்பெற்ற 'சிவா'). அந்த சிவம் சுத்த சிவம் என்று தெளிவுபடுத்தப்படுவதன் காரணத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சொல்லார்ந்த சற்குரு சுத்த சிவமே

அதாவது, சொல்வடிவமான (ஓம் என்ற சொல் வடிவம்) அல்லது வார்த்தையான சற்குரு என்பது பொருள், இங்கு, சுத்த சிவம் என்று எடுத்துக்கூறவும் காரணமுண்டு. ஆதி நாட்களில் பரிசுத்த நிலையில் வழிபட்ட சிவனை, வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றால் அசுத்தமாக்கும் முயற்சிகள் ஒரு கூட்டத்தாரால் செய்யப்பட்டதால் இது சுத்த சிவன் என்று எடுத்துக் கூறப்படுகிறது. எனவே, சுத்த சிவன் என்றால், ஆரம்பத்தில் கூறப்பட்ட தூய சிவன் என்றும், பின்னால் பல அருவருப்புகளோடு கூறப்படும் சிவன் வேறு பட்டதாகும் என்றும் புரிந்துகொள்கிறோம்.

திருமறையில் இக்கருத்துக்கள்

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (*யோ.3:16*). இரட்சிக்கப்படுகிறவர்களை (உய்வடைகிறவர்களை) கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (*அப்.2:47*).

ஆம், ஓம், ஆமேன் (சொல்லார்ந்த)

ஆம் அல்லது ஆமென் என்பதன் பொருள் அப்படியே ஆகக் கடவது என்பதாகும். ஓம் என்பது, ஆம் என்பதற்குப் பதிலாய் பயன்படுத்தும் சொல்லாகவே காணப்படுகிறது (இலங்கையில் தமிழர்கள் ஆம் என்பதை ஓம் என்றே உச்சரிக்கிறார்கள்). ஆதியிலே வார்த்தை இருந்தது அந்தவார்த்தை தேவனாயிருந்தது என்கிறார் யோவான். ஆதி வார்த்தையின் தொனி ஒலியாகவும் காணப்படுகிறது. அவருடைய நாமம் வார்த்தை என்பதே (*வெளி.19:13*). ஆம், ஆமேன் என்னும் சொற்கள் இயேசுகிறிஸ்துவுக்கு வழங்கும் பெயர்களாகவும் காணப் படுகிறது (*2கொரி 1:20; வெளி3:14*).

2. ஆன்மா இறை இன்பம் சுவைத்தல்

திருமந்திரம் - 1590

இசைந்து எழும் அன்பில் எழுந்த படியே
பசைந்து எழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குரு வந்து சென்னி கைவைக்க
உவந்த குரு பதம் உள்ளத்து வந்ததே.

அதாவது,

ஓர் ஆன்மா, தன் உள்ளத்தில் இறைவனின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு பேரின்பத்தைச் சுவைக்கத் துடிக்கிறது. அந்த ஆசை எவ்விதம் நிறைவேறுகிறது என்பதை இப்பாடல் காட்டுகிறது.

'இசைந்து எழும் அன்பில் எழுந்த படியே' அதாவது, மனதில் அன்பு ஊற்றெடுத்துப் பெருகி ஒழுகும்பொழுது, 'பசைந்து எழும் ஈசரைப்பாசத்துள் ஏக' அதாவது அந்த அன்பே உருவாய் எழுகின்ற ஈசரை, அளவற்ற பாசத்தோடு விடாமல் பற்றிக்கொள்ளும்போது, 'சிவந்த குருவந்து சென்னிகைவக்க' அதாவது சிவந்த குரு அல்லது சிவப்பாய் மாறிவிட்ட குரு (சிலுவையில் இரத்தம் சிந்தியதால், சிவந்து காட்சியளிக்கும் குரு) வந்து தலையில் கை வைக்கிறார். அப்போது, 'உவந்த குருபதம் உள்ளத்து வந்ததே'. அதாவது தான் வாஞ்சித்துக் காத்திருந்த குருபதம் உள்ளத்தில் வந்தமைந்துவிட்டதென்று ஆன்மா பூரிப்படைகிறது.

மனிதருக்காக இரத்தம் சிந்தின இறைவன்

மனிதருக்காக இரத்தம் சிந்தின இறைவனே ஆன்மாக்களுக்கு நித்திய பேரின்பம் அளிப்பவர் என்பதை , திருமறை, திருக்குறள், சைவ சித்தாந்த நூல்கள் ஆணித்தரமாய்க் கூறுவதைப் பார்க்க முடிகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் *(1யோவா1:7)* என்று திருமறையும், அவர் "பொறிவாயில் ஐந்தவித்தான்" (குறள் 6) என்று திருக்குறளும் கூறுகின்றன. செம்மலர் நோன்தாள் (சூத்திரம் 12) என்று சிவஞானபோதம் கூறுகிறது. இறைவனின் பாதங்கள் சிவந்த மலர் போலக் காட்சியளிக்கிறதாம். அப்படி சிவந்துவிடக் காரணம் என்னவென்றால், அவை நோன்தாள் ஆனபடியாலாகும். அதாவது நோன்பு நின்று சிவந்த தாள் ஆகும். சிலுவைத்தவமாகிய நோன்பின்போது சிந்தப்பட்ட இரத்தத்தால் தோய்க்கப்பட்டபாதங்கள் செம்மலரைப்போல் காட்சியளிக்கிறது. இது எல்லா நூல்களிலும் விளக்கப்படும் சத்தியமாகக் காணப்படுகிறது.

3. உறவினராக என் ஆன்மாவில் நிறைந்த இறைவன்

திருமந்திரம் - 1803

பிறவா நெறி தந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப்பராபரன்
உறவாகி வந்து என் உள்ளம் புகுந்தானே

அதாவது,

என் இறைவன் 'மறவா அருள் தந்த மாதவன்' அதாவது இவ்வுலகில் அவரைப் பற்றிக்கொண்ட ஆன்மாக்கள் ஒருபோதும் அவரை மறவாதிருக்கும் மனதை அளிக்கும்விதம் பெரும் தவமுடையவர். மட்டுமல்ல, அவரே நந்தி. அதாவது, அவர் அன்பே உருவான சிவப்பரம்பொருளானவர். அவர் அறவாழி அந்தணன் கூட. அதாவது, அவர் அறம் ஆகிய இரட்சிப்பைக் கடலாகக் கொண்டிருப்பவர். எப்படியென்றால் எப்பேர்ப்பட்ட பாவியையும் உய்விக்க (மீட்க) வல்லமையுள்ளவர். அவரே 'ஆதிப் பராபரன்' அதாவது படைப்புக் கெல்லாம் மூலகாரணரான பரம் பொருளானவர். இப்படிப்பட்ட இறைவன் 'உறவாகிவந்து என் உள்ளம் புகுந்தானே' அதாவது, எனக்கு உறவினராக வந்து என் ஆன்மாவில் நிறைந்துள்ளார்.

இவற்றோடு இறைவனின் மற்றுமோர் சிறந்த அம்சம் கூட முதல் வரியில் தரப்பட்டுள்ளது. அது என்னவென்றால், இந்த இறைவன் இம்மை வாழ்வுக்குப் பின் நம்மை நித்திய பேரின்ப வீட்டில் கொண்டு சேர்ப்பவர் என்பதாகும். ஆனால் அது 'பிறவா நெறி தந்த பேரருளாளன்' என்று இங்குக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறப்படுவதன் காரணத்தையும் திரு சிவ. சந்திரசேகரன் அவர்கள் தம் கட்டுரையில்கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

வரலாற்றுப் பின்னணி

"பல்லவ மன்னரான மகேந்திரவர்மன், பாண்டிய மன்னரான கூன் பாண்டியன் காலத்தில் உண்டான சமயப் புரட்சிகளின் பயனாக சமண சமயத்தினர் திரள் கூட்டமாகச் சைவ சமயத்தில் இணையலாயினர். அவர்கள் மன்னராட்சி காலத்தில் சைவ சமயத்தில் இணைந்தாலும், அவர்கள் தாய்ச்சமயக் கொள்கைகளான பல்பிறவிக்கொள்கையும், பிறவிச் சுழற்சிக் கொள்கையும், அவர்கள் மனதை விட்டு அகலாக் காரணத்தினால், சைவசமயத்தில் அக்கொள்கைகள் மெல்ல மெல்ல இடம் பெறலாயின".

பிறவா நெறி தந்த பேரருளாளன்

"எனவே, அக்காலத்தில் வாழ்ந்தவரான திருமூலர் இப்பாடலில் இறைவனைப்பற்றிக் கூறும்போது 'பிறவா நெறி தந்த பேரருளாளன்' என்கிறார். அதாவது, பல்பிறவி உண்டு என்று எண்ணிக் கலங்கும் மக்களே, ஆதிபரனாகிய எம் இறைவனை நீர் வணங்கும்போது பல்பிறவி பற்றிய கருத்தினால், நீர் கலங்க வேண்டாம். எம் இறைவனே உங்களுக்குப் பிறவா நெறியளிக்கும் பேரருளாளன் எனத் தெளிவு படுத்துகிறார்".

தவிரவும் "உறவாகி வந்து என் உள்ளம் புகுந்தானே" என்ற பாடல் வரியின் மூலம் கடவுள் மனிதனாகப் பிறந்து வந்தார் எனவும், "மாதவன்" என்ற சொல்லின் மூலம் மனிதனாகப் பிறந்து வந்த கடவுள் தன்னைத்தானே பலியாகக் கொடுத்து, பாவத்தில் கட்டுண்ட ஆன்மாக் களை மாதவத்தால் விடுவிக்கிறார் எனவும் தெளிவடைகிறோம்.

அடுத்துவரும் திருமந்திரப் பாடல்களும், பரத்திலிருந்து குருவாய் வந்ததாய்க் கூறப்படும் இயேசுவும், சிவமும் ஒருவராகக் காட்டுன்கிறன.

அதி : 12

பரத்திலிருந்து உலகுக்கு வந்த சற்குரு

(*இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்*)

பாலஸ்தீனாவில் பிறந்த இறைமகன் இயேசு

முதலாம் நூற்றாண்டில் பாலஸ்தீனாவில் பிறந்த இறைமகன் இயேசு தாம் ஒருவரே குரு என்றார். அவர் ஒருவரே அன்பே உருவான சற்குரு. அதையே கீழே தரப்பட்டுள்ள சைவப் பாடலிலும் பார்க்கிறோம்.

திருமந்திரப் பாடல் தொடர்ச்சி

4. சுத்த சிவன் குருவாய் வந்தார்

திருமந்திரம் - 1578

சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்து
அத்தனை நல்கு அருள் காணா ஆதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர் என்பர் புண்ணியர்
அத்தன் இவன் என்று அடிபணிவாரே.

அதாவது,

'சுத்த சிவன் குருவாய் வந்து, தூய்மை செய்து நல்கு அருள்' அதாவது, சுத்த சிவனாகிய பரம்பொருள் (இறைவன்) இவ்வுலகில் குருவாய்ப் பிறந்து வந்து, ஆத்மாக்களின் பாவங்களைக் கழுவி தூய்மை செய்து அருள்மாரியை ஊற்றுகிறார். 'அத்தனை பொய்த்தகு கண்ணால் காணா ஆதிமூடர் நமர் என்பர்'. அதாவது, அவரை ஊனக்கண்ணால் கண்டுணர இயலாத ஆதி மூடர் அவரும், நம்மைப் போன்ற மனிதர் என்று ஏளனம்பண்ணுவார்கள். ஆனால் புண்ணியரோ வென்றால், 'அத்தன் இவன் என்று அடிபணிவாரே' அதாவது, இவரே அத்தன் அதாவது தகப்பனாகிய பரம்பொருள் என்று உணர்ந்து அவரை அடிபணிந்து வணங்குவார்கள்.

குரு குறித்துத் திருமறையில்

மேற்காசியாவில் பாலஸ்தீனா நாட்டில் மனிதனாய்ப் பிறந்த இறைமகன் இயேசு கூறியதாவது: (வேதபாரகரும், பரிசேயரும்) சந்தைவெளிகளில் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்... நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; **கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்** *(மத் 23: 7,8,10)*.

தூய்மைப்படுத்துபவர்

பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் கர்த்தரைத் தரிசிப்ப தில்லையே... *(எபி12:14)*. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் *(1யோவா.1:7)*.

இம்மைக்கு வந்தவர்

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத் திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார் *(யோவான1:1,14)*.

உலகத்தார் அவரை அறியவில்லை

அவர் உலகத்தில் இருந்தார். உலகமோ அவரை அறியவில்லை *(யோ1:10)*. இவன் தச்சனுடைய குமாரனல்லவா? இவன் சகோதரி களெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்களல்லவா? என்று சொல்லி அவரைக்குறித்து இடறலடைந்தார்கள் *(மத்13:55-57)*.

அவரை ஏற்றுக்கொண்டவர்களை இரட்சிக்கிறார்

அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் *(யோ1:12)*. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்ளன் 'அடியேனை நினைத்தருளும்' என்று கெஞ்சினபோது, இன்றைக்கு நீ என்னுடனே கூட பரத்திலிருப்பாய் என்று அருளிச்செய்தார் *(லூக்.23:42)*.

5. சுத்த சிவம் என்னென்ன செய்தார்?

திருமந்திரம் - 113

> விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
> தண்ணின்ற தாளைத்தலைக்காவல் முன் வைத்து
> உள்நின்று உருக்கிஓர் ஒப்பிலா ஆனந்தக்
> கண்நின்று காட்டி களிம்பு ஆறுத்தானே

அதாவது,

குருவாய் வந்த சுத்த சிவம் என்னசெய்தார் என்று இங்கு கூறப்படுகிறது. ஒன்று, 'விண்ணின்று இழிந்து' அதாவது, சுத்த சிவனாகிய பரம்பொருள் விண்ணிலிருந்து (இழிந்து) இறங்கினார். இரண்டு, மண்ணுலகத்தில் 'வினைக்கு ஈடாய் மெய்கொண்டு' அதாவது ஆன்மாக்களாகிய நம்முடைய பாவ வினைக்கு ஈடுசெய்ய, அவர் மனித உடல் எடுத்தார். மூன்று, 'தண்ணின்ற தாளைத்தலைக்காவல் முன்வைத்து' அதாவது, அருள் நிறைந்த தமது திருவடிகளை, ஆன்மாக்களுக்குத் தலையான பாதுகாவலாக வைத்தார். நான்கு, 'உள்நின்று உருக்கி, ஓர் ஒப்பிலா ஆனந்தக் கண்நின்று காட்டி' அதாவது, ஆன்மாக்களின் உள்ளங்களில் திருவருள் ஊற்றி கல்மனம் உருகச்செய்து, ஓர் ஒப்பில்லா ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கச் செய்தார். மேலும் 'களிம்பு ஆறுத்தானே' அதாவது, ஆன்மாவை இருளாகிய நரகத்தில் சேர்க்கும் இரு வினைகளாகிய ஜென்ம கர்ம பாவங்கள் ஆகிய களிம்பை அல்லது அழுக்கை நீக்கிப் பரிசுத்தப்படுத்தினார். இவை எல்லாவற்றையும் செய்தவர் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவரே இயேசு பெருமான் அவரையே சைவர்கள் 'சிவம்' என்று அழைத்தார்கள்.

திருமறைப்பகுதிகளில்

எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி, கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள் (*ரோ.3:23*). அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி... மனுஷ சாயலானார் (*பிலி 2:7*).

அதி : 13

சாவை வென்று உயிர்த்தெழுந்தவர் கூடலில் சேர்ப்பவர்

(இயேசு என கிறிஸ்தவம், சிவம் என சைவம்)

மனிதனாக வந்த இறைவன் மரித்து உயிர்த்தவர்

இறைமகன் இயேசு தாம் சிலுவையில் அறையப்படும் முன்பே அவர் அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுவதாக பலமுறை கூறியிருந்தார். ஆனால் அவர் சீஷர்கள் அதை அறியாதிருந்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசு தம்மை அனேகருக்குக் காண்பித்துப் பேசினார். பயத்தினால் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்த சீஷர்களிடத்தில் வந்து, அவர்களோடு பேசி, புசித்து அவர்களைத் தேற்றித் தைரியப்படுத்தினார். ஆனால் அன்று அவர்களோடு சீஷனான தோமா இருக்கவில்லை. அவன் வந்தபோது, அவனுக்கு இதை அறிவித்தபோது, அவன் விசுவாசிக்கவில்லை.

மறுபடியும் பல நாட்கள்

மறுபடியும் ஒருநாள் தோமா மற்ற சீஷர்களோடு இருக்கும் போது, உயிர்த்தெழுந்த இயேசு அறைக்குள் வந்தார். விசுவாசியாத தோமாவிடம் அவன் கையைத் தன் விலாவிலே போட்டுப்பார்க்கச் சொன்னபோது, தோமா சந்தோஷத்தால் அழுது ஆர்ப்பரித்து விசுவாசித்தான். உயிர்த்தெழுந்த, இயேசு 40 நாட்கள் மட்டும் அதிசயங்கள் செய்து, சீஷர்களைப் பெலப்படுத்தினார்.

செய்திகள் திருக்குறளில்

நீத்தாராகிய இறைமகன் இயேசுவின் உயிர்த்தெழுந்த ஆற்றலை எடுத்துக்காட்டியுள்ளதை குறள் 25-லும், குறள் 26-லும், குறள் 22-லும் 25-ம் பக்கத்தில் பார்த்தோம். மேலும் 269-ஆம் குறட்பாவில்,

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு

என்கிறார்.

'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு' அதாவது, சிலுவைத் தவம் செய்து முடித்த இறைமகனுக்கு 'கூற்றம் குதித்தல் கைகூடும்' அதாவது, சாவை வென்று, குதித்தெழும்புதல் என்ற வெற்றி கைகூட லாயிற்று. 'கூற்றுவன்' என்றால் மரண தூதன். மரணமே உன் கூரெங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றவாறு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார்.

சைவத்தில் இதைக் காட்டுவதே சிவநடனம்

பாவத்துக்குக் காரணனான சாத்தானைச் சிலுவை மரணத்தால் வென்றதைக் காட்டும் வகையில், சிவன் காலால் முயலகனாகிய சாத்தானை நசுக்கி, மிதித்து நின்று, மரணத்தை ஜெயித்து மயானத்தில் நடனம் ஆடுகிறார்.

இதைக் குறித்து டாக்டர் தெ. தேவகலா M.A., Ph.D

"நடராஜர் தத்துவம்: கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சிவ பெருமானின் இடுகாட்டு நடனமாகக் காட்டப்படுகிறது.

"*மாண்டார்சுடலைப்பொடி பூசிமயானத்*
தீண்டா நட மாடிய வேந்தன்"

திருஞானசம்பந்தர், தேவாரம், ப-46.9

"*சுறையணி மரமிடற்றன் நேசாடரங்காவுடையான்*"

திருஞானசம்பந்தர் - தேவாரம், ப-614.1"

எனும் பாடலடிகளும் சிவபெருமானை, அச்சந்தரக்கூடிய சாவினை வென்ற இடுகாட்டு ஆடலரசனாகக் காட்டுகின்றன. சிவன் சுடுகாட்டில் நடனம் ஆடுகிறார். நடனம் ஆடுதல் மகிழ்ச்சிக்கு அடையாளம். மகிழ்ச்சிக்குக் காரணம் வெற்றியாகும். ஏன் மயானத்தில் ஆடினார்? மயானம் என்பது மரணத்தைக் குறிக்கும் இடம். மரணத்தை வென்ற நிலையே மயானத்தில் நடனம் ஆடுவதின் வழி விளக்கப்படுகிறது. மயானத்தில் பெற்ற வெற்றி என்ன?"

"சிலுவையில் பலியான இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இது மகிழ்ச்சிக் குரியது. மகிழ்ச்சிக்குரிய வெற்றியாகும். மயானத்தில் பெற்ற வெற்றி மரணத்தை வென்ற வெற்றிக் கூத்தாக விளங்குகிறது" (இந்தியா ஒரு தோமா வழி கிறிஸ்தவ நாடே, பக்கம் 93, 94).

எம்பெருமான் சாவை வென்றவர் - சைவம்

மாணிக்கவாசகரின் திருவாசகம் 36 - 10

திருவாசகம் தோத்திரப் பாடலில், திருவாசகர், சிவபெருமானை 'கூற்ற வென்றவர்' என்று மாணிக்கவாசகர் போற்றுகிறார். அதாவது, எம்பெருமானாகிய சிவன் கூற்றுவனை (யமனை அல்லது மரணதூதனை) வென்று உயிர்த்தெழுந்தவர் என்று அவர் பெருமையைக் கொண்டாடுகிறார்.

ஆதிநாட்களில் இறைமகனின் உயிர்த்தெழுதல், நம் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதனால் ஏற்பட்டதே இந்த தோத்திரப் பாடலும், சிவ நடனமும். பின்னால் ஏற்பட்ட சூழலின் காரணத்தால், இவைகளின் உட்கருத்துகளை இழந்துவிட்டதையும் காண முடிகிறது.

உயிர்த்தெழுந்த தேவனின் கட்டளை

இறைமகன் இயேசு உயிர்த்தெழுந்தபின், அனேகருக்குக் காட்சி கொடுத்து, அற்புதங்கள் செய்தபின், தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளையாவது: "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி, அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்" (*மத்.28:19,20*) என்பதாகும். இந்தக் கட்டளையைப் பெற்றுக்கொண்டு, தோமா அப்போஸ்தலன் நம் தேசத்தில் வந்து, நம் மக்களுக்கு ஆணித்தரமாய்ப் போதித்தார். ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்று, இரட்சிப்பின் பாதையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள்.

திருமுழுக்கு பற்றி திருக்குறள்

அப். தோமாவின் உபதேசங்களைக் கேட்டு, பலர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால், அவர்களிலும் சிலர் பாவத்தை உள்ளே வைத்துக்கொண்டு, மனம் மாறாமல், வெளிவேஷமாய் திருமுழுக்குப் பெற்றுக்கொள்வது திருக்குறளில் கண்டிக்கப்படுகிறது.

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் - கு. 278

அதாவது,

'மாசு மனத்தது ஆக', பாவம் தமக்குள் இருக்கையில், பாவ மன்னிப்பு பெற்றுக்கொண்டவர்கள்போல, 'மாண்டார் நீராடி' அதாவது, மாண்புடையவர்கள் பேரில் (பிதா, குமாரன், பரிசுத்தாவியின்பேரில்) நீரில் திருமுழுக்குப் பெற்று, 'மறைந்தொழுகும் மாந்தர் பலர்' அதாவது, மறைந்து மாய்மாலத்தோடு வாழ்க்கை நடத்தும் வேஷபக்திக்காரர் பலர் உள்ளார்கள் என்று திருவள்ளுவர் எச்சரிக்கிறார்.

திருமுழுக்கின் கருத்து

உய்ய வந்தானாகிய இறைவன், ஆன்மாவைப் பாவக்கடலிலிருந்து தூக்கியெடுத்து, பாவத்தை மன்னித்து, ஒரு புது சிருஷ்டியாக்கி விட்டார். எனவே, அதுமுதல் அந்த ஆன்மா அவர் காட்டிய அறவழியில் (சிலுவைப்பாதையில்) தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் என்று ஒரு உடன்படிக்கை அவரோடு செய்துகொள்வதாகும் திருமுழுக்கு. அதாவது, இறைவனோடு சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணுதற் கடையாளமாக, தண்ணீரில் முழுகுவதும், அவர் உயிர்த்தெழுந்தது போல உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாகத் தண்ணீரிலிருந்து எழும்பி வருவதும் ஆகும். அதுமுதல் ஒரு பரிசுத்தமான புது வாழ்க்கை!!

ஆதிநாட்களில் செய்யப்பட்ட, இறைவனோடு ஒப்புரவாகும் திருமுழுக்கு, பின் நாட்களில் வெறும் சடங்காச்சாரமாய் மாறிவிட்டதைப் பார்க்க முடிகிறது. நம் தேசத்தில் சைவத்தின் நிலை மாறிவிட்டது.

அதிகாரம் படைத்தவர்களின் ஆதாயத்துக்காகத் திருமுழுக்கு திசைதிருப்பப்பட்டது. பாவப்பரிகாரத்துக்காக, பற்பல இடங்கள் ஒதுக்கப்பட்டு, அங்கு சென்று ஸ்நானம் செய்வதால், பாவம் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கையும் வளர்த்தப்பட்டது ('கங்கை நதியும் பாவமன்னிப்புக் கோட்பாடும்' என்ற கட்டுரை திரு. ஜோயல் சிங் ஞானராஜ், ஆகஸ்ட் 2010 தமிழர் சமயம் மாத இதழ் பார்க்க).

கூடலில் சேர்ப்பவர்

கூடல் எப்படி சாத்தியம் ஆகும்?

திருமந்திரம் - 2119

சிவனை வழிபட்டார் எண்ணிலாத்தேவர்
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும்
குருவை வழிபடில் கூடலும் ஆமே

அதாவது

இறைவனோடு ஆன்மாக்களுக்கு மறுமையில் ஏற்படவிருக்கும் சிறந்த பாக்கியமான 'கூடல்' எப்படி சாத்தியம் ஆகும் என்பதைக் குறித்து இப்பாடல் கூறுகிறது.

'சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்' அதாவது, இறைவனை எண்ணுக்கடங்காத தேவதூதர்கள் அனுநிமிடமும் துதித்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். 'அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை' அதாவது அங்கு அவர்கள் துதித்ததினால், அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய விசேஷித்த நன்மைகள் ஒன்றுமில்லை. அது அவர்களது கடமையே ஆகும்.

'அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும் குருவை வழிபடில், கூடலும் ஆமே'. அதாவது, அவனை வழிபடுவதால் அடையக் கூடிய சிலாக்கியங்களை ஆன்மாக்களுக்குப் போதிக்க உலகில் வந்த குருவை வழிபட்டால், மறுமையில் இறைவனோடு நித்திய பேரின்பத்தில் பெறவிருக்கும் கூடலும் பெற்றுக்கொள்ளலாமே என்கிறது இப்பாடல்.

கூடல் நித்திய பேரின்பத்தின் கடைநிலை!

எண்ணற்ற தூதர்கள் மத்தியிலிருந்து அன்பாகிய சிவம் குருவாக உலகத்தில் வந்து, ஆன்மாக்களுக்குப் போதித்ததால் ஆன்மாக்கள் அடையவிருக்கும் நன்மைகளுக்கு அளவே இல்லை. அந்த நன்மைகளில் சிறந்தது தான் இங்குக் குறிப்பிடும் **கூடல்**. அது பேரின்பக் காதலியாகிய ஆன்மா பேரின்பக் காதலராகிய இறைவனோடு மறுமையில் அடையப்போகும் கூடல் அல்லது சேர்தல் அல்லது இணைதல் ஆகும். அதுவே பேரின்பத்தின் கடைநிலை. திருக்குறளில் இது 'கூடி முயங்கப்பெறுதல்' என்றும், திருமறையில் இருவருமே (மணவாட்டியும், மணவாளனும்) ஒன்றாயிருப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

கூடல் ஒரு பெரும் எதிர்பார்ப்பை அளிக்கிறது

சுத்தகுரு பரலோக சிலாக்கியங்களை உதறித்தள்ளி, மனிதர் மேல் கொண்ட அன்பினால் இந்த உலகத்தில் குருவாய்ப் பிறந்து, அவர்களுக்கு அரியப் போதனைகள் கொடுத்து, பாவக்கடலிலிருந்து உய்வித்து (இரட்சித்து) அவர்களைக் கூடலுக்குத் தகுதிப்படுத்தினார். இதைக் குறித்து இந்த உலகத்தில் வந்த குருவே கூறிய வார்த்தைகள் திருமறை வரலாற்று நூலில் கூறப்பட்டிருப்பதாவது:

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே **நீங்களும் இருக்கும்படி**, நான் மறுபடியும் வந்து **உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்** (*யோவா.14:1-3*) என்பதாகும்.

கூடல், நிறைவடையப்போகும் உன்னத நிகழ்வு

எனவே, கூடல் இனிமேல் நிறைவுபெறப்போகும் ஓர் உன்னதமான நிகழ்வு என்பதைக் காண்கிறோம். பரலோக மேன்மைகளைக் களைந்து குருவாய் வந்து போதித்த இறைவனின் போதனைகளின்

படி நடந்து, அவரை வழிபடுகிறவர்கள் அந்தக் கூடல் ஆகிய நித்திய பேரின்ப சந்தோஷத்தில் பிரவேசிப்பார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

யார் அந்த சுத்த சிவம்?

11, 12, 13 அதிகாரங்களில் நாம் பார்த்த திருமந்திரப் பாடல்களிலும் பிற பாடல்களிலும் போற்றப்படும் சுத்த சிவம் யார் என்பதைத் திறந்த உள்ளத்தோடு அலசிப் பார்க்க வேண்டும்.

1. அவர் பாவக் கயத்தில் (ஆழ்கடலில்) அமிழ்ந்துபோகும் ஆன்மாக்களை (மனிதரை) உய்ய வந்த (இரட்சிக்க வந்த) இறைவன். அவர் காணக் கூடாதவர். ஆனால் ஆன்மாக்களுக்காக இந்த உலகில் மனிதனாகப் பிறந்தவர். ஆத்துமாக்களுக்கு அருள்மாரி (பரிசுத்த ஆவி) அளிப்பவர்.

2. அவர் கெட்டுப்போன மனிதருக்காய் இரத்தம் சிந்தி, சிவந்த குருவாய்க் காட்சியளித்து, சென்னியில் (தலையில்) தம் கைகளை வைத்து, பேரன்பு ஊற்றிப் பூரிப்படையச் செய்பவர்.

3. அவர் ஒருவராலும் மறக்க இயலாத பெரும் தவம் (சிலுவைத்தவம்) செய்த அன்பே உருவானவர். மட்டுமல்ல, எப்பேர்ப்பட்ட பாவியையும் உய்விக்க (மீட்க) வல்லவர். அவரே படைப்புக்கெல்லாம் மூலக் காரணராயிருப்பவர்.

4. அவர் ஒருவரே குருவாய் இந்த உலகில் வந்து, ஆத்துமாக்களின் பாவங்களைக் கழுவி, தூய்மை செய்து, அருள்மாரியைப் பொழிகிறவர். உலகத்தார் அவரை இகழ்ந்தாலும், அவரைப் பற்றிக்கொள்கிறவர்களுக்குத் துணையாயிருப்பவர்.

5. அவர் விண்ணிலிருந்து இறங்கி, மண்ணுலகிற்கு வந்தவர். இந்த உலகத்தில் வாழும் ஆத்துமாக்களின் பாவத்துக்கான தண்டனையை ஈடு செய்வதற்காக அவரும் தமக்கு ஒரு மனித உடல் எடுத்தவர். மட்டுமல்ல, தாம் இரட்சித்த ஆன்மாக்களுக்குச் சரியான பாதுகாவல் அளிக்கிறவர். ஆத்துமாக்களின் உள்ளங்களில் திருவருள் (ஆவியின் அருள்) ஊற்றி உருகச் செய்து, நரகத்தில் சேர்க்கும் களிம்பு (பாவக்கறைகள்) அகற்றிப் பரிசுத்தப்படுத்துபவர்.

6. அவர் மரணத்தை ஜெயித்து, உயிர்த்தெழுந்தவர்.

7. மட்டுமல்ல, அவர் தமது வழியில் நடப்பவர்களைக் 'கூடலில்' (நித்திய பேரின்பத்தில்) சேர்க்க வருகிறவர்.

திருமந்திரப் பாடல்களில் குறிப்பிடப்படுபவர்

இந்தப் பாடல்களில் குறிப்பிடப்படுபவருக்கு சிவம் அதிலும் சுத்த சிவம் என்ற பெயர் அன்று நம் இந்து தேசத்தில் கொடுக்கப் பட்டது. ஏனென்றால், பாலஸ்தீனாவில் பேசப்பட்ட யெஷுவா என்ற எபிரெயச் சொல்லுக்கு அன்று தமிழாக்கம் செய்யப்படவில்லை. எனவே, யெஷுவா என்ற பெயரையே நம் மக்கள் உச்சரித்தார்கள். ஆனால் உச்சரிப்பில் ஏற்பட்ட மொழிச்சிதைவினால் யெஷுவா சுவா என்றும், பின்னால் சிவா என்றும் மாற்றம் அடைந்ததாகக் காணப்படுகிறது.

பெயர்களில் சாத்தான்

பெயர்கள் வழியாக சாத்தான் வெகுவாய்ப் போராடுகிறான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 'இயேசு', 'இந்து', 'சிவன்' ஆகிய சொற்களால் சாத்தான் தன் பொய்யை வல்லமையோடு புகுத்திவிடுகிறான். இயேசு என்ற பெயரைக் கொண்டு சைவர்களிடம் பெரும் வெறுப்பைத் தூண்டுகிறான். இந்து என்ற சொல்லைக் கொண்டு, இல்லாத ஒரு மதத்தைத் திணித்து, கிறிஸ்தவ இந்தியர்களைக் குழப்புகிறான். அதுபோல சிவம் என்ற சொல்லைக் கொண்டு, கிறிஸ்தவர்களிடம் தேவையற்ற வெறுப்பை உண்டாக்குகிறான். சத்துருவுக்கு எதிர்த்து நிற்போம், அவன் ஓடிப்போகட்டும்.

சிவம், சைவம்

சிவம், சைவம் என்றெல்லாம் சொன்ன உடன் தற்கால கிறிஸ்தவர்களுக்கு முகநாடி வேறுபடுவது உண்டு. அன்னிய தெய்வங்களின் நாமத்தை உச்சரிக்கக்கூடாதென்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதே... என்போம். அன்னிய தெய்வங்களின் பெயர் உச்சரிக்கக் கூடாதென்றால், அவைகளை வணங்கி ஆராதிக்கக் கூடாதென்பதே

பொருள். வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் அன்னிய தெய்வங்களின் பெயரை உச்சரித்து வாசிக்கக்கூடாது என்பதல்ல. சிவா என்பது, அன்னிய தெய்வத்தின் பெயரல்ல. சிவா என்பது நம் தேசத்தில் யெஷுவா என்ற எபிரெயச் சொல் மருவி கிடைக்கப்பெற்ற பெயராகும். உலக இரட்சகர் சிலுவையில் காட்டிய இறை அன்பை, சைவர்கள் சிவம் என்று அழைத்தார்கள். சிவா என்ற பெயர், சங்க காலத்துக்குப் பின்னால் மட்டுமே தமிழ் மொழியில் வழங்கப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

பின் நாட்களில் யெஷுவா என்ற எபிரெயச் சொல் மொழி பெயர்க்கப்பட்டபோது, ஒலித்திரிபோடு, கிரேக்கத்தில் ஈசூஸ் என்றும், ஆங்கிலத்தில் ஜீசஸ் என்றும், தமிழில் இயேசு என்றும் மாற்றம் அடைந்து காணப்படுகிறது.

எபிரெயத்தின் யெஷுவா, நம் தேசத்தில் ஆதி நாட்களில் சிவா என்றும், 1600 ஆண்டுகளுக்குப் பின் மொழிபெயர்ப்பால் இயேசு என்றும், அழைக்கப்பட்டு, குமாரனாகிய கடவுள் ஒருவரையே சுட்டிக்காட்டுகிறது என்பதை இங்குத் தெளிவாய்ப் பார்க்கிறோம். எனவே, சாத்தான் பெயர்களில் எழுப்பும் எதிர்ப்புகளை ஜெபத்தோடு முறியடிப்போம்.

அதி : 14

இந்து தேசத்தில் சைவம் கடந்துவந்த பாதைகள்

சான்றோர் சபை

கி.பி. முதலாம் நூற்றாண்டில் அப். தோமாவால் கொண்டுவரப் பட்ட இரட்சிப்பின் நற்செய்தியால், நம் தேசத்தில் சான்றோர் சபை

வளர்ச்சியடைந்தது. நற்செய்திகளை உள்ளடக்கி, திருக்குறள் தமிழ் மொழியில் எழுதப்பட்டது. நம் தேசத்தின் வடமேற்குப் பகுதிகளில் அன்று குடியேறியிருந்த அன்னிய தேசத்தாருக்கும் நற்செய்தி அறிவிப்பதற்காக, அவர்களது மொழிகளையும், நம் மொழிகளையும் கலந்து சமஸ்கிருதம் என்ற புதிய மொழியை நம் இந்துக்கள் 2-ஆம் நூற்றாண்டில் உண்டாக்கி நற்செய்தியைப் பரப்பினார்கள். சான்றோர் சபைக்குச் சமயமாக வளரத் தொடங்கிற்று.

ஆன்மீக வளர்ச்சி

அப். தோமாவின் உபதேச அடிப்படையிலும், திருக்குறள் இரட்சிப்பின் நற்செய்தியின் அடிப்படையிலும் பக்தர்கள், துறவிகள், முனிவர்கள், ரிஷிகள் எழும்பி மடங்கள், ஆலயங்கள் போன்றவற்றை அமைத்து, தமிழிலும் சமஸ்கிருத மொழியிலும் அனேக பாடல்களும் நூல்களும் இலக்கியங்களும் இயற்றவே சைவசமயம் வளர்ச்சியடைந்தது.

பக்தி இயக்கங்களும், போராட்டங்களும்

தேசத்தில் கடவுள்பக்தி பெருகியதால் 5, 6 நூற்றாண்டுகளில் பக்தி இயக்கங்கள் வளர்ச்சியடைந்தன. இந்த வளர்ச்சிகளில் சாத்தானும் வெகுவாய்க் கிரியை செய்ய ஆரம்பித்துவிட்டான். அவன் பணிக்காக, சாத்தான் அன்னிய கூட்டத்தாரை அதிகமாய்ப் பயன் படுத்தினான். சைவ சமயத்திலிருந்து வைணவமும், பின்பு அறுவகைச் சமயங்களும் பிரிந்தன. இறைக்கொள்கையிலோ, மறுமையின் நீடுவாழ்விலோ நம்பிக்கையில்லாத அன்னியர்களால் பெரும் கேடுகள் ஏற்படலாயிற்று. தங்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொண்டிருந்த அன்னிய கூட்டத்தார், இந்துக்கள் உண்டாக்கிய சமஸ்கிருத மொழியைக் கற்றுக்கொண்டு, அவர்களுக்குள்ளே ஒன்றுபடத் தொடங்கினார்கள். மட்டுமல்ல சைவசமயத்தின் வளர்ச்சியைக் கண்டு வியப்படைந்த அவர்கள் இந்திரன், வருணன், மித்திரன், ருத்திரன் போன்ற அவர்கள் தெய்வங்களைப் புகுத்தி, நம் தேசத்து சமஸ்கிருத அறிஞர்களான வியாசர் ஆகியோரைக் கொண்டு, பலிகளின் அடிப்படையில் வேதங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றை 5 முதல் 7 நூற்றாண்டுகளில் எழுதவைத்தார்கள். ஆனால் அவைகளால் நம் மக்களைக் கவர முடியாததால், அவர்கள் சைவ வைணவ சமயங்களைக் கீழ்ப்படுத்தி, தங்கள் வைதீக நூல்களோடு இணைத்து

தங்கள் ஆதிக்கத்துக்குள்ளாக்கத் தொடங்கினார்கள். போராட்டங்கள் பெருமளவில் தொடங்கிற்று.

ஆரியவர்த்தமும், மனுச்சட்டமும்

தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டிருந்த அன்னியர்கள் ஒன்றுபட்டு, ஏழாம் நூற்றாண்டில் ராஜஸ்தானிலுள்ள அபு என்ற மலையில் (Mount Abu) ஒன்றுகூடி, தங்களை உயர்ந்தவர்கள், அதாவது ஆரியர்கள் என்று கூறி, பிரகடனம்பண்ணி, தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதற்குமுன் உலகின் எந்த தேசத்திலோ, பகுதியிலோ 'ஆரியர்' என்று ஓர் இனம் இருந்ததாக வரலாறு இல்லை. அதோடு அங்கு சில இடங்களைப் பிடித்துக் கொண்டு, ஆரியவர்த்தம் என்ற பெயரில் ஆட்சியும் ஸ்தாபித்துக்கொண்டார்கள். அங்கு அவர் களுடைய ஆட்சிக்காக மனுச்சட்டம் (Manu Law) உண்டாக்கினார்கள்.

மனுச்சட்டத்தால் ஜாதி ஏற்றத்தாழ்வும், தீண்டாமையும்

சாதி ஏற்றத்தாழ்வும், தீண்டாமையும் நம் தேசத்தில் முதன் முதலாய்த் திணிக்கப்பட்டது இந்த மனுச்சட்டத்தால் ஆகும். அன்னியரான ஆரியர்களில் ஒரு கூட்டத்தார், கடவுளுக்கு மேலாய்த் தங்களை உயர்த்தி, அவர்கள் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள் என்றப் பொய்யை மனுநூல் சட்டத்தில் கூறி, அந்த அடிப்படையில் பிராமணர்கள் என்ற மேல் சாதியாக்கப்பட்டார்கள். உலகில் எந்த தேசத்திலோ, இந்தியாவில் காணப்பட்ட அன்னிய கூட்டத்தாரிலோ அதற்குமுன் பிராமணர் என்ற ஒரு சாதி இருந்ததே இல்லை. மண்ணுக்குச் சொந்தமான இந்துக்கள், கீழ்ச் சாதியாராகவும் தீண்டத் தகாதவர்களாகவும் இழிவுபடுத்தப்பட்டார்கள். இப்படிப்பட்ட மனுநூல் சாதி ஏற்றத்தாழ்வு வாழ்க்கைமுறை சைவ வைணவ சமயங்களில் ஆரியர்களால் திணிக்கப்பட்டது. இது அன்புக்கு (சைவத்துக்கு) முற்றிலும் வேறுபட்டதாகும். வேறு வழியின்றி, சைவ சமயம் ஆரியப் பிராமணர்களின் அதிகாரத்தின் கீழே அமிழ்த்தப் பட்டது (மனுநூல், 'இந்தியாவின் ஆதி கிறிஸ்தவம்' காண்க).

பற்பல ஆட்சிகள்

பின்னால் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அளவே இல்லை. 9-ஆம் நூற்றாண்டில், சங்கராச்சாரியார் என்ற பிராமணன், மனுநூல் சாதிக்

கொள்கையை ஆதரித்ததுமட்டுமல்ல, அதை மனுதர்ம சாஸ்திரம் ஆக்கினார். இந்த மனுநூல் பிராமணீயத்தை நிலைநாட்ட, போராட்டங்கள் மத்தியிலும், நாட்டின் முக்கிய இடங்களில் சங்கரமடங்களை ஸ்தாபித்தார். இந்து தேசத்தில் ஏற்பட்ட முஸ்லீம் போர்கள், முஸ்லீம் ஆட்சிகள், சாலுக்கியர்கள், பல்லவர்கள் ஆட்சிகள்; சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிகள் இவை எல்லாக் காலங்களிலும் சைவ சமயத்தின் நிலை, அதன் ஆதி நிலைகளிலிருந்து எங்கெங்கோ விலகிச் சென்று பிராமணீயத்துக்கு அடிபணிந்தவண்ணம் காட்சியளித்தது.

சித்தர்களின் எதிர்ப்புகள்

ஆகிலும் பூர்வநாட்களில் எழுதப்பட்ட நூல்களில் காணப்பட்ட சத்தியங்களின் தாக்கத்தாலும், தனிப்பட்ட இறை அனுபவங்களாலும், பக்தர்களின் உள்ளங்களில் எழுந்த உணர்ச்சிகளின் காரணத்தாலும், உண்மைக்கு மாறாய் மக்களை எழுப்பிவிடும் தீய சக்திகளை ஒழிக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் அனேக சைவ சித்தர்களும், பக்தர்களும் ஏற்ற நேரங்களில் தங்கள் எதிர்ப்புகளை முழக்கிக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் தே. தேவ கலா கூற்று

"இந்தியாவில் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை உருவாக்கிய ஆரியப் பிராமணர்கள் அரசியல் ஆட்சியாளர்களைக் கையில் வைத்துக்கொண்டு, வன்முறை மூலம் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார்கள். எதிர்த்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் காடுகளுக்கு ஓடி, குகைகளில் ஒளித்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயினர். ஆனால் அங்கேயும் அவர்களைத் துரத்திச் சென்று, குகைகளை இடித்து, அவர்களைத் தாக்கி கொலை செய்தனர். இது குகையிடிக் கலகம் என்று சொல்லப் படுகிறது. தமிழ்நாட்டில், கி.பி. 13-ம் நூற்றாண்டில் இது நடைபெற்றது" (இந்தியா ஒரு தோமா வழி கிறிஸ்தவ நாடே என்ற நூல் படிக்கவும்).

சைவத்தின் கடவுள் கொள்கை சீரழிப்பு

வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் என்று பலவித நூல்கள் சைவ சமயத்தின் கடவுள் கொள்கைக்கு மாறாய் எழுதப்பட்டன.

இதிகாசங்களில் காணப்படும் கதாபாத்திரங்களும் தெய்வங்களாக்கப் பட்டார்கள். இதுகுறித்து திரு. சிவ. சந்திரசேகரன் அவர்கள் திராவிட சமயம் மாத இதழில் (அக்டோபர் 2012) கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"வால்மீகி எழுதிய இராமாயணத்தில், கடவுளின் அவதாரமாகக் காட்டப்படாத இராமன், பக்தி இயக்கமும் அதன் பயனாக சைவ வைணவமாகிய தமிழ் சமயமும் தோன்றி வளர்ந்த தமிழ்நாட்டில், கி.பி. 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் எழுதிய தமிழ் இராமாயணத் தில் தான் முதன்முதல் கடவுளின் அவதாரம் என்று காட்டப்படுகிறார். அதன் பின்னரே, இராமன் கடவுளின் அவதாரம் என்னும் கோட்பாடு எழுந்து, இந்தியா முழுவதும் பரவியது என்னும் வரலாற்றுச் செய்தியும் சிந்தித்தற்குரியதாகும்".

இன்று இது பெரும் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டி ருப்பதை நாம் அறிவோம்.

ஆங்கிலேயர் ஆட்சியில்

பலதரப்பட்ட போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில், ஆங்கிலேயர் நம் நாட்டுக்கு வந்தனர். நாட்டின் பல பகுதிகளைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் நம் இந்துக்களுக்கு (இந்து தேச மக்கள்) ஒரு சட்டம் உண்டாக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது அவர்களிடத்தில் அன்னியரான ஆரியர்கள், ஆரிய வர்த்தத்தில் இந்துக்களைக் கீழ்ச்சாதியாகவும், தீண்டத்தகாதவர் களாகவும் இழிவுபடுத்தி, ஆரியர்களை உயர்த்திய மனுச்சட்டத்தை அவர்களிடம் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொண்ட சர். வில்லியம் ஜோண்ஸ் என்பவர், அதைச் சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சட்டம் தான் நமது முதல் இந்து லா (Hindu Law).

இந்து லாவால் இந்துக்களுக்கு இழிவு

இந்துக்களை உயர்த்த வேண்டிய (Hindu Law) இந்து சட்டத்தாலேயே இந்து தேச மக்கள் இழிவுபடுத்தப்பட்டு, அதுமட்டும் அன்னியர்கள் என்று அறியப்பட்ட ஆரியர்கள் உயர்த்தப்பட்டு, அவர்களும் இந்துக்கள் ஆக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட (Hindu Law) இந்து லாவின்படியான இந்துக்களின் தன்மை, இந்துயிசம் (Hinduism) அல்லது இந்துத்துவா என்று கூறப்பட்டது. அது உண்மையில் இந்து

தேச மக்களின் தன்மைக்கு மாறான, ஆரியர்களின் பிராமணீயம் ஆகி விட்டது. இந்துக்கள் ஆக்கப்பட்ட அன்னியரான ஆரியர்கள், ஒரிஜினல் இந்துக்களான நம்முடைய உரிமைகளைப் பறித்துக்கொள்ளாமல், நம் சகோதரர்களாகச் சேர்ந்து வாழ விரும்பியிருந்தால், எவ்வளவோ மேன்மையும், செழிப்புமாய் அமைந்திருக்கும்!!

சைவம் இந்துத்துவாவின் கீழ் சீரழிக்கப்பட்டது

சீரழிக்கப்பட்ட சைவ சமயத்தையும், அதோடு வைணவ சமயத்தையும் ஆரிய பிராமணர்கள் இந்துத்துவாவுக்குக் கீழ்ப்படுத்தி, அதை இந்துமதம் என்று அழைத்தார்கள். இந்துத்துவாவும் இந்து மதமும் ஒன்றாகக் கருதப்பட்டு, பல தீங்குகள் நடந்தன. இந்துத்துவா அமைப்புகளின் தலைவர்களே இந்து மதத்திற்கும் தலைவர்களா னார்கள்.

கெட்டுப்போன மனுக்குலத்துக்காக, உலகில் வந்து பாடுபட்டு, மீட்பைப் பெற்றுத் தந்த இறைக்கொள்கையைக் கொண்ட சைவ சமயம், முப்பத்திமுக்கோடி தேவர்களின் தொழுகையோடும், மிருக பலிகளோடும், பல தெய்வக்கொள்கையோடும், பிறவிச்சுழற்சிக் கொள்கையோடும், விக்கிரக வணக்கத்தோடும், சாதி வேற்றுமை என்ற பிராமணீயத்தோடும், மூடநம்பிக்கை சடங்காச்சாரங்கள் போன்ற வற்றோடும் இந்துத்துவாவுக்குள்ளாக்கப்பட்டு, இந்துத்துவாவுக்கும் இந்து மதத்துக்கும் ஒரு வேறுபாடில்லாமற்போயிற்று. இது பெரும் குழப்பங்களுக்குக் காரணமாயிற்று.

உச்சநீதிமன்றத் தீர்ப்புகள்

ஆனால், சமீபகாலங்களில் நமது உச்சநீதிமன்றம் அளித்துள்ள சில தீர்ப்புகளில் உண்மைகள் வெளிப்பட்டுள்ளன. அதில் இந்துத்துவா ஒரு மதமல்லவென்றும், கடவுள் கொள்கைக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றும், அது ஒரு வாழ்க்கைமுறை மட்டுமே என்றும் திட்டவட்டமாக விளக்கப்படுகிறது. இதை இந்துத்துவவாதிகள் உட்பட அனைவரும் ஒப்புக்கொண்டு, விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள்.

உண்மையான சைவர்களுக்கு விடுதலை

மேற்கூறிய சூழ்நிலைகளை இறைவனே நமக்கு ஏற்படுத்தி யிருக்கிறார். நம் தேசத்தில் உண்மையான கடவுள் கொள்கைகளைக்

கொண்ட ஆதி சமயம் சைவம் ஆகும். அது அனேக நூற்றாண்டுகளாகச் சித்தர்களாலும் கூட தடுக்கமுடியாத நிலையில், இந்துத்துவாவுக்குள் புதைக்கப்பட்டுக் கிடந்தது. இப்போது நம் கொள்கையைப் பற்றிக் கொள்ளவும், நம் சைவச் சமயத்தை சைவ சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகளைக் களைந்து, ஆதிநிலையில் பரிசுத்தப்படுத்தி அமைக்கவும் இது ஏற்றவேளையாய் விளங்குகிறது.

சைவத்தின் சான்றோர் திருச்சபை ஆரியரின் மனு நூல் ஜாதிக்கொள்கையாலும் மற்றும் பல்வேறு வழிமுறைகளாலும் சீரழிக்கப்பட்டதைச் சித்தர்களான பக்தர்கள் எதிர்த்துப் பார்த்தார்கள். இறுதியில் அவர்கள் தோல்வியுற்றார்கள். என்ற போதிலும் அவர்களால் தாங்கமுடியாத சீர்கேடுகளைக் குறித்து தங்கள் எதிர்ப்புகளைப் பாடல்களில், வருங்காலச் சந்ததிக்காக எழுதி வைத்தார்கள். சித்தர்களின் பாடல்களில் இந்துக்களின் (இந்து தேச மக்களின்) ஆதி மதமான சைவ சமயத்தில் புகுத்தப்பட்ட சீர்கேடுகள் கண்டிக்கப் படுவதைப் பார்க்கிறோம்.

அதி : 15

சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் I & II

(பல தெய்வக்கொள்கை, விக்கிரகாராதனை)

I. பல தெய்வக்கொள்கை கண்டிக்கப்பட்டது

1. ஆதிமூர்த்தியாகிய கடவுள் ஒருவரல்லவோ!

சிவ வாக்கியர் - 128

எங்கள் தேவ ருங்கள் தேவ ரென்றிரண்டு தேவரோ
அங்குமிங்குமாகி நின்ற ஆதி மூர்த்தி யொன்றலோ
அங்குமிங்கு மாகி நின்ற ஆதி மூர்த்தி யொன்றெனில்
வங்கவாரஞ் சொன்ன பேர்கள் வாய்புழுத்து மாய்வரே

அதாவது,

எங்கள் கடவுள் உங்கள் கடவுள் என்று சொல்வதற்கு, தேவர்கள் பலர் உண்டோ? அங்கும் இங்கும் எங்குமாக நின்ற ஆதிமூர்த்தியான கடவுள் ஒருவரல்லவோ இருக்கிறார்? அவ்விதமாய் எல்லாருக்கும் கடவுள் ஒருவரேயென்றால் அதற்கு எதிராய்ப் பொய் சொல்பவர்களுக்கு ஐயோ! அவர்கள் வாய்களுக்குக் கேடல்லவோ வந்துவிடும், என்கிறது இந்தப் பாடல்.

2. பலதேவர் உண்டென்போர் நரகத்துக்கே

கொங்கண முனிவர்

கடவுளோன் ஒருவன் உண்டே - வேதம் ஒன்றே
காரண சற்குரு தீட்சை தானும் ஒன்றே
அடைவுடனே அவர் அருளும் பதவி ஒன்றே
அப்புவியில் மனுப்பிறவியான தொன்றே
நடைவழியும் பல மனுவோர்க் கொன்றேயல்லால்
நாலுவேதம் ஆறுசமய நடக்கை வேறாய்
திடமுடனே தேவர் பல உண்டென்போர்கள்
தீநரகுக்குள்ளாவர்கள் திண்ணம் தானே.

அதாவது,

கடவுள் ஒருவரே. வேதமும் ஒன்றே. சற்குரு தீட்சையும் ஒன்றே. அவர் அருளும் பதவி மீட்பு ஒன்றே. மனுப்பிறவியானதும் ஒன்றே. மனிதன் செல்ல வேண்டிய இரட்சிப்பின் பாதையும் ஒன்றே. அதுவல்லாமல் நான்கு வேதம் என்றும், ஆறு சமய நடக்கை உண்டென்றும், பலதேவர்கள் உண்டென்றும் சொல்வோர்கள் தீநரகத்துக்குச் செல்வார்கள் என்பது உறுதியல்லவோ என்கிறது இப்பாடல்.

உலகத்தில் மனிதனாய் வந்த ஒரே கடவுள் அல்லாமல் வேறு வேதங்களில் கூறப்படும் தேவர்கள் உண்மைத் தேவர்கள் அல்ல என்பது திட்டவட்டமாய்க் கூறப்படுகிறது.

3. ஒரே கடவுளை வணங்கவேண்டும்

அகத்தியர் ஞானம் 9 - 4

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும்
உத்தமனாய்ப் பூமி தன்னிலிருக்க வேணும்
பருவமதிற் சேறுபயிர் செய்ய வேண்டும்
பாழிலே மனதை விடான் பரம ஞானி
திரிவார்கள் திருடரய்யா கோடாகோடி
தேசத்திற் கள்ளரப்பா கோடாகோடி
வருவார்களப்பனே அனேகங்கோடி
வார்த்தையினால் பசம்புவார் திருடர்தானே

அதாவது,

உண்மைத் தேவன் ஒருவரே. அவரையே வணங்க வேண்டும். பூமியில் உத்தமனாக வாழ வேண்டும். பரம ஞானியானவன் மனதைப் பாழான சிந்தைகளுக்கு விடாமல் காப்பான். ஆனால் வார்த்தையினால் வசப்படுத்தி, கள்வரைப் போல் திரியும் வேஷ பக்தர்கள் கோடா கோடியாய் இருப்பதை ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும் என்று புத்தி கூறுகிறது இந்தப்பாடல்.

4. கண்ணில் கண்டவற்றை எல்லாம் தெய்வமாக்குகிறார்களே!

சிவ வாக்கியர்

அண்ணலாம் பரம சோதி அற்புதம் அறியாத தாலே
கண்ணிலே கண்டதெல்லாம் கதிதரும் கடவுள் என்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான் முறைப்படியிதென்ன
எண்ணியே நடந்து மோட்சம் இழந்து எரிநரகம் வீழ்வார்

அதாவது,

பரமஜோதியான உண்மைக் கடவுளின் அற்புதங்கள் அறிந்து அவரைப் பற்றிக்கொள்ளாமல், கண்ணில் கண்டவற்றையெல்லாம், அவைகள் ஏதோ கதி தரக்கூடும் என்று எண்ணி, மண்ணில் மக்கள் அவைகளைத் தெய்வமாக வணங்குகிறார்கள். ஆனால் அவர்க ளெல்லாரும் இறுதியில் மோட்ச பாக்கியத்தை இழந்து, எரி நரகத்தில் அல்லவோ விழுவார்கள் என்று எச்சரிக்கிறது இப்பாடல்.

5. மோட்சம் சேர்க்கும் பராபரன் ஒருவரே

அகத்தியர் ஞானம் 9 - 1

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் சீவனுக்கு மனுதானாச்சு
புத்தியினா லறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவருண்டு
பத்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தைவிடார், பரமஞானி
சுத்தியேயலைவதில்லை சூட்சம் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சம் தானே

அதாவது,

ஆதிசக்தியும் பராபரனும் ஆன ஒருவரே கடவுள். சகல உயிர் ஜீவன்களும் மனிதனுக்கானவைகளே. ஞானத்தால் இதை அறிந்த புண்ணியவான்கள் கோடிப்பேரில் ஒருவர் தான் உண்டு. அவர்கள் பயபக்தியோடு மனதை அடக்கி, அமைதியான நிலையில் இருப்பார்கள். தங்கள் மனதைப் பாழாய் அலட்டிக்கொள்ளார்கள். அவர்கள் ஞானிகளென்று சுற்றி அலைவதில்லை. தேவன் ஒருவரே என்ற உண்மை நிலை அறிந்தவர்கள் மோட்சம் சேர்வது உறுதி.

II. விக்கிரக ஆராதனை கண்டிக்கப்பட்டது

வானத்தையும் பூமியையும் படைத்த சருவ வல்லமையுள்ள தேவனையே சைவ சித்தர்கள் ஆராதித்தார்கள். அவரே கெட்டுப்போன மனிதரை மீட்கப் பூமியில் வந்தவர். அவரை வணங்குவதற்குப் பதிலாக உயிரற்ற விக்கிரகங்களை வணங்குவதைச் சித்தர்கள் வெகுவாய்க் கண்டித்துத் தங்கள் எதிர்ப்பைப் பாடல்களிலும் விளக்கியுள்ளார்கள்.

1. நாட்டி வைக்கப்பட்ட கல் தேவனாக முடியுமோ?

சிவவாக்கியர் 638

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பஞ் சாத்தியே
சுற்றி வந்து முணமுணன்று சொல்லு மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை அறியுமோ

அதாவது,

நாட்டி வைத்திருக்கும் விக்கிரகத்துக்குப் பூச் சொரிந்து, அதைச் சுற்றிச்சுற்றிக் கூறப்படும் மந்திரம் தான் எதற்கு? நாட்டி வைக்கப் பட்டுள்ளது கல் அல்லவோ? அது பேசுமா? அருமை நாதராகிய கடவுள் நம் உள்ளத்தில் அல்லவோ இருக்கிறார்! சமைக்கப்பட்ட கறியின் ருசியைப் பயன்படுத்தப்பட்ட சட்டியும் சட்டுவமும் அறியாதது போல, இறைவனின் ருசியைக் கல் அறியாது; ருசித்தவர்கள் தான் அறிவார்கள்.

2. மண்ணால், மரத்தால், சாணியால் தேவரா?

சிவவாக்கியர் 688

கட்டையாற்செய் தேவருங் கல்லினாற்செய் தேவரும்
மட்டையாற்செய் தேவரும் மஞ்சளாற்செய் தேவரும்
சட்டையாற்செய் தேவரும் சாணியாற் செய் தேவரும்
வெட்டவெளியதன்றிமற்று வேறு தெய்வ மில்லையே

அதாவது

கட்டையால் செய்த தேவனும், கற்களால் செய்யப்பட்ட விக்கிரகத்தேவரும், மட்டையால் செய்யப்பட்ட விக்கிரகத் தேவரும், சட்டையால் அலங்கரிக்கப்பட்ட விக்கிரகங்களும், சாணியால் செய்யப்பட்ட தேவரும் வெறும் சூனியம் அல்லாமல் உண்மையில் ஒன்றுமேயில்லையே! என்கிறது இப்பாடல். அப்படியானால் விக்கிரக வணக்கம் எதற்கு..?

3. கொல்லனால் வார்க்கப்பட்ட தேவன் கோவிலுக்குள்ளேயா?

சிவ வாக்கியர் - 919

கல்லுகட்டை சாணிமண்ணு காரயந்துரா செம்பில்
கொல்லன் வார்த்துருவமைத்த கோயிலுட் சிலைகளை
மல்லுகட்டாய்க் கட்டியு மகோத்ஸவஞ்செய் போதிலும்
இல்லையே கதிபெறவு மே மனுப்பிணங்களே

அதாவது,

கல்லினாலும், கட்டையாலும், சாணியாலும், மண்ணினாலும், உலோகத்தினாலும், செம்பினாலும், கொல்லனால் வார்த்து உருவமைக்கப்

பட்டு, கோயிலின் உள்ளே மகத்தான கொண்டாட்டங்களோடு மல்லுக்கட்டாய்க் கட்டி வைத்த போதிலும் ஓ! மனிதப் பிணங்களே அவைகள் நிமித்தம் பெறத்தகுந்த கதி யாதொன்றும் இல்லையே! இதை அறியாமல் செய்கிறீர்களே! என்று பாடுகிறார் சிவ வாக்கியர்.

4. நட்டுவைத்த தேவர் பொய்யல்லவோ?

சிவவாக்கியர் - 894

நட்டு வைத்த தேவரும் பொய் நான் மறைகளானதும் பொய்
கட்டிவைத்த புத்தகக் கதைகளும் புராணமும் பொய்
எட்டுத்திக்கு தேவரும் பொய் ஏழிரண்டு லோகமும் பொய்
மட்டிலாத ஜோதிநம் மனத்துள்ளே விளங்குமே

அதாவது,

செதுக்கப்பட்டு நாட்டிவைக்கப்பட்ட விக்கிரகத் தெய்வங்கள் பொய்யானவைகளே. நான்கு வேதங்களும், கட்டுக்கட்டாய்க் கட்டி உண்டாக்கி வைத்திருக்கும் புத்தகக் கதைகளும் புராணக் கதைகளும் பொய். எட்டுத்திசை தேவர்களும் பதினான்கு லோகமென்பதும் பொய்யேயாம். மட்டில்லா சோதியாய் விளங்கும் தேவன் நம் உள்ளே அல்லவோ இருக்கிறார். நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்றவாறு சிவ வாக்கியரும் கூறுகிறார்.

5. இரண்டாக்கப்பட்ட கல், ஒன்று தேவன் ஒன்று வாசற்படியா?

சிவ வாக்கியர் - 420

ஓசையுள்ள கல்லை நீர் உடைத்திரண்டு செய்துமே
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீருஞ் சாத்து நீர்
ஈசனுக்குகந்த கல்ல தெந்தக் கல்லு சொல்லுமே

அதாவது

உறுதியான ஒரு கல்லை எடுத்து அதை இரண்டாய் உடைக்கிறார்கள். ஒரு துண்டை வாசலில் படிக்காகப் பதித்து வைத்து அது தேய்ந்து போகுமட்டும் மிதிக்கிறார்கள். ஒரு துண்டைத் தெய்வமாக விக்கிரகம் செய்து வைத்து அதற்குப் பூக்களும் நீரும் சொரிந்து அதை வழிபடுகிறார்கள். இவற்றில் தேவனுக்கு உகந்த கல் எதுவென்று சொல்ல முடியுமா? விக்கிரகம் தெய்வமாகுமா?

அதி : 16

சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் III

(வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள்)

உண்மைக்கு மாறாய், தீய நோக்கில் அன்னியருக்கு அடி பணிந்து எழுதப்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் ஆகியவை அனைத்தும் பொய்யானவை என்றும் அவற்றின் படியான சடங்காசாரங்கள் பூசைகள் அனைத்தும் ஆரியபிராமணர்களின் பிழைப்புக்காகவும், சுகவாழ்வுக்காகவும் எழுதப்பட்டவை என்றும் சித்தர்கள் கடிந்துகொண்டார்கள்.

1. வேதங்கள் சாஸ்திரங்கள் ஜீவனத்துக்காக

அகத்தியர் - ஞானம் 6, எண்சீர்விருத்தம் 6

கழிந்திடுவார் பாவத்தா லென்று சொல்லும்
கட்டியநால் வேதமாறு சாத்திரங்கள்
அழிந்திடவே சொன்னதல்லால் வேறொன்றில்லை
அதர்மமென்றுந், தர்மமென்றும் இரண்டுண்டாக்கி
ஒழிந்திடுவாரென்று சொல்லிப் பிறப்புண்டென்றும்
உத்தமனாய்ப் பிறப்பனென்றும் உலகத்தோர்கள்
தெளிந்திடுவோர் குருக்களென்றுஞ் சீடரென்றும்
சீவனத்துக் கங்கல்லோ தெளிந்துகாணே.

அதாவது,

பாவத்தால் கழிந்திடுவார் என்று சொல்லும் நான்குவேதம் ஆறு சாஸ்திரம் ஆகியவை நாம் அழிந்து போவதற்காகவே அல்லாமல் வேறொன்றிற்காகவும் செய்யப்படவில்லை. தர்மமென்றும்,

அதா்மமென்றும் இரண்டுண்டாக்கிப் பல பிறவிகள் எடுக்க வேண்டியது உண்டென்றும் சொல்லி, தங்களைக் குருக்கள் என்றும் சீடா்கள் என்றும் கூறிக்கொண்டு, உத்தமனாய்ப் பிறப்பதற்கு உலகத்தோருக்கு வழி செய்வதுபோல, காண்பிப்பதெல்லாம் அவா்களது ஜீவனத்திற்காக என்பதை நன்றாய் அறிந்து கொள்ள வேண்டும் என்கிறது இந்தப்பாடல்.

2. நல்ல ரசத்தில் ஈ நுழைந்தாற்போல்

அகத்தியர் - ஞானம் 16, எண்சீர்விருத்தம் 3

தயங்காமற் பிழைப்பதற்கே இந்த ஞானம்
சார்வாகப் பாராட்டும் ஞானம் வேறே
மயங்குவதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
மாட்டினார் கதை காவ்ய புராணமென்றும்
இயல்பான ரசந்தனிலீ புகுந்தாற் போலும்
இசைத்திட்டார் சாத்திரங்க ளாறென்றேதான்
வயலான பயன் பெறவே வியாசர் தாமும்
மாட்டினார் சிவனாருத் தரவினாலே.

அதாவது,

உண்மை ஞானம் வேறிருக்க, இது (வேதங்கள்) அவர்கள் (அன்னியர்கள்) பிழைப்புக்காகக் காண்பிக்கும் ஞானமாகும். நாம் சார்ந்து பாராட்டவேண்டிய ஞானம் இதற்கு வேறுபட்டதாகும். மயக்கத்திற்காக முன்னோர் கூடி, கதைகளையும் காவியங்களையும், புராணங்களையும், ஆறுசாஸ்திரங்களையும் இசைந்துண்டாக்கி, நேர்த்தியான இரசத்தில் ஈக்கள் புகுந்து நாசம் செய்வது போல் கெடுத்துவிட்டார்கள். நம் வியாசர் கூட அவர்களிடத்தில் பயன் பெறுவதற்காக மாட்டிக் கொண்டார் (வேதங்களை எழுதியவர் வியாசர். அவர் ஆரியர்களிடம் மாட்டிக் கொண்டு, அவர்கள் விரும்பியபடி சமஸ்கிருத மொழியில் எழுதிக்கொடுத்தாரென்று இங்கு சுட்டப்படுகிறது).

3. சாஸ்திரங்கள், புராணங்கள் வீண்

பாம்பாட்டிசித்தர் அகப்பற்று நீக்கல் - 98

சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம் பல
தந்திரம் புராணங்களைச் சாற்றுமாகமம்
விதம்விதமானவான வேறு நூல்களும்
வீணான நூல்களே யென்றாடுபாம்பே

அதாவது,

நான்கு வேதங்கள், ஆறுசாஸ்திரங்கள், தந்திரமான பற்பல புராணங்கள் இவை போன்று விதம் விதமான வேறு ஆகமங்களும், நூல்களும் வீணான நூல்களே என்று கூறுவாய் பாம்பே.

4. பிழைப்புக்காக அவரவர் கண்ட கதைகள்

வால்மீகர் அருளிய சூத்திர ஞானம் - 4

ஆமப்பா வுலகத்தில் பெருநூல் பார்த்தோர்
அவரவர்கண்டதையெல்லாம் சரிதையென்பார்
ஓமப்பா கல்செம்பைத் தெய்வமென்றே
உருகுவார் பூசிப்பார் கிரியை யென்பர்
வாமப்பா யோகமென்று கனிகாய் தின்று
வாய்பேசா வூமையைப்போல் திரிகுவார்கள்
காமப்பா ஞானமென விண்டுமேலும்
காக்கை பித்தன் மிருகம் போல் சுற்றுவாரே

அதாவது,

உலகில் பெரும் நூல்கள் படித்தவர்கள் போல அவரவர் கண்டவற்றையெல்லாம் சரிதை என்பார்கள். கல், செம்பு ஆகியவற்றைக் கடவுளாக்கி, உருக்கமான பூசைகள் செய்வார்கள். மட்டுமல்ல, யோகிகள் என்று கூறிக் காய்கனிகளைத்தின்று ஊமைபோல மவுனமாயிருந்து ஞானி வேடத்தில் காக்கைப் பித்தன் போல ஊர் சுற்றுவார்கள்.

5. சதிசெய்து சைவர்கள் போல ஒப்பனை செய்தனர்

அகத்தியர் ஞானம் 6 - 3, 4, 5

எண்சீர்விருத்தம்

ஊனென்ற வுடலைநம்பி யிருந்த பேர்க்கே
ஒரு நான்கு வேதமென்றும் நூலா றென்றும்
நானென்றும் நீயென்றும் சாதி யென்றும்
நாட்டினா ருலகத்தோர் பிழைக்கத் தானே.
உத்தார மிப்படியே புராணங் காட்டி
உலகத்தில் பாரதம் போல் கதையுண் டாக்கிக்

கர்த்தாவைத் தானென்று தோண வொட்டாக்
கபடநா டகமாக மேதஞ் சேர்த்துச்
சத்தாக வழியாகச் சேர்ந்தோர்க் கெல்லாஞ்
சதியுடனே வெகுதர்க்கம் பொருள்போற் பாடிப்
பத்தாகச் சைவர்க்கொப் பனையும் செய்து
பாடினார் சாத்திரத்தைப் பாடினாரே
பாடினதோர் வகையேது? சொல்லக்கேளு
பாரதபு ராணமென்ற சோதி யப்பா!
நீடியதோர் ராவணன் தான் பிறக்க வென்றும்
நிலையான தசரதன்கை வெல்ல வென்றும்
நீடியவோ ராசனென்றும் முனிவ ரென்றும்
நிறையருள்பெற் றவரென்றுந் தேவ ரென்றும்
ஆடியதோர் அரக்கரென்றும் மனித ரென்றும்
பாடினார் நாள்தோறும் பகையாய்த் தானே

அதாவது,

இந்த உலகத்தில் ஊனாகிய உடலை நம்பியிருந்த வர்களுக்கு நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் என்றும், நான் பெரியவன் நீ சிறியவன், மேல்சாதி, கீழ்ச்சாதியென்றும் கூறி, மக்களை அன்னியர்கள் அவர்கள் பிழைப்புக்காகப் பிரிந்துவிட்டார்கள். இவ்விதமாய்ப் புராணங்களைக் காட்டி, பாரதம் போல் கதைகளைக் கட்டி உண்டாக்கி, உண்மையான கர்த்தாவை வெளிவரவிடாமல் கபட நாடகம் போட்டு, சதியாக உயர்ந்த தர்க்கங்களைப் போல் சாத்திரங்களைப் பாடி, பக்தர்களான சைவர்களுக்கு ஒப்பனையாய் நின்றுகொண்டார்கள்.

எந்தெந்தவகைகளில் எல்லாம் பாடினார்களென்றால், பாரத புராணம் என்ற சோதி ஒன்று இருந்ததாகவும், இராவணன் என்று ஒருவன் பிறந்ததாகவும் தசரதனின் கை ஓங்கி வென்றதாகவும், அரசனென்றும், முனிவரென்றும், அருள் பெற்றவரென்றும், தேவரென்றும், அரக்கரென்றும், மனிதரென்றும் பலவகைகளில் அவர்கள் கொண்டிருந்த பகையின் காரணத்தால் நாள்தோறும் எதைஎதையோ பாடினார்கள்.

வேதங்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் அனைத்தும் எந்தப் பின்னணியில் எழுதப்பட்டவை என்பதை அறிந்து, சித்தர்கள் அந்நாட்களில் தானே தங்கள் எதிர்ப்புகளை விளக்கியிருக்கிறார்கள்.

அதி : 15 சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் IV

(வீண் பூசைகள், சடங்காச்சாரங்கள்)

வீண் பூசைகளும் மிருக பலிகளும் சடங்காசாரங்களும் தேவையற்றவைகள் என்று சித்தர்கள் அவைகளை எதிர்த்தனர். காலாகாலங் களில் ஆரிய பிராமணர்களால் புகுத்தப்பட்ட தேவையற்ற சடங்காசாரங்களைச் சித்தர்கள் தங்கள் பாடல்களில் கண்டித்திருப்பதைப் பார்க்கிறோம்.

1. உயிர்ப்பலிகள்

சிவவாக்கியம் - 1001

அம்மைகள் பிடாரிகட்குவாடு கோழி வெட்டென்பான்
பொம்மை கலியாண மது புகழ்ச்சியாய்ச் செய்யென்பான்
தம்பி தங்கச்சிக்கு மணஞ்சம்பமாய் பண்ணுமென்பான்
வம்பதாய்ப் பணத்தை வைப்பாட்டியாய்ப் பிடுங்குவனே

அதாவது

பூசாரிகள், தம்பி தங்கைக்காக மாடு, ஆடு, கோழி இவைகளைப் பலியிடு என்பான். பொம்மைத் தெய்வங்களுக்கு விமர்சையாய்க் கலியாணம் செய்துவை என்பான். தம்பி தங்கச்சிகளுக்கும் விவாகத்தை விமர்சையாய் செய்யென்பான். இவ்விதமாய்ப் பணத்தை வம்பாய்க் கொள்ளையடித்து வேசிகள் பிடுங்குவது போல் பிடுங்கி விடுவான் என்கிறது பூசாரிகளைக் குறித்து இப்பாடல்.

2. சடங்காய்த் தேர் இழுப்பு

சிவ வாக்கியர்

ஊரிலுள்ள மனிதர்களொரு மனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பை வைத்திருக்கிறீர்
ஆரினாலும் மறியொணாத னாதி சித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் பிரளி பாரும் பாருமே.

அதாவது

ஊர் மக்களெல்லாரும் ஒன்றாய்க் கூடி பெரும் வடத்தைக் கட்டித் தேரை இழுக்கிறார்கள். ஒருவராலும் அறிந்துகொள்வதற்கு இயலாத சித்த நாதரைப் (இறைவனை) பேதைகளான மனிதர்கள் படுத்தும் பாடுகளைப் பார்ப்பதே பரிதாபம் தான் !

3. வீண்பூசை செய்வது

சிவ வாக்கியர் கிரியை - 306

இட்ட குண்டமேதடா இருக்கு வேதமேதடா
சுட்ட மட்கலத்திலே சுற்று நூலதேதடா
முட்டி நின்ற தூணிலே முளைத்தெழுந்த சோதியைப்
பற்றி நின்ற தேதடா பட்டநாத பட்டனே

அதாவது

பூசைக்கென்று குண்டம் எழுப்புகிறாயே, வேதம் வேதம், இருக்கு வேதம் என்கிறாயே. மண் பாத்திரத்திலே நூலைச் சடங்காய்ச் சுற்றுகிறாயே, மனிதனில் முளைத்தெழுந்த சோதியைப் பற்றிநின்றது எதுவென்று உனக்குச் சொல்ல முடியுமா ஓ... பட்டநாதபட்டனே! எதையும் செய்கிறாயே. எதற்கு என்றும் உண்மை எதுவென்றும், உனக்குத் தெரியுமா என்றும் கேட்குமாறு.

4. சுற்றி வலம் செய்தல்

பத்திரகிரியார் - 100

பூசை செய்ததாலே சுத்த போதம் வருமோ?
பூமி வலஞ் செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்ற காலத்திலே ஆதி வஸ்துவை
அடையலா மென்று துணிந்தாடு பாம்பே

அதாவது,

பூசை செய்வதினால் சுத்தமாக முடியுமோ? பூமியைச் சுற்றிவருவதால் புண்ணியமுண்டாகுமோ? உலகப்பற்றுகளை அகற்றிக் காத்திருந்தால் மெய்ப்பொருளாம் இறைவனை அடையலாமென்று கூறுவாய் பாம்பே என்று விளக்கம் தருகிறது இப்பாடல்.

5. பூசை செய்யும் பேதைகள்

சிவவாக்கியர் - கிரியைநிலை 35

பூசை பூசை என்று நீர் பூசை செய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசை கொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ, அனாதி பூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ இன்னதென்றியம்புமே

அதாவது,

பூசை, பூசை என்று அதன் பொருள் தெரியாத பேதைகளாய்ப் புலம்புகிறவர்களே, நீங்களே ஆலயங்களாகத் திகழும்போது, பூசை செய்ய வேறு எங்கு செல்கிறீர்கள்? ஆதி பூசை கொண்டதோ? அனாதிபூசை கொண்டதோ? ஏது பூசை கொண்டதோ இன்னது எனத் தெளிவாகக் கூற முடியுமா? என்ன செய்கிறோம் என்று அறியாமல், செய்வதைக் கண்டிக்கிறது இப்பாடல்.

6. திருநீறுபூசி வேதமோதுவது வீண்

சிவ வாக்கியர் - ஞானநிலை 36

இருக்கு நாலு வேதமும் எழுத்தையுற வோதினும்
பெருக நீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்
உருக்கி நெஞ்சையுட்கலந்திங்குண்மை கூற வல்லிரேல்,
சுருக்க மற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே

அதாவது,

இருக்கு தொடங்கி நான்கு வேதங்களையும் எழுத்து விடாமல் ஓதினாலும், உடல் முழுவதும் திருநீறு பூசிக் கொண்டு, எதையோ பிதற்றினாலும் கடவுள் அங்கு இரார். நெஞ்சை உருக்கி உள்ளத்தின் உண்மையை இறைவனிடம் கூறுவதனால் மட்டும் அல்லவோ உண்மை சோதி வஸ்துவை அடைய இயலும்! என்று உருக்கமாய்ப் போதிக்கிறது இப்பாடல்.

7. பிறர் பொருளை அபகரிக்க

சிவ வாக்கியர் பாடல் - கிரியை 513

ஆசை கொண்டனுதினமும் அன்னியர் பொருளினை
மோசம் செய்தபகரிக்க முற்றிலும் மலைப்பவர்
பூசையோடு நேமநிட்டை பூரிக்கச்செய் பாதகர்
காசினியில் எழுநாகை காத்திருப்பதுண்மையே

அதாவது,

பிறர் பொருள்மேல் ஆசை கொண்டு, மோசம் செய்து அபகரித்துக் கொள்வதற்குப் பூசை, நிஷ்டைகள் என்று கூறிப் பலவற்றைச் சதிவாய்ச் செய்யும் பாதகரைத் துஷ்டமிருகங்கள் (ஏழு நாகை) கொன்று விடுவது உறுதி.

8. யோகசாடை காட்டுகிறவர்கள்

சிவ வாக்கியர் - 516

யோக சாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்
வேகமாக அட்டசித்து வித்தை கற்று நெட்டுவார்
மோகங்கொண்டு மாதரின் மூத்திரப்பை சிக்கிப்பின்
பேயது பிடித்தவர் போற்பேருலகிற் சாவாரே

அதாவது,

மோசம் போக்கும் வேஷ பூசாரிகள் யோகம் செய்வது போல் ஜாடை காட்டுவார்கள். பல வித்தைகள் காட்டி மோகத்தால் பெண்களைக் கவர்வார்கள். அவர்கள் கைகளில் பெண்கள் சிக்கிவிட்டால், பேய்கள் போல் சாடி விழுந்து தங்களையே மாய்த்துக் கொள்வார்கள்.

9. சடை முடியும் காவியும்

சிவ வாக்கியர் - 519

காவியுஞ் சடை முடிகமண்டலங் களாசனம்
தாவுருத்தி ராட்சம் யோகத்தண்டு கொண்ட மாடுகள்
தேவியை யலைய விட்டு தேசமெங்கும் சுற்றியே
பாவியென்ன வீடெலாம் பருக்கை கேட்டலைவரே

அதாவது,

வேஷ பக்தி காட்டும் போலிச் சாமிகள் காவியுடையும், சடை முடியும், கமண்டலங்களும், ஆசனங்களும், ருத்திராட்ச மாலைகளும், யோகத்தண்டும் எடுத்துக்கொண்டு, தேவியை அலையவிட்டு தேசமெங்கும் வீடுகள் தோறும் பருக்கைக்காக அலைவார்கள். கவனமாயிருக்க எச்சரிக்கிறது இப்பாடல்.

10. உங்கள் தெய்வமே உருக்குலைத்துவிடும்

சிவ வாக்கியர் - 512

தங்கள் தேகம் நோய்பெறின் தனைப் பிடாரி கோயிலிற்
பொங்கல் வைத்தும் ஆடுகோழிப் பூசைப் பலியை இட்டிட
நங்கச் சொல்லுநலிமிகுந்து நாளுந்தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள் குலத்து தெய்வமுங்களு ருக்கு லைப்பதுண்மையே

அதாவது,

தங்கள் தேகத்தில் நோய் எதாவது காணப்பட்டவுடன் கோயிலில் பொங்கல் வைத்தும், பூசைகள் பல செய்தும், ஆடு, கோழி முதலியவற்றைப் பலி செலுத்தியும் நாளுக்கு நாள் மூஞ்சூராய்த் தேய்ந்து கொண்டே போகிறாய். இப்படியானால், உங்கள் குலத்துத் தெய்வமே உங்களை உருக்குலைத்துவிடும் என்பதை நீ உண்மையாய் அறிய வேண்டும்.

11. மோசம் செய்யும் பூசாரிகள்

சிவ வாக்கியர் - 514, 515

நேசமுற்றுப் பூசை செய்து நீறு பூசிச் சந்தணம்
வாசமோடணிந்து நெற்றி மைதிலர்தமிட்டுமே
மோசம் பொய்புனை சுருட்டு முற்றிலுஞ்செய் மூடர்காள்
வேசிகளம் புரண்ட வெண்ணீறாகு மேனியே

வாதஞ் செய்வேன் வெள்ளியும் பொன் மாற்றுயர்ந்த தங்கமும்
போதவேகுரு முடிக்கப் பொன் பணங்கள் தாவெனச்
சாதனை செய்தெத்திச் சொத்துத் தந்ததைக் கவர்ந்துமே
காததூரமோடிச் செல்வர் காண்பது மருமையே

அதாவது,

நேசத்தோடு பூசைக்கென வந்து, திருநீறு பூசி, சந்தனமும் வாசனையோடு நெற்றியில் அழகான மையும், திலகமும் போட்டு தன் சரீரத்தைப் பொய் வேஷத்தால் மறைத்து, தங்கள் சரீரத்தைக் கொண்டு, தகாதவற்றைச் செய்கிறார்கள் அந்த மூடர்கள். நாள்முழுதும் பூசை செய்யப் போகிறேன், அதற்காக வெள்ளி, பொன், அதைவிட உயர்ந்த தங்கம் மட்டுமல்ல, குருமுடிக்கப் பொன் பணங்களும் தரவேண்டு மென்று கேட்டுப் பெற்றுக்கொண்டு, எல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு சிறிது தூரம் ஓடிய அவனைக் காண்பதே அரிதாகிவிடும். அனைத்தையும் கொண்டு மாய்ந்துவிடுகிறான்.

அதி : 18

சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகள் V

(சாதி ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை)

பிராமணீயம்

பிராமணீயம் என்ற மனுநூலின் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை சைவசித்தர்கள் வலுவாய் எதிர்த்தார்கள். இந்தப் பிராமணீயம், சைவசமயத்தின் கடவுள் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதும், கடவுள் கொள்கையைத் தாறுமாறாக்குவதுமாகும். தேவன் அன்பாயிருக்கிறார் என்றும், மனிதன்பேரிலுள்ள அன்பின் காரணமாய் அவரே உலகுக்கு வந்தாரென்றும் அவர் மனிதரை ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டுமென்றும் தன்னைப் போலப் பிறனையும் நேசிக்க வேண்டுமென்றும் உபதேசித்தார் என்றும் பார்க்கிறோம்.

பிராமணீயம் என்ற சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை ஒரு கூட்டத்தாரை கடவுளுக்குமேல் உயர்த்தி, ஒரு கூட்டத்தாரை இழிவுபடுத்தி, தீண்டத்தகாதவர்களாக்கி மாற்றி நிறுத்துவதால், இது மனிதநேயத்துக்கு மாறானதாய் சித்தர்கள் கருதினார்கள். எனவே, அதையும் அதற்குக் காரணமானவர்களையும் சித்தர்கள் கடுமையாய்க் கடிந்துகொண்டார்கள்.

1. மக்கள் எல்லாம் ஒன்றல்லவோ

சிவ வாக்கியர் - கிரியை 45

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூத வாசலொன்றலோ பூதமைந்து மொன்றலோ?
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொனொன்றலோ?
சாதி பேத மோதுகின்ற தன்மை யென்ன தன்மையோ?

அதாவது,

மனிதருக்குள் சாதி ஏற்றத்தாழ்வு என்பது தான் என்ன? சலம் திரண்டுவந்தால் எல்லாம் நீர் அல்லவா? பூதங்களுக்கு வாசல் ஒன்றல்லவோ? காதில் போடும் அணிகலன்கள் விதம்விதமானாலும் அது பொன் அல்லவோ? அப்படியானால் மனிதரில் ஜாதிபேதம் கூறும் தன்மை தான் என்ன தன்மையோ என்று கண்டிக்கிறது இப்பாடல்.

2. வேதங்களில் சாதி புகுத்தல்

வால்மீகர் அருளிய சூத்திர ஞானம் - 8

நில்லென்ற பெரியோர்கள் பாடையாலே
நீடுலகம் தன்னுள்ளே நாலுவேதம்
வல்லமையாய்ச் சாத்திரங்களிரு மூன்றாக
வயிறு பிழை புராணங்கள் பதினெட்டாகக்
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
கட்டினா ரவரவர்கள் பாடையாலே
தொல்லுலகில் நாற்சாதியனேகஞ்சாதி
தொடுத்தார்க ளவரவர்கள் பிழைக்கத்தானே

அதாவது

தங்களைப் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் கண்டிப்பினால் உலகத்தில் நாலு வேதங்களையும் ஆறு

சாஸ்திரங்களையும் வயிற்றுப்பிழைப்புக்காக உண்டாக்கிப் பதினெட்டு புராணங்களையும் செய்துவிட்டார்கள். மட்டுமல்ல கல்லுகளையும் கரைப்பது போல் வேதாந்தங்களையும் அவர்கள் பாணியில் கட்டி உண்டாக்கினார்கள். அதோடு நில்லாமல், உலகத்தில் நான்கு சாதிகளையும் அதிலிருந்து அனேக சாதிகளையும் அவரவர்களுடைய பிழைப்புக்காக உண்டாக்கிவிட்டார்கள். மனுசாத்திரத்தில் முதன் முதலாக சாதி ஏற்றத் தாழ்வை ஆரியர்கள் பொய்யாய்ச் சேர்த்தது இங்கு காட்டப்படுகிறது.

3. சாதி வேற்றுமை வந்துவிட்டதே

பட்டினத்துப் பிள்ளையார் - அருட்புலம்பல்

சாதியிற் கூட்டுவதோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்து வாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி

அதாவது

சாதியில் ஏற்றத்தாழ்வை உன்னதமான சமயத்தையுடைய வர்கள் எண்ணிக்கூடப் பார்க்கமாட்டார்கள். ஆனால் சாதி வேற்றுமை யோடு வாழ்வது இப்போது பெரும் பேச்சுக்கே இடமாகிவிட்டதே! என்று புலம்புகிறார் சித்தர்.

4. சாத்திரத்துக்குள்ளும் ஆக்கிவிட்டார்களே

சாதியிற் கூட்டுவாரோ சாத்திரத்துக்குள்ளாமோ
ஓதி உணர்ந்த தெல்லா முள்ளபடியாச்சுதடி

அதாவது,

சாதியில் கூடினவராக எழுதி சாத்திரத்துக்குள் ஆக்கலாமோ? அவர்கள் சொன்னவையெல்லாம் இப்போது நடைமுறையில் கொண்டு வந்துவிட்டார்களே! ஆதிநாட்களில் சாதி புகுத்தப்பட்டமை குறித்துப் பட்டினத்தார் இப்பாடலில் புலம்புகிறார்.

5. சாதிபேதமே இல்லை

அகப்பைச் சித்தர் பாடல் - 68

சாதிபேதமில்லை - அகப்பே
தானாக நின்ற வர்க்கு
ஓதியுணர்ந்தாலும் - அகப்பே
ஒன்றுந்தானில்லையடி

அதாவது,

கடவுள் பாதத்தில் தங்களைத் தாழ்த்தி, தானாக நிற்கும் மக்களுக்குச் சாதிபேதம் என்பதே இல்லை. கூட்டத்தாராய்த் தன்னலமாய் பேசிக்கொண்டாலும், சாதியென ஒன்று இல்லவே இல்லையென்று அடித்துப் பேசுகிறார் அகப்பை சித்தனார்.

6. உள்ளத்தில் பகுத்துப்பார்த்தால் சாதி இல்லை

சிவ வாக்கியர் - சரியை நிலை 38

பறைச்சி யாவதேதடா பணத்தியாவதேதடா
இறைச்சி தோலெ லும்பினும் இலக்கமிட்டிருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ, பணத்தி போகம்வேறதோ?
பறைச்சியும் பணத்தியும் புகுந்துபாரு மும்முளே

அதாவது,

ஒரு சாதியாருக்கும் மறு சாதியாருக்கும் என்ன வேற்றுமையைத் தான் காண்கிறோம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாய் இறைச்சி தோல், எலும்புகளில் தனித்தனி இலக்கம் குறிக்கப்பட்டிருக்கிறதோ? எந்தச் சாதியாரும் அனுபவிக்கும் இன்பங்களில் எதாவது வேற்றுமை இருக்கிறதோ, இல்லையே! அப்படியானால் சாதிவேற்றுமை குறித்து நம் உள்ளத்தின் ஆழத்தில் பகுத்துப்பார்க்கும்பொழுது, அதில் ஒன்றும் இல்லை என்பது தெரியவரும்.

பல பிறவிக்கொள்கை தவறானது

சிவ வாக்கியர் - 108

கறந்தபால் முலைப்புகா, கடைந்தவெண்ணை மோர்புகா,
உடைந்துபோன சங்கி னோசை யுயிர்களும் உடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயும் மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லை யில்லை யில்லையே

அதாவது இறந்தவருடைய உயிர் பல முறைகளில் பல பிறவிகள் எடுக்கும் என்பது தவறான நம்பிக்கையென்று காண்பிக்கிறார்.

அதி : 19

உண்மையான சைவர்கள் யார்

உண்மையான கடவுள் கொள்கை உடையவர்கள்

உண்மையான சைவர்கள், சைவ சித்தாந்தங்களிலும், திருக்குறளிலும் திருமறையிலும் கூறியிருக்கிறபடி, பிரகாரம் கடவுள் காட்டியுள்ள சத்தியங்களை ஏற்றுக்கொண்டு அவர் காட்டிய இரட்சிப்பின் பாதையில் நடப்பவர்கள் ஆவர். அவர்கள் உண்மையான கடவுள் கொள்கையுடையவர்கள். படைப்புகள் அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டவையென்றும், படைப்பின்போது அவை தூய்மையாய்ப் படைக்கப்பட்டன என்றும், தீயவனான சாத்தானின் சூழ்ச்சியால் மனுக்குலம் பாவத்தில் விழுந்துவிட்டது என்றும் காணப்படும் சத்தியங்களை நன்கு அறிந்தவர்கள்.

இறைவனின் மீட்பைப் பெற்றுக்கொண்டவர்கள்

பாவத்தில் விழுந்துவிட்ட மனிதர்கள்மேல் அன்புகூர்ந்ததினால், கடவுள் தாமே இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறந்து மனிதர்களின் பாவத்துக்காகப் பொறிவாயில் அதாவது சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து மனிதரை மீட்டுக்கொண்டார் என்பதையும் அறிவார்கள். இறைவனின் மீட்பை ஏற்றுக்கொண்ட அவர்கள், அவர் காட்டிய இரட்சிப்பின் பாதையில் (அறவழி) நடப்பார்கள். இம்மையில் அமைதியும் இறை இன்பமும் நாடுவார்கள்.

மறுமையின் பேரின்பத்துக்காக வாழ்கிறவர்கள்

மறுமையின் பரலோக வாழ்வுக்காக இம்மையில் அன்பின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள். மறுமையில் இறைவனோடு நித்திய பேரின்பத்தில் இணைவோமென்ற உறுதியான நம்பிக்கையோடு இவ்வுலக வாழ்க்கையை நிறைவு

செய்பவர்கள். ஆதி கிறிஸ்தவர்களின் வாழ்க்கையும் இதே இலட்சியத்திலேயே அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதே ஆகும்.

பிறவிசுழற்சிக் கொள்கைக்கு எதிரானவர்கள்

மேற்கண்ட இலட்சியங்களையுடைய சைவர்கள் பிறவி சுழற்சிக்கொள்கை போன்ற பல மூடநம்பிக்கைகளை வெறுத்துவிட்டு விட்டவர்களே. அதைச் சில சித்தர் பாடல்களிலும் பார்க்கிறோம். அவர்கள் கண்டித்த பலதெய்வ வழிபாடு, விக்கிரக ஆராதனை, பின்னால் வந்த வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், சடங்கா சாரங்கள் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைகள் அனைத்தையும் அவர்களால் ஆனமட்டும் எதிர்த்து இரத்தசாட்சி மரணத்துக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களென்றும் காணப்படுகிறது.

இதைக்குறித்த சில பாடல்கள்

1. சைவம் யாருக்கு? - மோட்சம் செல்வோருக்கே

அகப்பேய்ச்சித்தர் பாடல்

சைவம் ஆருக்கடி? - அகப்பேய்
தன்னை அறிந்த வர்க்கே

சைவமான விடம் - அகப்பேய்
சற்குரு பாதப்படி

ஆரலைந்தாலும் - அகப்பேய்
நீயலையாதேயடி

ஊரலைந்தாலும் - அகப்பேய்
ஒன்றையும் நாடாதே
இந்திர சாலமடி - அகப்பேய்
எண்பத்தொரு பதமும்

மந்திரமப்படியே - அகப்பேய்
வாயைத் திறவாதே
சாதி பேதமில்லை - அகப்பேய்
தானாகிநின்றவர்க்கே

மெய்யென்று சொன்னக்கால் - அகப்பேய்
வீடுபெறலாமே

அதாவது,

சைவம் யாருக்கென்றால், தன்னை அறிந்தவர்க்கே உகந்த தாகும். அதுவே சற்குரு (இறைவன்) பாதப்படி. அதற்காக அலைந்து திரிவது தேவையற்ற செயலாகும். ஊரே அலைந்தாலும் எங்கும் அலையத் தேவை இல்லை. சிலர் வெறும் ஜாலவித்தைகளையும், மந்திரங்களையும் காட்டுகிறார்கள். நாம் வாயைத் திறக்க வேண்டாம். தானாய் நின்றவர்க்குச் சாதி பேதமே இருப்பதில்லை. மெய்யான சைவர்கள் மோட்சம் அடைவார்கள். இதிலிருந்து சைவர்கள் மறுமை வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என்பதைக் காண்கிறோம்.

2. சைவபக்தர்களின் வாஞ்சை

மெய்ஞானப் புலம்பல் - பத்திர கிரியார்

புல்வாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய் - 50
எல்லாப்பிறப்பி னிருளகல் வதெக்காலம்?

பற்றற்று நீரிற் படர்தாமரை யிலைபோல் - 55
சுற்றத்தை நீங்கிமனந்தூர நிற்பதெக்காலம்?

அஞ்ஞானம் விட்டே அருண் ஞானத்தெல்லை தொட்டு - 101
மெய்ஞான வீடு பெற்று வெளிப்படுவ தெக்காலம்?

அருவாய் உருவாகி ஆதி அந்த மாகி நின்ற - 118
குருவாகி வந்தெனை யாட் கொண்டருள் வதெக்காலம்?

ஓரின்பங் காட்டும் உயர் ஞான வீதிசென்று - 133
பேரின்ப வீடு கண்டு பெற்றிருப்பதெக்காலம்?

ஆதிகபிலர் சொன்னஆகமத்தின் சொற்படியே - 126
சாதிவகையில்லாமல் சஞ்சரிப்பதெக் காலம்

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச் - 155
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்பதெக்காலம்?

அதாவது,

புல்லாயும், விலங்காயும், புழுவாயும், மனிதனாயும் பிறக்கும் பிறப்புகள் (மறுபிறவிகள்) அனேகமுண்டு என்கிற இருள் அகன்று, உண்மை அறிவடைந்து இருப்பதை வாஞ்சிக்கிறேன். தண்ணீரில் மிதக்கும் தாமரை இலையில் நீர்படாதது போல உலகப் பற்றுகள் யாவும் விட்டு நீங்கியிருக்க வாஞ்சிக்கிறேன். அஞ்ஞானம் விட்டு மெய்ஞானம் பெற்று மோட்ச வீடு செல்ல வாஞ்சிக்கிறேன். ஆதியு மந்தமுமாகியவரும் குருவாய் வந்தவருமான இறைவன் என்னை முற்றிலும் ஆட்கொண்டருள்வதை வாஞ்சிக்கிறேன். நித்திய இன்பம் காட்டும் மோட்சவீதி சென்று, அங்கு எமக்காய் அமைக்கப்பட்டிருக்கும் பேரின்ப வீட்டைக் காண வாஞ்சிக்கிறேன். கபிலர் சொன்ன ஆகமத்தில் கூறியபடி, சாதிவகை எதுவுமே இல்லாமல், களிப்புடன் சமுதாயத்தில் சஞ்சரிக்க வாஞ்சிக்கிறேன். அதுமட்டுமல்ல, வீணாய் எழுதப்பட்ட சாஸ்திரங்களைச் சுட்டு சதுர் வேதங்களைப் பொய்யாக்கி உண்மையான சூத்திரத்தைக் கண்டு துயர் நீங்கி இருக்கவும் வாஞ்சிக்கிறேன். இப்படிப்பட்ட வாஞ்சையினால்தான், சைவசித்தர்கள் தங்களால் ஆனமட்டும் சத்தியத்துக்காய்ப் போராடி, இரத்த சாட்சிகளாய்க் கொல்லப்பட்டார்கள்.

3. சற்குரு, மெய்ம்மதம், மெய்ப்பொருள்

குருவணக்கம் - பாம்பாட்டிச் சித்தர் பாடல் 10, 11, 12

சாற்று முடல் பொருளாவி தத்தமாகவே
தானம் வாங்கி நின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றி மனம் வாக்கு காயம் மூன்றும் பொருந்தப்
புகழ்ந்து புகழ்ந்து நின்றாடு பாம்பே - 10

பொய் மதங்கள் போதனை செய் பொய்க்குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியிற் போக விருக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்றுமே விளம்பும்
மெய்க் குருவின் பதம்போற்றி ஆடுபாம்பே - 11

வேதப்பொருள் இன்னதென்றும் வேதம் கடந்த
மெய்ப்பொருளைக் கண்டு மனம் மேவிவிரும்பில்
போதப்பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரணசற்குரு தாள் கண்டாடு பாம்பே - 12

சற்குரு

உலக மக்களாகிய நாம் பெற்றிருக்கும் உடல், பொருள் ஆவி ஆகியவற்றை இறைவனிடம் தானமாய் அற்பகால வாழ்வுக்காகப் பெற்றிருக்கிறோம். எனவே, நம் சற்குருவைப் போற்றி மனம், வாக்கு, காயம் ஆகியவை மூன்றும் பொருத்தமானதாய் நடக்க அவரைப் புகழ்ந்து ஆடுபாம்பே. ஏனென்றால் அதில் மாறுபாடுகளோ, தாக்கங் களோ ஏற்படுவதில்லையென்று இறைவனடி சேர்ந்தவர்களைப் பற்றிப் பாடுகிறார்.

மெய்ம்மதம்

அடுத்த கவியில் பொய்யான மதங்களைத் தங்கள் சுய லாபத்துக்காகப் போதனை செய்யும் பொய்க் குருக்களுக்குப் (உலகத்தில் அனேகம் பேர் இப்படி இருக்கிறார்கள்) புத்தி சொல்லி அவர்களையும் நல்நெறிகளில் போகக்கூடியதாய் நடத்தும் மெய்யான மதம் இன்னதென்று காண்பிக்கும் மெய்குருவின் பாதம் போற்றி ஆடு பாம்பே என்கிறார். மெய்க்குருவாய் உலகில் வந்த கடவுளை அறிந்து அவர் பாதம் வந்துசேரப் போதிக்கப்படுகிறோம்.

மெய்ப்பொருள்

மெய்ப்பொருளாம் இறைவனைச் சேரவேண்டுமென்கிறது அடுத்த பாடல். வேதப்பொருள் இன்னதென்று அறிந்துகொள்ள வேண்டும், அதோடு வேதம் கடந்த மெய்ப்பொருளாம் இறைவனை உண்மையாய்க் கண்டுகொண்டு அவர் பாதத்தைக் கண்டு ஆடு பாம்பே அதாவது மெய்ப்பொருளாம் இறைவனை விட்டுச் சற்றேனும் விலகி உலக குருக்களிடம் செல்லக் கூடாதென்கிறது இப்பாடல்.

[**ஆதாரம்:** இந்த சித்தர் பாடல்கள் திரு. **சந்தானம்** அவர்களால் தொகுக்கப்பட்டு, ஆர். ஜி. பதி கம்பனி, வெங்கட் ராமய்யா தெரு, சென்னை-1 என்பவரால் பிரசுரிக்கப்பட்ட, ஞான இரகசியம் என்னும், இருபது சித்தர் பாடல்கள் என்ற நூலிலிருந்தும், திரு. **எஸ்.பி. ராமசந்திரன்** அவர்கள் பதிப்பாசிரியராக, தாமரை நூலகம், 7 N.G.O. காலனி, வடபழனி, சென்னை - 600 026 என்பவரால் அக்டோபர் 1994-ல் வெளியிடப்பட்ட (188) சிவ வாக்கியம் 1000 என்ற நூலிலிருந்தும் எடுக்கப்பட்டன.]

4. சைவர்களின் அனுபவம் - இறைவன் வகுத்த வழி

(i) திருமந்திரம் - 1567

சைவசமயத்தனி நாயகன் நந்தி
உய்யவகுத்த குரு நெறி ஒன்று உண்டு
தெய்வச்சிவ நெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்து உளார்க்கு வகுத்துவைத்தானே

அதாவது,

சைவசமயத்தின் ஒப்பற்ற நாயகனாகிய இறைவன் அழிவுக்குள்ளான மக்களை அழிவிலிருந்து தப்பிப் பிழைக்கச் (மீட்க) செய்து வைத்த குருநெறியாகிய ஞானமார்க்கம் ஒன்று உண்டு. அது இறை அன்பினால் உண்டான சன்மார்க்க நெறியாகும். உலக மக்கள் அனைவரையும் உய்விப்பதற்காக (மீட்பதற்காக) இந்தச் சிறந்த வழியை இறைவனே வகுத்துள்ளான்.

(ii) பேரின்பம் சுவைக்கும் சைவர்கள்

திருமந்திரம் 2976

கரும்பும் தேனும் கலந்தோர் காயத்தில்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளி உறக்கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் மளித்ததே

ஓர் உண்மையான சைவ பக்தரின் அனுபவம் இங்கு காட்டப் படுகிறது. கரும்பும் தேனும் விரும்பிச் சுவைப்பதைப்போல, உலக மனிதர்கள் தங்கள் உடம்பை உலகச் சிற்றின்பங்களுக்கு விட்டுக் கொடுத்து, இன்பம் தேடுகிறார்கள். அதே உடம்பின் உள்ளேயே அரும்பாக (மொட்டாக) இறை இன்பம் வைக்கப்பட்டிருக்கிறது. சிற்றின்பத்தை நாடிய மனம், அதை விட்டுவிலகி அரும்பாயிருந்த இறை இன்பம் மலர்ந்து, மணம் வீசும் நிலையை அடைந்துவிட்டால்...? உள்ளம் பேரின்பத்தைச் சுவைக்கத் துவங்கிவிடும். அப்போது அந்த உள்ளம் சிற்றின்பத்தை வெறுத்து விட்டுவிட்டு, பேரின்பத்தையே

சுவைக்க நாடும். ஓர் உண்மையான சைவ பக்தனின் இந்த அனுபவம் வாழ்க்கையை நேர்மாறாக்கிவிடுகிறது. அதாவது, முந்தையக் கரும்பு கசந்துவிடுகிறது, தேனும் புளித்துவிடுகிறது. இறைப்பேரின்பத்துக்கு நிகரே இல்லை...!! இதைக் குறித்து விவிலியத்தில், கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் (*சங்.34:8*) என்று வாசிக்கிறோம்.

(iii) இறைவனைப் போற்றும் சைவர்

திருமந்திரம் 2965

அன்னையும் அத்தனும் அன்புற்று அல்லது
அன்னையும் அத்தனும் யார் அறிவார் என்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்து
அன்னையும் அத்தனை யான் புரந்தேன்.

அதாவது,

என்னைத் தாயாகவும், தந்தையாகவும், கூட இருந்து அரவணைப்பவர் இறைவனே. அவருடைய அருள் இல்லாமல், என் தாயும் என் தகப்பனும் என்னைப் பாதுகாக்க முடியாது. எனவே, நான் என் தாயோடும் தந்தையோடும் சேர்ந்திருந்து இறைவனையே போற்றுவேன் என்கிறது சைவபக்தரின் மனம்.

(iv) திருவடி ஞானம் பெற்றுக்கொள்பவர்கள்

திருமந்திரம் 1598

திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவ லோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானம் திண் சித்தி முக்தியே.

அதாவது,

இறை அடிகளில் அமர்ந்து, அவனையே தியானம் செய்வது மூலம் கிடைக்கப்பெறும் நான்கு மேன்மைகளை இப்பாடல் காண்பிக்கிறது.

முதலாவது திருவடி ஞானம் சிவம் ஆக்கிவிடுகிறது. அதாவது, அவரைத் தியானிப்பது நம்மை அவர் சாயல் ஆக்கிவிடுகிறது.

இரண்டாவது, அது நம்மைப் பரலோகம் (சிவலோகம்) சேர்க்கிறது. மூன்றாவது அது சிறைமலம் மீட்கும். அதாவது நம்மைச் சிறைப் படுத்துகின்ற உலகப் பற்று என்ற பாவத்திலிருந்து விடுதலை ஆக்குகிறது. நான்காவது, நிச்சயமாகவே அது நம்மைப் பேரின்ப வீட்டிற்குச் (முக்தி) கொண்டு சேர்க்கிறது.

இவையாவும் உண்மையான சைவசித்தர்களின் பண்புகளாய் காணப்படுகிறது.

அதி : 20

புராணக்கதைகளுக்கு சித்தர்களின் எதிர்ப்பு ஏன்?

வரலாற்றுண்மைகளை எளிய முறைகளில் கதைகளாகப் பாமர மக்களுக்கு விளக்கும் நோக்கத்தில் பற்பலவிதங்களில் எழுதப்பட்ட புராணக் கதைகள், அவைகளின் வரலாற்றையே மறைத்து அதன் சத்தியங்களைத் திசை திருப்பி விடுவதால் சைவசித்தர்கள் அவைகளை எதிர்த்தார்கள்.

எடுத்துக்காட்டு

1. முருகக்கடவுளின் சூரசம்காரம்

குமாரனாகிய கடவுள் தீயவனான சாத்தானை வென்றவர் என்பதற்குப் பல புராணக் கதைகள் கூறப்பட்டன. அவற்றில் ஒன்று சூரசம்காரம், அதாவது, முருகன், தீயவனான சூரபத்மனை அழிக்க, வேல் ஆயுதத்தோடே அவனைத் துரத்தவே, அவன் ஒரு மாமரம் ஆக மாறிவிட்டான். முருகன் தன் ஆயுதத்தினால் மாமரத்தைப் பிளந்துவிட்டான். மரத்தின் ஒருபகுதி மயிலாகவும் மறுபகுதி சேவலாகவும் மாறிவிட்டது. முருகன் சேவலைக் கொடியாகவும், ஆணவத்துக்கு அடையாளமான மயிலைத் தன் வாகனமாகவும் ஆக்கி, தோற்றுப்போன சாத்தானாகிய பாம்பை மயிலின் காலின் கீழாக்கி வெற்றி பெற்றுக்கொண்டாரென்பது தான் அப்புராணக்கதை.

வரலாற்று உண்மை மறைக்கப்படுகிறது

உலக வரலாற்றில் மனிதனாக வந்த குமாரனாகிய இயேசு மனிதரின் பாவங்களைச் சுமந்து சிலுவை மரத்தில் பலியாகி சாத்தானின் வஞ்சனையைத் தோற்கடித்து மனிதருக்கு இரட்சிப்பைத் தந்தார் என்பது தான் நடைபெற்ற வரலாறு. எனவே, வெற்றிபெற்ற இறைவனைச் சேர்ந்து விட்டால், சாத்தானையும் அவன் தீங்குகளையும் முறியடித்து இன்றும் நாம் வெற்றி பெறலாம் என்பது அறியவேண்டிய சத்தியம். ஆனால் இந்த உண்மை மறைக்கப்படுவதால் விடுதலையை நாம் இழந்துபோகிறோம் என்பது மட்டுமல்ல; நாம் எங்கெங்கோ திசை தப்பியவர்களாகவும் நடத்தப்படுவோம்.

2. முருகனுக்குக் காவடி

காவு + தடி = காவடி. காவு என்றால் பலி, காவு தடி என்றால் பலிக்குரிய தடி என்பது பொருள். குமாரனாகிய கடவுள் மரச் சிலுவையில் பலியானார். இது வரலாறு. இதை நினைவுகூரும் விதம் கிறிஸ்தவர்களில் சில பிரிவினர் இன்றும் மரச்சிலுவையைச் சுமந்து செல்வதுண்டு.

இந்து தேசத்தில் அதற்குக் காவடியைப் பயன்படுத்தினார்கள். ஆனால் அதன் கருத்தைக் குறித்து இன்று எவரும் சிந்திப்பதில்லை. அதோடு குமாரன் சிலுவையில் குத்தப்பட்டுக் காயப்பட்டதை நினைவு கூரும் வகையில் அவர்கள் தங்கள் சரீரங்களில் கம்பிகள் செலுத்தி, குத்தப்பட்ட காயங்களோடு செல்வதும் உண்டு. ஆனால் உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளையும் சத்தியங்களையும் அறிந்துகொண்டு, நமக்காகப் பாடுபட்ட இறைவனுக்கு நன்றி செலுத்தி, அவரைப் பற்றிக் கொண்டால் அல்லவோ நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம்நித்திய ஜீவனைப் பெற்று ஆசீர்வதிக்கப்படுவோம்! இன்று சத்தியங்கள் அறியும் முகாந்திரம் எல்லாம் மறைக்கப்படுகின்றனவே!

3. மரித்து உயிர்த்த பிள்ளையார்

உலக வரலாற்றில் தேவ குமாரனாகப் பிறந்தவர் மனிதரின் பாவத்துக்காக மரித்து உயிர்த்தெழுந்தவர் ஆவர். குமாரன் (பிள்ளையார்) மரித்து உயிர் பெற்றதாகக் கூறப்படும் கற்பனைப் புராணக்கதை ஒன்றுண்டு. அந்தப்பிள்ளை, குளித்துக்கொண்டிருந்த தாயின்

அழுக்கிலிருந்து உருவாக்கப்பட்டு, தாயின் காவலுக்காக நிறுத்தப் பட்டிருக்க, தந்தை உள்ளே வர முயற்சித்தார். மகன் (பிள்ளை) தடுக்கவே, தந்தை கழுத்தை வெட்டி விட்டார். தாயின் சொல்லைக் கேட்டு, தந்தை வெளியே செல்ல, அங்கு கண்ட ஒரு யானையின் தலையை வெட்டி வந்து மரித்துப்போன பிள்ளைக்கு வைக்க, பிள்ளை உயிர் பெற்றுக்கொண்டது. இப்படித் தொடர்கிறது அந்த அழுக் குருண்டைப் பிள்ளையாரின் கதை.

உண்மைக்கு மாறுபட்ட கதை

உண்மை வரலாற்றில் பிறந்த இறைவனின் பரிசுத்த பிள்ளை (பிள்ளையார்)-யான உயிர்த்தெழுந்த இயேசுவுக்கும் புராணக்கதையில் கூறப்படும் பிள்ளையாருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை யென்பதைத் தெளிவாய்ப் பார்க்கிறோம். பின் நாட்களில், விதம் விதமான புராணக்கதைகள் பற்பல நிலைகளில், பற்பல நேரங்களில் எழுதப்பட்டு, அந்தக் கதைகளுக்கெல்லாம் உபகதைகளும் எழுதப்பட்டு, அவைகளின் அடிப்படையில் விக்கிரகங்களும், தொழுகை முறைகளும் சடங்காசாரங்களும் உருவாக்கப்பட்டு, மேலும் அனேகச் சீரழிவுகள் செய்யப்பட்டன. இவைகளையெல்லாம் சித்தர்கள் எதிர்த்தார்கள். போராட்டங்கள் பலகாலங்களாக நீண்டுகொண்டே சென்றதை வரலாற்றில் பார்க்கிறோம்.

வரலாற்றில் ஒளியாய் வந்தவர்

கடவுள் உலகுக்கு ஒளியாய் வந்தார் என்பது, திருமறை காட்டும் ஓர் வரலாற்று உண்மை. அதற்குப் புராணக்கதைகள் பல கூறி, ஐயப்பன் என்ற பெயரில் செய்யப்படும் பல ஆசாரமுறைகளை நாம் பார்க்கிறோம். மலையில் சென்று பார்க்கிறவர்கள், ஓர் ஒளியைப் பார்க்கிறார்கள். அங்கு காண்பிக்கிற ஒளி செயற்கையாய் மனிதர்கள் உண்டு பண்ணுவதென்று நிரூபிக்கப்பட்டபின்னும் கூட, ஒளியைக் காண, தேவனென்று ஓடோடிச் செல்லும் கூட்டம் கூடிக்கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம்.

இவையெல்லாம் புராணக்கதைகளைக் கொண்டு சாத்தான் உருவாக்கிய வஞ்சனைகளில் மக்கள் சிக்கிவிடுவதையே காண்பிக்கின்றன.

அதி : 21

யாரை வணங்க வேண்டும்?

(சைவ சித்தரின் ஆய்வு)

சைவம், கிறிஸ்தவம்

பாவத்தில் விழுந்து நித்திய மரணத்துக்குப் பாத்திரராகி, உழன்றுகொண்டிருந்த மனுமக்களை உய்வித்து, மீட்டு, பரலோகம் கொண்டுசேர்க்க, இறைவனே மனிதனாக இந்த உலகுக்கு வந்தார். அவருக்கு இடுகுறிப்பெயர் எதுவும் இல்லை. அவர் பல காரணப் பெயர்களால் அழைக்கப்படுகிறார் என்பதைப் பார்த்தோம். அவர் மனிதரை இரட்சிக்க வந்தவர் என்றக் காரணத்துக்காக அவரை யஷுவா என்று எபிரேய மொழியிலும், அதே காரணத்துக்காக அவரை உய்ய வந்தானென்று தமிழ் மொழியிலும் அழைத்தார்கள்.

அவர் மனுமக்கள் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக இந்த உலகத்தில் மனிதனாக வந்து, பாடுகள் சகித்து, மனுக்குலத்துக்காகச் சிலுவையில் மரித்து, தமது அன்பை வெளிப்படுத்தினார். அவர் அன்பாகவே இருக்கிறார். எனவே, அன்பும் சிவமும் இரண்டல்ல என்கிறோம். அன்பே உருவான உலக இரட்சகரை ஏற்றுக்கொண்டு, அவர் காட்டிய வழியில் நடப்பவர்கள் ஆரம்பத்தில் சாட்சிகள் (சான்றோர்) என்றும், பின்பு மேற்கில் கிறிஸ்தவர்கள் என்றும், கிழக்கில் சைவர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆனால் இந்து தேசத்தில் சிவன் என்ற தூயபெயரில் சாத்தானால் மாசு செலுத்தப்பட்டதைப் பார்க்க முடிகிறது.

சித்தரின் முயற்சிகள்

பின் நாட்களில் வேதங்களிலும், சாத்திரங்களிலும், புராணக் கதைகளிலும், அவதாரக் கதைகளிலும் குறிப்பிடப்படும் பற்பல கடவுள் பெயர்களை நோக்காமல், உண்மையான கடவுளைக் கண்டுபிடிக்கும்

முயற்சிகளை சித்தரான அகத்தியர் மேற்கொண்டிருப்பது, நமது கண்களையும் திறப்பதாய் உள்ளது.

டாக்டர் வி. ஞான சிகாமணி அவர்கள் எழுதிய "அகத்தியர் ஞானம்" என்ற மூல நூலிலிருந்து இருபது பாடல்களைத்தொகுத்து திரு. S. தாயப்பன் அவர்கள் 'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்' என்ற தலைப்பில், சிறந்த ஓர்நூல் வெளியிட்டிருக்கிறார்கள். சைவர்கள் வணங்கும் இறைவன் எப்படிப்பட்டவர் என்று, அவருடைய செயல் களிலிருந்தும் அவருடைய தன்மைகளிலிருந்தும் அவரை அறிந்து வணங்க முடியும் என்பதை அகத்தியர் விளக்கிக் காட்டுகிறார். ஓர் சில பாடல்களைக் கவனிப்போம். அதற்குமுன் 'சுத்த சிவன்' என்று எடுத்துச் சொல்வதற்கான காரணத்தையும் அறிய வேண்டும்.

சுத்தசிவம் என்று எடுத்துக்கூறக் காரணம்

சிவம் என்பதின் தூயநிலையை பின்னால் புராணக் கதைகள், வேதங்கள், சாத்திரங்கள் ஆகியவை மூலம் அசுத்தப்படுத்தியதை வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஆதியில் கூறப்பட்ட தூயசிவத்தை சுத்த சிவம் என்று அவர் அடியவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. 'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்' என்ற நூலில் 30, 36 பக்கங்களில் திரு. சு. நா. இரத்தினர் மற்றும் வேதநாயகம் சாஸ்திரியார் சுத்த சிவம் அசுத்த சிவம் குறித்துக் கூறுவதாவது:

"சுத்த சிவம் என்னும் போது, அசுத்த சிவம்
உண்டென்பதும் அறிய வேண்டும்

கொங்கணமகரீஷி கூறியதாவது:
கடவுளுக்குப் பெண்டேது? பிள்ளையேது? காமகுணலீலை

முதலான தேது? கடவுளுக்கு பகடிசீட்டுத்
தாயமேது? காடுகளில் வேட்டை கட்டுத்

திரிவதேது? கடவுளுக்குக் காமிகளின்
தொழீலேயில்லை, காருண்யத்தொழில்

ஒன்றே கடவுள் பாரம், தெய்வகுண
மற்ற தீயோனை கடவுள் என சொல்வது
பாவமும் அறியாமையுமாகும்"

இங்கு கூறப்படும் காமலீலைகளெல்லாம் பின்னால் சாத்தானின் தூண்டுதலினால் அசுசிப்படுத்துவதற்காகக் கதைகளில் சேர்த்தவைகளென்பது காட்டப்படுகிறது.

வேதநாயக சாஸ்திரியார் கூற்று

"பாம்பை அணிந்தவன் தேவனாமோ
பாம்பில் கிடந்தவன் தேவனாமோ
பாம்பில்கிடந்தவன் தேவனானால்
பாம்பாட்டியும் கூட தேவனாவான்
பாம்பாட்டி பாம்பு உனக்கு நன்மை செய்ததோ
பாம்பை அடித்துக்கொன்ற நீயே
பாம்பைப் பணிந்தாயென்று ஆடு பாம்பே"

தேவ அன்பை (சிவம்) திசைதிருப்பி, அசுத்தத்தோடு அதாவது பிசாசோடு சேர்ப்பதற்கு சத்துருவின் தூண்டுதலால் செய்யப்பட்டப் புராணக் கதைகள் இங்கும் சுட்டப்படுகின்றன.

பெயரில் அசுத்தங்கள் புரட்டப்பட்டது

மேற்கண்டவற்றிலிருந்து, நாம் அறிந்திருக்க வேண்டிய உண்மைகளை சரியாகப் புரிந்து உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதை அறிகிறோம். ஆதிநாட்களில் அன்பராக அழைக்கப்பட்ட சிவன் என்ற பெயரில் பின் நாட்களில் சாத்தானின் திட்டமிட்ட சூழ்ச்சியினால் ஆபாசக் கதைகள் கட்டப்பட்டு, சிவன் என்ற தூயபெருக்கே களங்கம் வருத்தும் முறைகள் புகுத்தப்பட்டுவிட்டது என்ற தெளிவோடு நாம் அகத்திய சித்தரின் பாடல்களை படித்தால் யாரை வணங்கவேண்டும் என்பது பெயரைக் குறிப்பிடாமலேயே விளங்கிவிடும். அன்பே உருவான சுத்த சிவன் யாரென்றும், அசுத்தங்கள் புகுத்தப்பட்ட புராண சிவன் யார் என்றும், சாத்தானின் தந்திரங்களை அறிந்துகொண்டு பாடல்களைக் கவனிப்போம்.

1. சாம்பல் பூசி சிவசிவ என்று அலைவதா?

அகத்தியர் ஞானம்

"சங்கமதில் பரப்பிரம்மம் ஒன்றைப் போற்றி,
சகல பாவம் தீர நன்மைதனையே சாற்றி,
துங்கமுறும் இலிங்கம் என்றும் பூசை செய்து

சுணை கெட்ட மாடப்பா சாம்பல் பூசி
எங்கணும் போய்ச் சிவசிவ என்று அலைந்து.
ஏங்கி எரிநரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்
பொங்கு திரை கடல் மூழ்கித் தீட்சை பெற்றால்
புகழ் கிரியாம் கயிலாயம் போகலாமோ?"

அதாவது,

அன்பே உருவான உண்மை சிவனை அறியாமல், பரம் பொருளாகிய இறைவன் என்ற நம்பிக்கையில், பாவம் தீர தான தர்மங்கள் செய்துகொண்டும், லிங்கத்தை பூஜித்துக்கொண்டும், உடம்பெல்லாம் சாம்பல் பூசி சிவ, சிவ என்று ஊரெங்கும் சுணை கெட்டு அலைவது அவல நிலையல்லவோ? இவையெல்லாம் எரிநரகத்துக் குரியவனான சாத்தான் மனிதருக்குக் காட்டும் தவறான பாதை என்பதை அறியாமல் அவைகளை செய்து கடலில் மூழ்கி தீட்சையும் பெற்றுக்கொண்டால் மோட்சம்போகலாம் என்று நினைப்பது தவறல்லவா என்கிறது இப்பாடல். இங்கு குறிப்பிடுவது சுத்தசிவன் அல்ல புராண சிவன் என்பது தெளிவு.

2. வீண் சடங்குகள் மோட்சம் சேர்க்காது

அகத்தியர் ஞானம்

"போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கை தனில் முழுக வேண்டாம்;
சாகமுண்டு தலைகீழாய் நிற்க வேண்டாம்;
சுத்தலிங்க மலர் எடுத்து சாத்த வேண்டாம்;
தாகமுடன் தீ வளர்ந்து குதிக்க வேண்டாம்;
தாரணியில் பல பேயைத் தொழவும் வேண்டாம்;
ஏகனென்று பிரமாவை நாடவேண்டாம்;
இந்த நூல் பார்த்து அறிவீர் இன்பமாய்த்தானே."

அதாவது,

மோட்சம் செல்வதற்கு வீண் சடங்காச்சாரங்களான யாதொன்றும் தேவையில்லை. அதற்காக பொய்கையில் மூழ்கவோ, தலைகீழாய் நிற்கவோ, லிங்க பூசை செய்யவோ, தீ மிதித்துக் கடக்கவோ, பேய்களைத் தொழவோ பிரம்மாவை நாடவோ வேண்டாம் என்பதை இந்த நூலிலிருந்து அறிந்துகொள்ளுங்கள் என்று வழிகாட்டுகிறது

இப்பாடல். புகுத்தப்பட்ட ஆசார முறைகள் யாதொன்றும் ஒருவனை பரலோகம் சேர்க்காது என்பது வலியுறுத்தப்படுகிறது.

3. சாத்தானைக் (அலகை) குறித்து அறிந்துகொள்ளுங்கள்

அகத்தியர் ஞானம்

"அலகையது தேவனுக்கு சரியாய் நின்று,
ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே,
நிலைகுலைந்து பாதாளக்குழிக்குள் நின்று,
நித்தியமும் மானிடரை மோசம் போக்கி,
பலகலையும் உணர் அறிவை மயக்கி தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்
நிலையதுவை அறியாமல் போறார் போறார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே."

அதாவது,

இப்பாடலில் ஓர் முக்கியமான கருத்து விளக்கப்படுகிறது. அது மனிதருக்கு எதிராளியான தீயவனான (அலகை) சாத்தானின் ஆரம்ப நிலைகுறித்தும் அவன் மக்களை எப்படி ஏமாற்றி தன்னோடு நரகாக்கினைக்கு இழுத்துக்கொண்டிருக்கிறான் என்பதைக் குறித்தும் விளக்கி நாம் சிந்தித்து அறிந்து சதிக்கு விலகி தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று புத்திகூறுகிறது.

ஒரு காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்த அவன், தான் தேவனுக்கு நிகரானவன் என்று அகந்தையால் ஆங்காரம் கொண்டு விட்டான். அந்நேரம் தானே அவன் நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் தள்ளப்பட்டான். அவன் எரிநரகத்துக்குரியவனாகி விட்டான். எனவே அவனுடைய நிரந்தர வேலை என்னவென்றால், நரகத்தில் அவனோடு வசிக்க ஆள்சேர்க்க வேண்டும் என்பது தான். அதற்காக அவன் என்ன செய்கிறானாம்? ஒவ்வொரு நாளும் மானிடரை அவனுக்காக மோசம் போக்கிக்கொண்டே இருக்கிறான். எப்படி யென்றால் அனுதினமும் அவன் அவனுடையவர்களைக் கொண்டு பல்வேறு கவர்ச்சிக் கலைகளில் மக்களுக்கு ஆர்வமுண்டாக்கி அவர்களை அவைகளிலேயே மயங்க வைத்து, தங்களை அறியாமலேயே பாதாள வீட்டிற்குக் கொண்டு சேர்த்து விடுகிறான்.

கோடி கோடியான மக்களோ இந்த நிலைகளை அறியாமல், அவன் பின்னே கவர்ச்சி வசப்பட்டு சென்றுகொண்டே இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சிந்தித்து அறிந்து தப்பிக்கொள்ள வழி தேடவேண்டுமென்பதே அகத்தியர் விருப்பம். திருமறையும் இக்கருத்துகளை எச்சரிப்பாய்க் கூறுவதைப் பார்க்கிறோம்.

4. உண்மைக் கடவுளைச் சேர்வதெப்படி?

அகத்தியர் ஞானம்

"செபத்தையே செய்வதற்கு சிவன் வேணும்
செபம் செய்யத்திருச்சித்தம் தேட வேணும்
பவத்தையே ஒழிப்பதற்குக் கண்ணீர் வேணும்
பரன்பாதம் அடைவதற்குத் தவசு வேணும்
அவத்தமாய்ப் பலதானம் பண்ண வேண்டாம்
ஆறு குளம் தனில் மூழ்கி அலைய வேண்டாம்
சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்
தீட்சை பெற்று சிவ பாதம் தேடுவாயே"

இப்பாடலில் உண்மையான இறைவனைச் சென்றடைவதற்கு நாம் செய்யவேண்டிய முறைகளும், நாம் கைக்கொள்ள வேண்டாத முறைகளும் அழகாக விளக்கப்படுகிறது.

செய்ய தேவையற்றவை

பலபேர் இந்நாட்களில் சொல்வது போன்ற பயனற்ற தான தர்மங்கள் செய்யவேண்டாம். பெரும்பாவங்களை உள்ளே வைத்துக்கொண்டு, சடங்குக்காகச் செய்யப்படும் தானங்களால் எந்த பயனும் இல்லை. அதுபோல எங்கெங்கோ அலைந்து திரிந்து ஆறுகளிலும் குளங்களிலும் மூழ்கித்திரிந்து, புண்ணிய தீர்த்தாடனம் செய்ய வேண்டாம்.

செய்யவேண்டியவை

நீ செய்ய வேண்டிய முக்கியமான ஒன்று ஜெபமாகும். ஜெபத்தை செய்ய வேண்டுமானால் சிவன் வேண்டும். அதாவது ஜெபத்தை யாரிடம் செய்வது என்ற சரியான அறிவு வேண்டும். அது தான் இந்த உலகத்தில் மனிதரின் பாவபரிகாரத்துக்காக வந்து மரித்து உயித்த அன்புக்கடவுளை (சிவன்) விசுவாசத்தால் நம் கண் முன் நிறுத்த

வேண்டும். கல்லோ விக்கிரகமோ இருந்தால் பிரயோஜனம் இல்லை. சிவன் என்பது யார் என்பது சரியாய் இங்கு காட்டி விளக்கப்படுகிறது.

திருச்சித்தம் அறிவது

அடுத்ததாக, ஜெபம் செய்ய திரு சித்தம் எது என்பதையும் தேடி அறிந்து கொள்ளவேண்டும். இது மிக முக்கியமாகும். சிவனின் அதாவது அன்புக் கடவுளின் சித்தத்தை அறிந்து, ஜெபிப்பதே மேலானதாகும். அதுவே இறைவன் காட்டிய மாதிரி.

பரிசுத்தமாவது

அதோடு நாமும் பரிசுத்தமாக வேண்டும். பாவத்தை நம்மைவிட்டு ஒழிப்பதற்கு நாம் செய்ய வேண்டியதும் இங்கு கூறப்படுகிறது. அதாவது நாம் செய்தது பாவம் என்று உணர்த்தப் பட்டால், அதற்காக மனஸ்தாபப்பட்டு கண்ணீர் விட்டழுது இறைவனிடம் மன்னிப்பு பெற்றுக்கொள்ள வேண்டும். இவைகளைச் செய்தவர்கள் இறைவன் பாதத்தை நெருங்கி அவர் பாதம் பற்றிக்கொள்வதற்குத் தவசு அல்லது உபவாச ஜெபமும் செய்ய வேண்டும் என்றும் இங்கு கூறப்படுகிறது.

தீட்சை பெறுவது

இவ்வுலகில் வந்த இறைமகனின் ஆணையும் கடைசியாக இங்கு கூறப்படுகிறது. அதுவே தீட்சை அதாவது திருமுழுக்குப்பெற்று இறைவனோடு ஒப்பந்தம் செய்து சிவ பாதம் பற்றிக்கொள்வதாகும். இங்கு கூறப்படும் சிவன் அன்பே உருவான சுத்த சிவன் என்பது தெளிவாய் விளங்குகிறது.

5. மோட்சம் செல்லும் வழி

அகத்தியர் ஞானம்

கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு
மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகின பின் தேவ பக்தி அதிலே வைத்து
தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய் சகல நன்மை சுரூபிகண்டாய்

முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்திபரன் அருகிருப்பாய் முச்சுடராய்த்தானே

அதாவது,

ஓர் ஆன்மா இம்மை வாழ்வுக்குப் பின் மறுமையில் பேரின்ப வாழ்க்கையில் பிரவேசிக்க என்ன செய்ய வேண்டும் என்பதைச் சித்தரான அகத்தியர் சுருக்கமாக இப்பாடலில் கூறியுள்ளார்.

ஆத்துமாவைப் புடத்தில் போடு

மிகவும் விலை உயர்ந்த ஆத்துமா பாவத்தால் களிம்புற்று விட்டது. எனவே, பரலோக வாழ்வுக்காக முதலில் அந்த ஆன்மாவை நன்றாகக் கழுவ வேண்டுமாம். இரண்டாவதாக, கழுவப்பட்ட ஆன்மாவைப் புடத்தில் போட வேண்டுமாம். புடத்தில் போடப்பட்டால் மட்டுமே கசடுகள் நீங்கி, ஆன்மா, புடமிடப்பட்ட பொன்னைப் போல ஜொலிக்கும். புடமிடப்படுவது லேசான ஒன்று அல்ல. நெருப்புத்தழல் பலவிதத்தில் வருத்தும். ஆனால் இறைவன் கையில் தன்னை முழுமையாய் ஒப்புக்கொடுத்த ஆத்துமா அவை அனைத்தையும் இறை இன்பத்தோடு தாங்கிக்கொள்ளும். இது ஒரு தனி அனுபவமாகும். சோதனை முடியும்போது, பேரானந்தம்! இறைவனுக்கு எல்லையில்லா காணிக்கைகள் செலுத்த ஆசிக்கும். அதுவே கண்ணீர்க் காணிக்கை!.

இருதயத்தை கண்ணீரால் மெழுகு

அதன் பின்னும் இருதயத்தைக் கண்ணீராலே மெழுக வேண்டுமாம். பாவங்கள் மன்னிக்கப்பட்ட ஆன்மாவின் வாழ்க்கையில் கண்ணீர் எவ்வளவு முக்கியம் என்பதை இங்கு பார்க்கிறோம். அப்படிப்பட்ட இருதயத்தில் தேவபக்தி அளவில்லாமல் வந்துவிடுகிறது. அதைத் தொடர்ந்து தொழுகை, தவம் ஆகியவற்றோடு தெய்வீக ஞானம் ஒரு தீபமாய் ஏற்றப்படுகிறது. இந்நிலை எட்டிய ஆன்மாவின் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. எப்பொழுதும் எங்கேயும் தோத்திரப் பாடல்! நடப்பது எல்லாமே நன்மையானவைகளாய்க் கண்டு, ஓயாமல் இறைவனையே புகழும்.

சிறு பொய்கைக்குள் முழுகு

நீயும் சிறுபொய்கைக்குள்ளே முழுகுவாய் என்ற வரி சிந்திக்க வைக்கிறது. பலபேர் ஆறுகள், குளங்கள், கடல் ஆகியவற்றில் மூழ்குவதற்கு அலைவதைக் கண்டித்த அகத்தியர் இங்கு கூறப் பட்டபடியெல்லாம் செய்தபின் கூறுகிறார், ஆத்துமாவே, நீ இனி செய்ய வேண்டியது, ஒரு சிறு பொய்கைக்குள் மூழ்கி திருமுழுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதாகும். இவைகளைச் செய்தால், மோட்ச லோகத்தில் சுடராய்ப் பிரகாசிக்கலாமென்று கூறுகிறது இப்பாடல்.

6. மோட்சத்துக்குப் பதிலாகத் தீநரகைத் தேடாதே

அகத்தியர் ஞானம்

"தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு, தீக்கிடங்கைத்
தேடாதே தெளியச்சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும்
பாரதமும் கட்டப்பா; பரிகாசங்கள்
நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா; நம்பவேண்டாம்
ஓடுவார் அருள் பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே"

அதாவது,

சிந்திக்க, ஞானமுள்ள மக்களுக்கு ஓர் எச்சரிப்பாக இப்பாடல் அமைந்திருக்கிறது. சொன்ன எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்த்துத் தேடவேண்டிய பரலோக வாழ்வைத் தேடிப்பெற்றுக்கொள். அதற்கு மாறாக தீக்கிடங்கான எரிநரகத்தைத் தேடிச் சென்று விடாதே என்று எச்சரிக்கிறது.

பதினெட்டுப் புராணங்கள் என்றும், மகாபாரதம் என்றும் சொல்லப்படுபவை எல்லாம் வெறும் கட்டுக்கதைகளும் நிந்தைக் குரியவைகளுமாகும். அவைகளெல்லாம் நம் நாட்டில் வந்த அன்னியர்கள் தங்களைப் பிராமணர்கள் என்று கூறிக்கொண்டு, அவர்களது பிழைப்புக்காகக் கட்டி எழுப்பிய கதைகளே தவிர வேறல்ல. எனவே, அவைகளை நம்பிக் கெட்டுப்போய் நரகத்தில் சென்று விடாதீர்கள். இவைகளை அறிந்த உத்தம மகனே, நீ பேரன்பு பெருக்கினால் உலகுக்கு வந்து அருள்பொழிந்த இறைவனின்

பாதங்களைப் பூசை செய்து உன் கண்ணீரினால் கழுவுவாயாக என்று புத்தி கூறுகிறார்.

7. யாரை வணங்க வேண்டும்?

அகத்தியர் ஞானம்

வணங்குவாய் செக சோதி ஒருவனாகி
மானிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்தில் தானுதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சன்னியாசி போலிருந்து தவற்றைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்டதலம் சென்றவரை அண்டுவாயே

அதாவது,

பெயர் எதையும் கூறாமலேயே இப்பாடலில் குறிப்பிடும் கடவுள் அந்த ஒரே கடவுள் என்பதும் அவர் யார் என்பதும், எந்த சந்தேகத்துக்கும் இடமில்லாமல் புரிந்துகொள்ளும் விதத்தில் அவரைக் குறித்தும் அவர் செய்து நிறைவேற்றிய செயல்பாடுகள் குறித்தும் தெளிவாய் விளக்கிக் கூறப்படுகிறது.

அவர் யாரென்றால்: இந்த செகத்துக்கெல்லாம் சோதியாய் விளங்கும் ஒரே கடவுள் அவரே. அவர் இவ்வுலகத்தை ஒரு நொடியில் படைத்தவர். அது மட்டுமல்ல, இந்த மண்ணுலகத்தில் மனிதரைத் தூய்மையான நிலையில் படைத்தவர். பின்பு, அதாவது தூய்மையாய்ப் படைக்கப்பட்ட மனிதன் பாவத்தில் விழுந்து, கெட்டுப்போன பின்பு, இந்த உலகத்தில், தாமே ஒரு மனிதனாய் அதாவது குருவாய் வந்தவர். திருமணம் செய்யாமல் சன்னியாச வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர். அது மட்டுமல்ல, அவர் தவத்தை, அதாவது சிலுவைப்பலியாகிய தவத்தை நிறைவேற்றி உலகத்துக்குத் தம்மைக் காட்டியவர். அதன் பின் அன்பான சித்தர்களை, அதாவது அடியவர்களைச் சாட்சிகளாக ஏற்படுத்திவிட்டு, அகண்ட தலம் அல்லது பரலோகத்துக்கு ஏறிச் சென்றவர்.

இவை அனைத்தும் ஒரே ஒருவர் மட்டுமே செய்திருக்கிறார். அவரையே வணங்குவாயாக என்று இப்பாடல் வழிகாட்டுகிறது. அவருடைய காரணப்பெயர்களில் சிலவற்றை முன் 9-ஆம் அதிகாரத்தில்

பார்த்தோம். அந்தக் காரணப்பெயர்களில் அவர் குறிப்பாக மேற்கே இயேசு என்றும், கிழக்கே சிவம் என்றும் மக்களால் அன்பாய் அழைக்கப்படுகிறார்.

சித்தர்களின் ஆய்வு

அகத்தியர் போன்ற சித்தர்களின் பாடல்களைப் படிக்கும்போது, அவர் பின்னால் புகுத்தப்பட்ட போலி இந்து மார்க்கத்தின் சடங்காசாரங்களோடு சொல்லொண்ணாக் கசப்புற்றிருந்தாரென்பதை அறிய முடிகிறது. அவர் உண்மைகளைத் துருவித் துருவி படித்து ஆராய்ச்சிகளில் ஏற்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. அவர் சத்திய வேதத்தையும் பெற்றிருக்க வாய்ப்புண்டோ எனவும் சிந்திக்க இடமுண்டு.

[இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருக்கும் காலங்களில், முதன்முதலாய் இந்து தேசத்தில், பெர்சியர்களும், கிரேக்கர்களும் குடியேறினார்கள். அவர்களில் யாரிடமாகிலும் பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் இருந்திருக்கக் கூடுமோ...? அதுபோல, மேற்கில் ரோம சாம்ராஜ்யத்தில், கடும் போராட்டங்களும் எதிர்ப்புகளும் எழுந்தபோது, A.D. 4-ஆம் நூற்றாண்டில் சீரியாவிலிருந்து ஒரு கூட்டம் கிறிஸ்தவர்கள் தங்கள் நாட்டைவிட்டு கேரள தேசத்தில் வந்து தங்கினார்கள் என்பது வரலாறு. அந்நாட்களில் இஸ்ரவேலரை ஆண்ட ரோமர்களும் வணிகத்திற்காக நம் தேசத்தில் வந்தார்கள். யாரிடத்திலிருந்தாகிலும் எப்படியாகிலும் வேதத்தின் பாகங்கள் கிடைத்திருக்க வாய்ப்புண்டோ...?]

அதி : 22

சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகளை நீக்கிவிட்டால்?

கடவுள் கொள்கைக்கு மாறாக, சாத்தானின் சூட்சியால் ஏவப்பட்ட அன்னியரான ஆரியர்களும், அவர்களோடு சேர்ந்தவர்களும் தங்கள் சுயநலத்துக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணத்தால், சைவ சமயத்தில் அனேக சீர்கேடுகள் புகுத்தப்பட்டன. அந்தச்

சீர்கேடுகளை மாற்றிவிட்டால், ஆதி நூற்றாண்டுகளின் தூய நிலைக்குச் சென்றுவிடும்.

1. கடவுள் கொள்கையில் ஒற்றுமை

சித்தர்கள் கடிந்துகொண்ட சீர்கேடுகளை நீக்கிவிட்டால் மக்கள் கல்லாலும், கட்டையாலும், மரத்தாலும், மண்ணாலும், மட்டையாலும், மஞ்சளாலும், சாணியாலும், உலோகங்களாலும் உண்டாக்கப்பட்ட ஜீவனற்றவைகளைத் தெய்வமாக ஆராதிக்க மாட்டார்கள். அதுபோல, மனிதர்களையோ பாம்பு, எலி, யானை, குரங்கு போன்ற ஆயிரக்கணக்கான உயிரினங்களையோ தெய்வங்களாக ஆராதிக்கமாட்டார்கள். மேலும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, நதி, கடல் போன்ற படைப்புகளையோ, அரச மரம், ஆலமரம், புன்னைமரம் போன்ற மரங்களையோ செடிகொடிகளையோ, காற்று, புயல், மழை, பனி, எரிமலை, அக்கினி போன்ற இயற்கை நிலைகளையோ, புராணக் கதைகள், இதிகாசங்கள் போன்றவற்றில் கூறப்படும் கணக்கற்ற கதாபாத்திரங்களின் பெயர்களையோ தெய்வங்களாக ஆராதனை செய்யமாட்டார்கள். மாறாக, பாவிகளை உய்விக்க அல்லது மீட்க இந்த உலகத்தில் மனிதனாய் வந்த கடவுளையே கடவுளாக வணங்குவார்கள். எனவே இன்றைய கிறிஸ்தவர்களுக்கும், சைவர்களுக்கும் கடவுள் கொள்கையில் ஒற்றுமை ஏற்படும்.

2. ஆராதனையில் ஒற்றுமை

அதோடு விக்கிரகங்களும், விக்கிரக ஆராதனைகளும் விக்கிரகப் பூசைகளும், சடங்காசாரங்களும் இல்லாமல் ஜெப வேண்டுதல்களிலும், ஆராதனைகளிலும் பரிசுத்தமும் தேவ மகிமையும் பிரசன்னமாகும். இந்நிலை, ஆதி நூற்றாண்டுகளில் மேற்கில் உருவான கிறிஸ்தவத்துக்கும், இந்து தேசத்தில் உருவான சைவத்துக்கும் மறுபடியும் கடவுள் கொள்கையில் ஏற்படுவதுபோல, ஆராதனைகளிலும் ஒற்றுமை ஏற்பட்டுவிடும்.

3. கடவுளின் மீட்பை அடைவதில் ஒற்றுமை

கிறிஸ்துவின் சாட்சிகள் என்று கிறிஸ்தவமும், அன்புக் கடவுளின் (சிவனின்) சாட்சிகள் என்று சைவமும், உருவாகக் காரணமே, கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்க (உய்விக்க) கடவுள் மனிதனாக

உலகுக்கு வந்ததாகும். உலகுக்கு வந்த குமாரக் கடவுள் சிலுவையில் பலியாக்கப்பட்டு, மனுக்குலத்துக்கு மீட்பாகிய உய்வைச் சம்பாதித்தார். அவர் சம்பாதித்துத் தந்த மீட்பை ஏற்றுக்கொண்ட சாட்சிகளே அவருக்குச் சான்றுபகரும் கிறிஸ்தவர்களும் சைவர்களும் ஆவர். எனவே, மக்கள் கடவுளின் உய்வாகிய மீட்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில், சைவத்திலும் கிறிஸ்தவத்திலும் ஒற்றுமை உருவாகிவிடுகிறது.

சத்தியங்களைக் கொண்ட நூல் திருமறை

ஆதியில், கிழக்கே படைக்கப்பட்ட ஜனம் மேற்காசியாவில் சென்றபின், நானாபாகங்களில் சிதறடிக்கப்பட்டபோது, தேவன் உலக மக்கள் அனைவருக்கும் தம்மை வெளிப்படுத்தி, தம்மைத் தொழுதுகொள்ளும்படி, ஒரு மனிதனிலிருந்து (ஆபிரகாம்) ஒரு கூட்டம் ஜனங்களை எழுப்பி (இஸ்ரவேலர்), மோசே போன்ற அனேக தீர்க்கத் தரிசிகளால், அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுத்து, அனேக வருடங்களாய் எழுதப்பட்டதே திருமறையின் பழைய ஏற்பாட்டுப் பகுதி (பழைய ஏற்பாட்டின் முதல் பகுதியான பஞ்சாகமங்கள் மோசேயால் கி.மு. 1423-க்கு முன்னும், கடைசிப் புத்தகமான மல்கியா கி.மு. 331-க்கு முன்னும் எழுதப்பட்டது). அதைப் பூரணப்படுத்தி, நிறைவுப்படுத்தி மனுக்குலத்தை மீட்டுக் கொள்வதற்காகவே இறைவன் முதலாம் நூற்றாண்டில் உலகுக்கு மனிதனாக வந்தார். இறைமகன் தேவத்திட்டங்களை நிறைவேற்றினார். அது புதிய ஏற்பாடாக கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. மனுமக்கள் செய்யவேண்டிய இறைவாழ்க்கைக்குத் தேவையான அனைத்து முறைகளும் அதில் போதிக்கப்பட்டுள்ளன (1 தெசலோனிக்கேயர் அதி. 4 வாசிக்கவும்). இதுவே பரிசுத்த வேதாகமத்தின் நிறைவு.

குழுப் பரிசீலனை

புதிய ஏற்பாடு கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதி முடிக்கப்பட்டபோதிலும், 4-ம் நூற்றாண்டில் உலக தேசங்களின் பக்தர்கள் (அன்று கூட்டப்பட்ட நிசியன் கவுண்சிலில் ஒருவர் ஜாண் த இன்டியன் (John the Indian) என்பது குறிப்பிடத்தக்கது) குழுவாய்க் கூடி, பரிசீலித்து, விடவேண்டியதை விட்டு, எடுக்க வேண்டியவற்றை எடுத்து உலகுக்குக் கிடைக்கப்பெற்றதே பரிசுத்த வேதாகமம் (திருமறை). இதுவே உலகனைத்திற்காகவும் ஆசியா கண்டத்தில் பரிசுத்த ஆவியானவர்

40 பேரைக் கொண்டு, 1,600 வருஷங்களில் இயற்றப்பட்ட (பரிசுத்த வேதாகமம்) திருமறை. திருக்குறளும், சைவசித்தாந்த நூல்களும் திருமறைச் சத்தியங்களையே சுட்டிக்காட்டுவதைப் பார்த்தோம். திருமறைச் சத்தியங்கள் தோமாவின் கூற்றின் அடிப்படையில், திருக்குறளிலும் பின்பு சைவசித்தாந்த நூல்களிலும் எழுதப்பட்டன.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14

டாக்டர் மு. தெய்வநாயகம், M.A., Ph.D அவர்கள் வெளியிட்டுள்ள 'விவிலியம், திருக்குறள் சைவசித்தாந்தம் ஒப்பாய்வு' என்ற நூலில் சைவசித்தாந்த சாத்திரங்கள் எழுதப்பட்ட காலமும், ஆசிரியர்கள் பெயரும் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது.

எண்	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்
1	திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்த தேவர்	1148
2	திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவர்	1178
3	சிவஞானபோதம்	மெய்கண்ட தேவர்	1221
4	சிவஞான சித்தியார்	அருள் நந்தி	1253
5	இருபா இருப..து	அருள் நந்தி	1254
6	உண்மை விளக்கம்	மனவாசகம் கடந்த தேவர் (மெய்கண்டாரின் மாணவர்)	1255
7	சிவப்பிரகாசம்	உமாபதி	1306
8	திருவருள் பயன்	உமாபதி	1307
9	வினா வெண்பா	உமாபதி	1308
10	போற்றிப்ப..றொடை	உமாபதி	1309
11	கொடிக்கவி	உமாபதி	1310
12	நெஞ்சு விடுதூது	உமாபதி	1311
13	உண்மை நெறி விளக்கம்	உமாபதி	1312
14	சங்கற்ப நிராகரணம்	உமாபதி	1313

உச்சக்கட்டப் போராட்டத்தில்

சைவசித்தாந்த சாத்திரங்கள் எல்லாமே 12-ம், 14-ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் எழுதப்பட்டவையாகக் காணப்படுகிறது. முதல் நூற்றாண்டில் தோமாவின் வருகை முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை ஆயிரக்கணக்கான நூல்களில் இறைச் செய்திகள் வாரிவாரி விதைக்கப்பட்டன. ஆனால் அவை அனைத்தும் ஆரியரின் போராட்டங்களால், அழிக்கப்பட்டன. திருக்குறள், அதன் நடையின் ஆழத்தின் காரணத்தால் அழிக்கப்படவில்லை. ஆனால் ஆதி நூற்றாண்டுகளில் எழுந்த இறைவாழ்க்கைக்குரிய சத்தியங்கள் அழிக்கப்பட்டன.

சமயநூல்

அந்நிலையில், அழிந்துபோகும் சத்தியங்களில், தங்களுக்குக் கிடைத்தவற்றைப் பிடித்துக்கொண்டு, இயன்றவரை அழிவிலிருந்து தப்ப, தங்கள் தங்கள் இறை அனுபவங்களோடு பயத்தின் மத்தியிலும், எதிர்ப்பின் மத்தியிலும் எழுதப்பட்டவைகளே இந்த சைவசித்தாந்த நூல்கள் என்று சிந்திப்பதற்குப் போதியவகையில் மாறுபட்ட பல கருத்துகள் பல இடங்களில் கலந்திருப்பதைக் காண முடிகிறது. ஆங்காங்கு காணப்படும் கடவுள் கொள்கைகளை ஒன்று சேர்ப்பதற்கு இது ஏற்ற காலமாய்க் காணப்படுகிறது. இந்நிலையில் பக்தர்கள் குழுவாய்க் கூடி, சைவ சமய இறைக்கொள்கைகளை ஒன்று திரட்டி, விடவேண்டியவற்றை விட்டு, சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்து சமய நூலாக ஒன்றிணைப்பது விரும்பத்தக்க ஒன்றாகும்.

அழித்துவிட்ட கொடுமை, பாடலில்

"ஆட்டையும் மாட்டையும் ஓட்டி, வந்தானென
ஏட்டினிலே நீ படித்தது இல்லையா
உன்னிடமிருந்த உயர்ந்த நூற்களை
தன்னுடையதாக்கி மூலத்தை எரித்தான்
ஆறுகள் தோறும் அள்ளிப்போட்ட
ஏடுகள் கொஞ்சமா எத்தனை ஆயிரம்
தீக்கிரையாக்கிய தீந்தமிழ் ஏடுகள்

ஆயிரமாயிரம் அழிந்து போயின
மிச்சமிருந்த முது தமிழ்ச் சுவடிகள்
முற்றும் அழிக்க எத்தனை சூழ்ச்சிகள்
அப்பன் கையிருந்த அத்தனை ஏட்டையும்
சுப்பனைக்கொண்டே சூழ்ச்சியால் எரித்தான்
அப்பனை புதைத்த ஆழக்குழியில்
மகனைக் கொண்டே புதைத்திடச் செய்தான்
ஆவணிதந்த அவிட்ட நாளினில்
பூவணி ஏடுகள் போயின ஆயிரம்"

என்று ஏங்குகின்றார் தமது "சித்த விளையாட்டு நூலில்" மரு. சிறீ. திருப்பதி ஆசான் (மரு. கொ.பா. புட்பராசு ESMP அவர்கள் வெளியிட்டுள்ள 'தமிழ் மருத்துவ தொக்கண முறைகள்" பக்கம் 26).

கடவுள் கொள்கை வெளிப்படும்

சித்தர்கள் கண்டித்த சீர்கேடுகளை நீக்கிவிட்டால், சைவ சமயம் உண்மையான கடவுள் கொள்கையுடையதாய் விளங்கும் என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை.

அதி : 23

இந்துக்களாகிய நாம் செய்ய வேண்டியவை

நம் தேசத்தில் இரு கூட்டம் மக்கள்

இந்நாட்களில் நம் இந்து தேசத்தில் கிறிஸ்தவர்களும், சைவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரே அடிப்படையில் ஆரம்பமாகி, இப்போது இருநிலைகளில் காணப்படுகிறார்கள்

என்பதைப் பார்த்தோம். அதாவது, கெட்டுப்போன மனிதரை உய்யவந்த அல்லது மீட்க வந்த கடவுளைப் பற்றிக்கொண்ட சாட்சிகள் (சான்றோர்) என்பது தான் ஆரம்பம். தேசங்களின் தூரத்தாலும், வேறுபட்ட மொழிகளாலும் அந்தக் கடவுளுக்கு அன்று கூறப்பட்ட காரணப் பெயர்கள் தான் வித்தியாசம். மேற்கில் அவரை உலக இரட்சகர் (யெஷுவா) என்றார்கள் கிழக்கில் ஆரம்பத்தில் சிவன் என்றும், பின்னால் இயேசு என்றும் சொன்னார்கள்.

சாத்தானின் சூழ்ச்சி

ஆனால் சத்துருவான சாத்தான் தனது கூட்டத்தாரைக் கொண்டு (மேற்கிலும், கிழக்கிலும்) கிறிஸ்தவத்திலும், சைவத்திலும் சீர்கேடுகளை உண்டாக்கினான். கிறிஸ்தவம் 16-ம் நூற்றாண்டில் சீர்கேடுகளிலிருந்து எழுந்துவிட்டது. சைவமோ சீர்கேடுகளிலிருந்து இதுவரையிலும் எழும்பவில்லை (இன்று நம் தேசத்தில் காணப்படும் கிறிஸ்தவம், மேற்கில் ஏற்பட்ட சீர்கேடுகளிலிருந்து விடுபட்டு, அதன்பின் நம் தேசத்துக்கு வந்ததாய் காணப்படுகிறது). எனவே, நாம் இரு கூட்டத்தாராய், அதாவது (i) கிறிஸ்தவ இந்துக்கள் என்றும் (ii) சைவ இந்துக்கள் என்றும் இரு கூட்டத்தாராய்க் காணப்படுகிறோம்.

(i) கிறிஸ்தவ இந்துக்கள் செய்ய வேண்டியவை

நாங்கள் இந்துக்கள் அல்ல என்று கிறிஸ்தவர்கள் அடம்பிடி பிடித்து சாத்தானுக்கு இடம் கொடுத்து நம் உரிமைகளைப் பறிகொடுக்காதிருப்போமாக. இந்து என்பது மதத்தைக் குறிப்பதல்ல. நம் தேசத்தின் பெயர் இந்து தேசம் என்பதாகும். அதுதான் இந்தியா. வேதாகமத்தைத் தவிர வேறொன்றையும் பார்க்கமாட்டோம் என்று இராமல், நம் தேவன் இரட்சிப்பை நிறைவேற்றிய உடன் தமது சீஷனாகிய தோமாவை நம் இந்து தேசத்துக்கு அனுப்பினாரே! என்ன ஆயிற்றென்று பார்க்க வேண்டாமா... ? எத்தனைபேர் மீட்கப்பட்டார்கள் என்று அறிய ஆசைப்பட வேண்டாமா...? ஏராளம்! ஏராளம்!

அப்போஸ்தலர் தோமாவின் ஊழியத்தால், அந்நாட்களிலேயே 30 லட்சம் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்தார்கள் என்று சுவாமி விவேகானந்தர் அவருடைய "**ஞானதீபம்**" என்ற நூலில் எழுதியிருக்கிறார். இரட்சிப்பின் நற்செய்தியைத் திருவள்ளுவர் திருக்குறளில் எழுதியிருக்கிறார். மற்றும் அநேகர் எத்தனையோ நூல்கள் எழுதி

சாட்சியாய் (சான்றோராய்) வாழ்ந்து சித்தர்களும், பக்தர்களும் முனிவர்களும் ஆனார்களே! அறியவேண்டாமா? எல்லாவற்றையும் கற்று அறிந்து பயன்பெறுவோம். ஆத்தும ஆதாயம் செய்வோம்.

விழித்தெழுவோம்

விழித்தெழுவோம்! நம் தேசத்தில் நம்அருகாமையில், சைவ வைணவர் என்ற நிலையில் இருக்கும் இந்துக்களை (இந்து தேசமக்களை) அன்புடன் நோக்குவோம். புராணக் கதைகள், வேதங்கள், சாஸ்திரங்கள் சடங்காசாரங்கள் ஆகியவற்றால் சாத்தான் சீர்கெடுத்துவிட்டான். அவர்கள் முன்னோர் எழுதி வைத்திருக்கும் சித்தர் பாடல்கள், திருக்குறள், சைவ சித்தாந்தம் ஆகியவற்றைத் திருமறை வரலாற்றோடு அவர்களுக்கு விளக்குவோம். படிப்படியாய் அறிந்துகொள்வார்கள். பொறுமையோடு அவர்களுக்காக எல்லாக் கூடுகைகளிலும், குடும்பங்களிலும் கரிசனையோடு ஜெபிப்போம். கர்த்தர் எழுப்புவார்.

கிறிஸ்தவ அமைப்புகள்

இந்தக் கடைசிக் காலத்தில், இந்தக் காரியத்தில் கிறிஸ்தவ அமைப்புகளுக்கு மிகப்பெரிய பொறுப்புண்டு. உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளை அறிந்துகொண்டு, நம் சகோதரருக்காகப் பாரத்தோடு எல்லாக் கூடுகைகளிலும் ஜெபித்தால், கர்த்தர் பெரும் காரியங்களைச் செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

தனி மிஷனெறிகள்

நம் சபைகளிலிருந்து பிற தேசங்களுக்கும் பிற மாநிலங்களுக்கும் மிஷனறிகளைத் தியாகத்தோடு அனுப்புகிறோம். அதுபோல, தற்கால சைவர்கள் மத்தியிலும் மிஷனெறிகளை அனுப்பலாம். ஏனென்றால் மேற்சொன்ன சத்தியங்கள் அவர்களை விட்டும் மறைக்கப்பட்டுத்தான் கிடக்கின்றன. நம் மிஷனெறிகள் அவைகளைக் கற்றுக்கொண்டு சைவர்களான சகோதரர்களுக்கு உணர்த்துவார்கள். அதற்காக மிஷனெறிகள் சைவ சித்தாந்த நூல்களையும், திருக்குறளையும், திருமறையையும் பயன்படுத்துவார்கள்.

தனிப்பயிற்சிகள்

இப்பணிக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் மிஷனறிகளுக்குத் தனிப்பயிற்சிகள் தனியாய்க்கொடுக்க வேண்டும். ஊழியத்திட்டங்களைத் தனியாய் உருவாக்க வேண்டும். அந்தத் தனி ஊழியங்களுக்காகச் சபைகளில் குழுக்களாயும் தனித்தனியாகவும், சபையாயும் பாரத்தோடு ஜெபிக்க வேண்டும். அதைத் தனி ஊழியமாய்க் கர்த்தர் வளர்ப்பார். பல நூற்றாண்டுகளாக அவர்கள் பல வேறுபட்ட சூழலில் இருப்பதால், அவர்களை உடன்தானே தற்கால கிறிஸ்தவ சபைகளோடு சேர்த்து இணைப்பதற்கு முற்படாமல், அவர்கள் (இயேசு என்பதும், சிவம் என்பதும் ஒருவர்தான் என்று) அறியாமல் ஆராதித்துவரும் அன்புக்கடவுளாகிய சிவனே உலக இரட்சகரான இயேசு என்பதை வரலாற்றோடு விளக்குவதே மேல். சிவன் என்ற தூயநாமத்துக்குச் சாத்தானால் புகுத்தப்பட்ட அசுத்தங்களை அகற்றித் தெளிவுப்படுத்த வேண்டியது தேவை. சைவர்கள் இறைவனிடம் வேண்டிக்கொண்டு, அவர் காட்டும் விதம் தெளிவுபெற்ற ஆராதனை முறைகளைத் தங்களுக்கு ஒழுங்கு படுத்துவதே மேலானது. அப்பொழுது அவர்கள் தங்களை உய்ய (இரட்சிக்க) வந்த இறைவனை ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று வருகைக்கு ஆயத்தமாவது உறுதியாகிவிடும்.

(ii) சைவ இந்துக்கள் (இந்து தேச மக்கள்) செய்வது

கெட்டுப்போன மனுமக்களுக்கு இம்மை வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் இறை இன்பமும் மறுமையில் இறைவனோடு நித்திய பேரின்பமும் அடைய, ஒரு வாழ்க்கைப் பாதையைக் காட்டி அதைப் பெற்றுத்தரவே கடவுள் உலகத்தில் மனிதனாய் வந்தார். அவர் பெற்றுத் தந்த மீட்பை அடைந்துகொண்டு, அந்த உய்யவந்தான் காட்டிய பாதையில் செல்பவர்களே சைவ சான்றோரான இந்துக்கள் (இந்தியர்கள்).

சைவ சித்தாந்தத்தின் பெருமை அறிவோம்

கடவுளின் அன்பை நம் இந்து தேசத்தில் முதன்முதலாக அறிந்து ஏற்றுக்கொண்டவர்கள் நம் மூதாதையரான சைவர்கள் என்பதை நாமெல்லாரும் அவர்கள் இயற்றிய நூல்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டும். அன்பே உருவான இறைவன் உலகில் மனிதனாக வந்து நமக்கு உய்வாகிய இரட்சிப்பை எதற்காகப் பெற்றுத் தந்தார்...?

இம்மையில் நாம் சமாதானத்தோடு இறைவனால் வழிநடத்தப்பட்டு, மறுமையில் நித்திய, நித்திய காலமாய் இறைவனோடு நித்தியப் பேரின்ப வீட்டில் (மோட்சத்தில்) வாழ்ந்து சுகித்திருப்பதற்காகவே ஆகும். இதைக் குறித்து,

"இறவா இன்பத்தில் எமை இருத்த வேண்டி
பிறவா முதல்வன் பிறந்தார்..."

என்று சைவ சித்தாந்தப் பாடலில் பக்தராகிய சான்றோர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

உய்வடைதல் என்றால் என்ன?

ஒரு வீடு தீப்பிடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு சிறுமி அந்த அழிவில் சிக்கிக்கொண்டாள். சிறுமியின் தகப்பன் துணிந்து போய், சிறுமியைத் தன் ஜீவனையும் கொடுத்து அவளைக் காப்பாற்றுகிறான். இங்கே சிறுமி தகப்பனால் உய்வடைந்தாள் அல்லது மீட்கப்பட்டாள் அல்லது இரட்சிக்கப்பட்டாள் என்று கூறலாம். ஆதி மனிதன் பாவம் செய்தான். மனுமக்கள் எல்லாரும் பாவத்துக்குள் ஆகிவிட்டோம். பாவத்தின் சம்பளம் மரணம். நாமெல்லாம் நித்திய மரணத்துக்குள்ளானோம். சைவசித்தாந்தப் பாடலில், இதைத்தான் 'மலக்கயம்', (ஆழமான பாவக்கடல்) என்று கூறுகிறோம். இந்த மரணத்திலிருந்து நம்மை விடுவித்து நித்திய பேரின்பத்தில் இறைவனோடு சேர்க்கவே, எல்லாம் வல்ல இறைவன் உலகில் உய்யவந்தானாக, வந்து நம் பாவத்துக்காக மரித்து நமக்கு இரட்சிப்பாகிய உய்வை உண்டாக்கினார். நம்மை பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும் ஈடுசெய்து நித்திய இன்பத்தில் சேர்ப்பவர் அவர் மட்டுமே.

தீயவனான சாத்தான் மறைத்துவிடுகிறான்

சாத்தான் இந்த எளிதும், இன்பமுமான காரியத்தை மக்களிட மிருந்து மறைத்து விடுகிறான். ஏனென்றால், மீட்பைப் பெற்றுக் கொள்ளாதவர்கள், அதாவது உய்வடையாதவர்கள் மறுமையில் அவனோடு நரகத்தில் இருப்பார்கள். சாத்தான் அனேகரை அவனோடு நரகத்தில் சேர்க்கப் பார்க்கிறான்.

உய்வடைவதெப்படி?

சைவசித்தாந்தம் கூறும் உய்யவந்தானாகிய இறைவனால், பாவிகளாகிய நாம் உய்வடைகிறோம் அல்லது இரட்சிக்கப்படுகிறோம். இறைவனால் உய்வடைகிறவர்கள் அதாவது, இரட்சிக்கப்படுகிறவர்கள் இம்மையில் அமைதி வாழ்வுக்குப் பின் மறுமையில் இறைவனோடு நித்தியப் பேரின்ப வாழ்வு பெறுவார்கள். இந்தப் பெரிதான உய்வடைவது எப்படி? ஓ! அது இலவசம்!! உய்ய வந்தான் (இறைவன்), இந்த உலகில் வந்து, நம் பாவங்களுக்காக ஈடுசெய்து மரித்து, நம்மை உய்வித்ததை (இரட்சித்ததை) மனதார விசுவாசித்து அவரை நம் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு, அவர் காட்டிய பாதையில் செல்வேன் என்ற உறுதியோடு அவரைப் பின்சென்றால் போதும், அவர் நடத்துவார். இதுவே உய்வடைதல், இரட்சிக்கப்படுதல், மனம்திரும்புதல், மறு பிறப்படைதல்.

விடவேண்டியவற்றை விட்டுவிடுவோம்

நமக்கு இவ்வுலகில் அமைதியும், சமாதானமும், மறுமையில் நித்திய பேரின்பமும் இலட்சியமாய் இருக்கட்டும். கடவுள் தாமே, தம்மைத் தெளிவாய் உலகில் வெளிப்படுத்தியிருக்க, சைவ சித்தர்கள் கூறியபடி கடவுளல்லாதவற்றை நாம் கடவுளாக்கும் முயற்சிகளை விட்டுவிடுவோம். வீண் சடங்காசாரங்களையும், மூடநம்பிக்கை களையும் களைவோம். காலாகாலங்களாய்ச் செய்து வந்தவற்றை உடன்தானே விட்டுவிடுவதில் பல சிக்கல்கள் எழலாம். பொறுமையோடு சிந்தித்து வழிகளைத் தேடுவோம். இறைவனே வழிகாட்டுவார்.

சிந்திப்போம்

இந்நாட்களில் கிறிஸ்தவர்களானாலும், சைவர்களானாலும் பெரும்பாலானோர் உலகில் ஐசுவரிய சம்பன்னராய் வாழத் துடிக்கிறார்கள். மிக முக்கியமான மறுமை வாழ்க்கையைக் குறித்து அவர்கள் வாஞ்சிப்பதோ, சிந்திப்பதோ இல்லை. அவர்கள் கடவுளைக் குறித்தோ கடவுளோடுள்ள உறவு குறித்தோ சிந்திப்பதற்கு நேரம் எடுப்பதில்லை. பிரச்சினைகளின் தீர்வுக்காகவும், ஐசுவரிய ஆசீர்வாதத் திற்காகவும் ஊழியர்களை அல்லது பூசாரிகளைச் சந்திக்கிறார்கள். அவர்கள் கூற்றுப்படி, எதெதையோ செய்கிறார்கள். இந்நிலையில் இயேசுவையோ, சிவனையோ, முருகனையோ, பிள்ளையாரையோ

விடாமல் தொழுகிறார்கள், பூஜிக்கிறார்கள், காணிக்கைகளையும் வேறு பல பொருட்களையும் படைக்கிறார்கள். கிடைக்கும் ஆசீர்வாதங் களை அனுபவிக்கிறார்கள், அவ்வளவுதான். இதுதான் கடவுளோடுள்ள உறவா...? இது சிந்திக்க வேண்டிய விஷயமாகும்!!

மறுமை வாழ்வும், அதற்கான மார்க்கமும்

மேலே கூறப்பட்ட யாவும் இம்மைக்குரிய வாழ்க்கை மட்டுமே. அது சொற்பக்கால வாழ்க்கை ஆகும். நாமோ நித்தியகாலம் வாழ வேண்டியவர்கள். மறுமையின் நித்திய ராஜ்யத்தில் செல்வதற்குக் கூறப்படும் வழிதான், மார்க்கம் அல்லது சமயம் (மதம்) என்பது. அந்த மறுமையின் நித்திய ராஜ்யத்தில் (மோட்சத்தில்) மனிதரைக் கொண்டு சேர்க்கவே, இறைவன் மனிதனாக வந்தாரென்று கிறிஸ்தவமும், சைவமும் ஒரே குரலில் கூறுவதைப் பார்த்தோம். அந்த இறைவன் நம்மை இரட்சிக்க வந்த காரணத்தால் இயேசு என்றும், உய்ய வந்தான் என்றும், சிவன் என்றும், அவர் அன்பே உருவானவர் என்றும், அவர் அழகுடையவர் என்ற காரணத்தால் அழகர் என்றும், முருகன் என்றும், பிதாவாகிய கடவுளின் குமாரனாகப் பிறந்த காரணத்தால் குமரக் கடவுள் என்றும், பிள்ளையார் என்றும் பல காரணப் பெயர்களில் அழைக்கப் பட்டார் என்றும் பார்த்தோம்.

சாத்தானின் சூழ்ச்சி

சாத்தான் தந்திரமாக ஒவ்வொரு காரணப் பெயரையும் தனிப்படுத்தி, வேறு வேறு கடவுளாகக் காட்டி, குழப்பங்களை உருவாக்கிவிட்டான். எனவே, மக்கள் குழப்பமடைந்து, மறுமையின் நித்திய வீட்டிற்குச் செல்ல வழி தெரியாமல் தவிக்கிறார்கள்.

உலகுக்கு வந்த இறைவன் காட்டிய வழி

உலகுக்கு வந்த இறைவன் சரியான வழியைக் காட்டி, தம்மையே பலியாகச் செலுத்தி, மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்கு ஏறிச்சென்றார். அவர் சொல்லியதும் செய்து காட்டியதுமான வழிமுறைகளை, அவர் சீஷர்கள் எழுதிவைத்தார்கள். அது திருமறை யாகவும் அதன் சாரம் திருக்குறளாகவும் எழுதப்பட்டுள்ளன. நம் தேசத்தில் நம் இந்துக்கள் அந்த வழிமுறைகளை விளக்கமாக எழுத

ஆரம்பித்த நாட்களிலேயே, அன்னியக் கூட்டத்தாருடைய போராட்டங்களும், அழிமதிகளும் ஏற்படவே ஆதி நாட்களில் திருக்குறளை ஒட்டி எழுதப்பட்ட ஆதி நூல்கள் அனைத்தும் அவர்களால் அழிக்கப்பட்டன. உச்சக்கட்டப் போராட்டங்களின் மத்தியில் பின் நாட்களில் எழுதப்பட்ட நூல்கள் மட்டுமே இப்போது சைவசித்தாந்த நூல்களாகக் காணப் படுகின்றன.

எனவே, சைவசித்தாந்த நூல்களில் கண்டெடுக்கும் சத்தியங்களை, திருக்குறள் காட்டும் அறவழியோடும், உலகில் வந்த அன்புக்கடவுள் (சிவன்) தாமே நேரில் கூறிய வழிமுறைகளைக் கொண்ட வரலாற்று நூலாகிய திருமறையோடும் தொகுத்துப் பார்க்கும்போது, மறுமையின் நித்திய ராஜ்யம் செல்வதற்கான நேரான மார்க்கம் (பாதை) நன்கு புலப்படும் என்பதில் சந்தேகமில்லை. அதுவல்லாமல், ஊழியர்களோ பூசாரிகளோ கூறுபவற்றை மட்டும் செய்துவிடுவது போதாது. மறுமையின் நித்தியப் பேரின்பம் பெற்று வாழ வாஞ்சிப்போம். செல்ல வேண்டிய வழிமுறைகளைத் தேடிக் கண்டுபிடிப்போம்.

கிறிஸ்தவர்களும் சைவர்களும் புரிந்து பழகுதல்

கிறிஸ்தவர்களும் சைவர்களும் நம் நாட்டில் சேர்ந்து வாழ்கிறோம். நாம் இரண்டல்ல, அடிப்படைக் கொள்கையில் ஒன்றே என்பதைப் புரிந்து வாழ்வோமென்றால் இந்தக்கடைசி காலத்தில் ஆச்சரியமான நிகழ்வுகள் நம் வாழ்விலும், நம் தேசத்திலும் உண்டாகும். நாம் தனித்தனியாகவும் ஒன்று கூடியும் இறைவனிடம் வேண்டுதல் செய்து, முயற்சித்தால் சிறிது காலத்தில் இவையெல்லாம் சாத்தியமாகும். உழைப்போம், ஜெபிப்போம், ஒருவருக்கொருவர் அன்பு கூருவோம். தேவன் நம்மை ஒன்றுபடுத்துவார். அதிசீக்கிரத்தில் மீண்டும் இந்த உலகத்தில் வந்து, உய்வடைந்த அதாவது மீட்கப்பட்ட அவருடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளும்போது, நம் இந்து தேசத்திலிருந்து நாமெல்லாரும் பெருங்கூட்டமாய் அவரோடு செல்வோம்.

அதி : 24

உய்யவந்த இறைவனின் இரண்டாம் வருகை

மீட்கவந்த இறைவன் சொல்லிச் சென்றது

உலக வரலாற்றில் உலகுக்கு வந்து, மனிதரை மீட்ட இறைவன் தம் மக்களுக்குச் சொல்லிச்சென்ற முக்கியமான வாக்குத்தத்தம், 'நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்' என்பதாகும் (*யோவா.14:3*). மனுமக்களை இரத்தம் சிந்தி மீட்டுக்கொண்ட இறைவன் மீண்டும் இந்த உலகுக்கு வருவது, அவர் பெற்றுத்தந்த மீட்பை ஏற்றுக்கொண்டவர்களைப் பரலோகத்தில் சேர்த்துக்கொள்வதற்காகவாகும். இது அவருடைய இரண்டாம் வருகை என்று கூறப்படுகிறது.

காத்திருப்பவர்கள்

உய்யவந்த இறைவனின் உய்வை, அதாவது இரட்சிப்பைப் புறக்கணிக்காமல், விசுவாசத்தால் ஏற்றுக்கொண்டு, அவர் காட்டிய பாதையில், அதாவது அறவழியில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள், திருச்சபையாராக அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் தான் இறைவனின் மணவாட்டி சபை. அந்த மணவாட்டி சபை ஆத்தும மணவாளனாகிய இறைவனின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கிறது. இந்த உலக சிற்றின்பங்களில் சிக்கி, அசுத்தங்களிலும் அருவருப்பு களிலும் பொல்லாங்குகளிலும் ஈடுபட்டு, நல் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாமல், இறைவன் காட்டிய தூய வழியில் நடந்து, செய்துவந்த எல்லா நன்மைகளுக்கும் மறுமையில் பலன் கிடைப்பதற்காக, அவர்கள் எதிர்பார்ப்போடு காத்திருக்கும் காலம் இதுவே.

மரணம் தடைசெய்யாது

உய்வடைந்த மணவாட்டியை அதாவது இரட்சிக்கப்பட்டவர்களை, மரணம் தடைசெய்ய முடியாது. ஏனென்றால், இறைவனின் இரண்டாம்

வருகையின்போது, இரட்சிக்கப்பட்டு மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அதோடு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் மறுரூபமடைந்து, அவர்களோடு சேர்ந்து இறைவனோடு இணைந்து கொள்ளுவார்கள் *(1தெச.4:16,17)*. அதைத் தொடர்ந்து, அவர்கள் இறைவனோடு சேர்ந்து அனுபவிப்பது மகா பேரின்ப வாழ்க்கை ஆகும்.

வருகையின் அடையாளங்கள்

முதலாம் வருகையில், இறைமகன் இயேசுவோடு அவருடைய சீஷர்கள் உலகத்தின் முடிவுக்கும், இரண்டாம் வருகைக்கும் உள்ள அடையாளங்களைக் குறித்துக் கேட்டார்கள். அப்போது இயேசு கூறிய அடையாளங்கள் குறித்து, மத்தேயு 24,25 அதிகாரங்களிலும்; மற்றும் மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களிலும் வாசிக்கிறோம். இவை உலகிலுள்ள சகல மனுமக்களும் அறியவேண்டிய சத்தியங்களாகும்.

இராஜ்யத்தின் சுவிசேஷம்

இறைமகனின் இரண்டாம் வருகை மகா விசேஷமாயிருக்கும். அவர் இராஜாதி இராஜாவாகவும், நீதியுள்ள நியாயாதிபதியாகவும் வந்து, தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார். **இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகம் எங்கிலும் உள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும் என்று இயேசுவே கூறியிருக்கிறார்** *(மத்.24:14)*.

இன்றைய உலக நிகழ்வுகள்

இன்று உலகத்தின் சம்பவங்கள் எல்லாமே, இரண்டாம் வருகையைக் குறித்த அடையாளங்கள் அனைத்தும், வேகமாக நிறைவேறிக்கொண்டிருப்பதைக் காண்பிக்கின்றன. பாரம் கொண்ட தேவ ஊழியர்கள் அனைவரும் உலக இரட்சகரின் இரண்டாம் வருகையைக் குறித்துப் போதித்து, ஜனங்களை ஆயத்தப்படுத்துகிறார்கள். தற்கால T.V.-க்களில், இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து அதிகமாய்ப் பிரசுரம்பண்ணுவது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்ல, இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த இராஜ்யத்தின் விசேஷத்தைத் துண்டுப் பிரதிகளாக அனேக மொழிகளில் அச்சிட்டு, இலவசமாக எல்லா

தேசங்களுக்கும் வினியோகம் செய்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

வருகைக்குச் சான்று

உலக ராஜ்யங்களின் முடிவில், இயேசு தமது ராஜ்யத்தை அமைக்கப் போவதைக் குறித்து, ஒரு தரிசனம் (சிலை தரிசனம்) மூலம் தேவனால் கி.மு.604-ல், பாபிலோனியப் பேரரசனான நேபுகாத் நேச்சாருக்கு வெளிப்படுத்தப்பட்டது. தீர்க்கத்தரிசியான தானியேல், அந்தத் தரிசனத்தை விளக்கினார் (*தானி. 2-ம் அதி*). தரிசனம் அப்படியே நிறைவேறி வருவதை வரலாற்றில் பார்க்கிறோம். அதில் இனிமேல் நடைபெறவிருப்பவை, பத்து இராஜ்யங்களின் கூட்டமைப்பிலிருந்து எழும்பப்போகும் உலகத் தலைவனின் (அந்திக்கிறிஸ்துவின்) ஆட்சியும், அதைத் தொடர்ந்து அமைக்கப்படும் இயேசுவின் ஆளுகையும் ஆகும்.

மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில், ஜனங்கள் வாங்கவோ, விற்கவோ செய்ய வேண்டுமானால், அவர்கள் வலது கையிலோ, நெற்றியிலோ அவன் முத்திரையைப் (666) பொறிக்க வேண்டுமென்று கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறியிருப்பது கூடாத காரியம் போல அன்று காணப்பட்டது. ஆனால் இந்நாட்களின், விஞ்ஞான தொழில்நுட்பம் அதை மெய்ப்பித்துவிட்டது. வலது கையிலோ, நெற்றியிலோ முத்திரை (Chip) பொறிக்கத் தொடங்கிவிட்டார்கள். மட்டுமல்ல, அது சீக்கிரத்தில் அரசால் கட்டாயமாக்கப்படவும் போகிறது. இதைச் சிந்திக்கிறவர்கள், இது வருகையைக் குறித்த அறிவியல் முறையிலான சான்றாகக் கருதுகிறார்கள்.

பரவலான சந்திப்புகள்

நம் தேசத்தில், ஆரியர்களாக்கப்பட்டவர்களிலும், பிராமணர் களாக்கப்பட்டவர்களிலும், அடிமைகளாக்கப்பட்டவர்களிலும் பரவலாக அனேக மக்கள் இந்நாட்களில் வெவ்வேறு விதங்களில், தனித்தனியாக தேவனால் சந்திக்கப்பட்டு, இறை இன்பம் பெற்று, மாற்றம் அடைந்து, T.V. மூலமாகவும், நேரடியாகவும் தாங்கள் பெற்றுக்கொண்ட

அனுபவங்களைப் மக்களுக்குத் தெரிவிக்கிறார்கள். அனேகர் இறைப்பணி செய்து, மக்களைப் பாசத்தோடு கடவுளிடம் கொண்டு சேர்க்கிறார்கள். இவர்கள் சாட்சிகளால், அனேகருடைய கண்கள் திறக்கப்படுகிறது. இதுவும் இந்தக் கடைசி காலத்தில் பல்வேறு மக்களை இறைவன் பால் சேர்க்கிறது.

தேவாலயத்தின் சான்று

இறைவனாகிய இயேசுகிறிஸ்து மனிதனாக வந்தபோது, அவர் சென்றிருந்த எருசலேம் தேவாலயம் அவர் கூறியபடி கி.பி.70-ல் முற்றிலும் இடிக்கப்பட்டது. யூதர்கள் உலகத்தின் நாலாதேசங்களிலும் துரத்தியடிக்கப்பாட்டார்கள். அத்தேசத்துக்கு உலக வரைபடத்தில் கூட இடம் காணாமறற்போயிற்று. ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் வருகையின் அடையாளமாகக் கூறப்படும் ஒரு நிகழ்வு என்னவென்றால், அந்திக்கிறிஸ்து எருசலேம் தேவாலயத்தில் தேவன்போல இருக்க முற்படுவதாகும்.

என்ன ஆச்சரியம்! தேசமே இல்லாமறற்போன யூதருக்கு இன்று உலகில் சக்திவாய்ந்த இஸ்ரவேல் தேசம் அமைந்துவிட்டது. இடிக்கப் பட்ட தேவாலயம் கட்டப்படுவதற்கான எல்லா அறிகுறிகளும் இந்நாட்களில் வேகமாக நடந்தேறி வருகிறது. எப்போது வேண்டு மென்றாலும் ஆலயம் கட்டப்படலாம். வேதம் சத்தியமே.

சீக்கிரமாய் கூடலில் சேர்க்க வருகிறார்

ஆத்தும மணவாளனாகிய இறைமகனின் இரண்டாம் வருகையைக் குறித்து, திருமறை கூறுவதாவது:

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" *(வெளி 22:12)*. சத்தியத்தை அறிவோம், சத்தியம் நம்மை விடுதலையாக்கும்.

Bibliography

1. The Reese chronological Bible
2. History of Christianity in India source Materials. M.K. Kuriakose
3. An introduction to church History F. Harangkhuma
4. History of the christian Church - Henry C. Shelddon
5. Church History - John Foster
6. Pentecost and after - M.R. Dehaan. M.D
7. Highlights of Church History - Howard F. Vos
8. After the Apostles - John Foster
9. From Jerusalem to New Delhi - M.F. Gibbs
10. Beginning from Jerusalem - John Foster
11. India in third Millennium - Dr. M. Deivenayakam M.A., Ph.D.,
12. Hindu Religion is the off shoot of St. Thomas Dravidian christianity - Dr. M. Deivanayakam M.A., Ph.D.,
13. Comparitive Religion - Kedar nath Tiwari
14. Asian Religion - Geoffrey Parinder
15. Discovery of India - Pandit Jawaharlal Nehru
16. St. Thomas in India Dr. M. Immanuel
17. Christianity in Hinduism - Dr. M. Deivanayakam M.A., Ph.D.,
18. Love Hindus M. Christopher
19. The Development of Civilization and Religion in India and the influence on the world Society - Dr. Alexander Harris.
20. Bharatheeya Matha Sam graham - Krishnan Kutty
21. Christian Hindu Interaction in Tamil Sangam literature Pr. T. Sam
22. Dravedian lineage, A Social Study Dr. M. Immanuel
23. Thirukkural and the cultural thought Rev. Dr. Arulappa
24. அசல் மனு தரும சாஸ்திரம் (1919 பதிப்பில் உள்ளபடி) - திராவிடர் கழக வெளியீடு
25. சங்கர மடத்துக்கு 108 கேள்விகள் டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.
26. இந்து நாகரீகமா நயவஞ்சகமா? - அம்பேத்கர்
27. இந்துத்துவாவின் பிடியிலிருந்து இந்து மதத்தை விடுவிப்பது எவ்வாறு ? டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.
28. திருநீறா சிலுவையா? டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.
29. சுருதி இலக்கியம் - அறிவர் கங்காதரன்
30. விவிலியம், திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.
31. சங்கர மடத்தோடு போராட வேண்டியது ஏன்? டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.
32. இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு டாக்டர். எம். சுந்தர் யேசுவடியான்

33. மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம் டாக்டர். ம. இராசமாணிக்கனார்

34. தோமா வழி ஆதி இந்திய கிறிஸ்தவம் Dr. W.T. பாசுகரதாஸ் **M.A., Ph.D.**

35. இந்துஸ்தான் டைம்ஸ் Dr. M. சுந்தர் யேசுவடியான்

36. தமிழ் சமயம், தமிழர் வேதம், தமிழகத்து கோயில்கள் - யூ. சுப்பிரமணியன், **I.A.S.**

37. கிறிஸ்தவமும் தமிழும் - மயிலை வெங்கிடசுவாமி

38. சிந்துவெளி தொல்தமிழ் நாகரீகம் - P. இராமநாதன்

39. புத்த சமயம், எம்.ஏ. இரத்தினராஜா

40. திராவிட சிந்தையில் பிள்ளையார் - டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

41. திருக்குறளும், விவிலியமும் - டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

42. திருவள்ளுவர் கிறிஸ்தவரா ? டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

43. ஐந்தவித்தான் யார் ? டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

44. நீத்தார் யார் ? டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

45. வான் எது ? டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

46. சான்றோர் யார் ? டாக்டர். மு. தெய்வநாயகம் **M.A., Ph.D.**

47. இராவணன் சுகாதார களஞ்சியம் - கொ.பா. புட்பராசு

48. இந்தியா தோமா வழி கிறிஸ்தவ நாடே - டாக்டர். தேவகலா **M.A., M.Phil., Ph.D.**

49. குமாரனாகிய இயேசு, திருக்குறள், சிவஞானபோதம், சைவ சித்தாந்தங்களில் எம். கிறிஸ்டோபர்

50. உலகப் பெரு மதங்களில், ஒரு புதையுண்ட வரலாறு M. கிறிஸ்டோபர்

51. இந்துத்துவாவிலிருந்து விடுதலை - எம். கிறிஸ்டோபர்

52. திராவிட சமயம் பத்திரிகை

53. திராவிட இந்தியா ஒரு கிறிஸ்தவ ஆன்மீக நாடு - டாக்டர். எம். சுந்தர் யேசுவடியான்

54. தமிழ் பக்தி இயக்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும் - டாக்டர். தெ. தேவகலா **M.A., M.Phil., Ph.D.**

55. அறுவகை தரிசனங்களும், தமிழ் சமயமும், விவிலிய ஒளியில் டாக்டர். தா. பாசுகரதாசு **M.A., Ph.D.**

56. தமிழ் சித்தர் பாடல்களும், விவிலியமும் - டாக்டர். மோசஸ் மைக்கேல் பாரடே

57. தமிழ் இலக்கியங்களில் மூவொருமை கோட்பாடு - டாக்டர். ஜாண்சன் தங்கையா

58. திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே - பாகம் 1, 2, 3, - எம். கிறிஸ்டோபர்

59. இந்தியாவின் ஆதி கிறிஸ்தவம் - **M.** கிறிஸ்டோபர்.

60. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் - **S.** தாயப்பன்

61. இருபது சித்தர் பாடல்கள் - தொகுப்பு: திரு. சதானந்தம்

62. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக் கோர்வைத் தொகுப்பு: வா. சரவண முத்துப்பிள்ளையார்.

63. திருவாசகம் தெளிவுரை: புலவர் மு. அண்ணாமலை.

64. திருமூலர் திருமந்திரம் - மூலமும், விளக்கவுரையும்: ஞா. மாணிக்கவாசகன்.

65. தமிழ் மருத்துவ தொக்கண முறைகள் - மரு.கொ.பா. புட்பராசு: **E.S.M.P.**

66. சிவவாக்கியம் 1000: தாமரை நூலகம்.

67. திருவுந்தியார் திருவியலூர் உய்யவந்த தேவனார் தெளிவுரை: பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

68. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் தெளிவுரை: பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை.

ஆசிரியரின் வெளியீடுகள் : -

1. பரிசுத்த வேதாகமத் துணை நூல்
2. கர்த்தரின் நாள் (இயேசுவின் இரண்டாம் வருகை)
3. (உலகப் பெருமதங்களில்) ஒரு புதையுண்ட வரலாறு
4. விவிலியப் பாதை (ஏதேன் முதல் எருசலேம் வரை)
5. (Do தெலுங்கு மொழி பெயர்ப்பு)
6. (Do ஹிந்தி மொழி பெயர்ப்பு)
7. இந்துத்துவாவிலிருந்து விடுதலை
8. யுகாயுகங்களில் சாத்தானுடைய போராட்டங்கள்
9. Love Hindus
10. குமாரனாகிய இயேசு
    (விவிலியம், திருக்குறள், சைவ சித்தாங்களில்)
11. திருக்குறள் (அடிப்படை கிறிஸ்தவமே) (பகுதி- I)
12. திருக்குறள் ஓர் கண்ணோட்டம்
13. திருக்குறள் (அடிப்படை கிறிஸ்தவமே) (பகுதி - II & III)
14. இந்தியாவில் ஆதி கிறிஸ்தவம்
15. திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி
16. திருக்குறள் கூறும் சான்றோரின் பண்புகள்
17. திருக்குறள் தெளிவுரை
18. திருக்குறள் காட்டும் மீட்கப்பட்டோர்
19. மணவாட்டித் திருச்சபை
20. கடவுள் ஒருவரே

Copies can be had from :

Diocesan Book Depot Nagercoil. Ph : 04652 - 230395

Diocesan Book Depot Marthandam, Ph: 04651-270565

Shalom Bible Books Nagercoil. Ph. 04652 - 225406.

Word of Christ Green Ways Road, Chennai.

Ph : 044 - 24616161.

Word of Christ Madurai. Ph : 0452 - 2536240.

Word of Christ Pandicheri. Ph : 0413 - 2204122

E.L.S. Head Office

Vepery High Road, Chennai. Ph. 044 - 25323231.

Living Voice Palayamkottai. Ph. 0462 - 2502098.

Bible Book Club Palayamkottai. Ph : 0462 - 2586784.

C.L.S. Chennai. Ph. 044 - 25354296,

C.L.S. Madurai. Ph : 2342405.

E.L.S. Coimbatore, Ph. 0422 - 2494434.

E.L.S. Bangalore, Ph. 080 - 25478833

E.L.S. Vellore, Ph. 0416 - 2224808

Also available in all
Leading Christian Book Stalls in Tamil Nadu.

Author's Address :

M. CHRISTOPHER, M.A., LL.B.
Benaiah, Kallukatty, Kuzhithurai - 629 163
K.K.Dist. TamilNadu, India. Ph : 04651 - 260404

ஆதி கிறிஸ்தவமும் சைவமும் கூறும்



Gems, Gems Complex, Kallukatty, Kuzhithurai - 629 163,
Kanyakumari District. Ph.: 260404